ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx, Hao 4 ag
Tel: 020 8900 2451
தரமான இலங்கை Groceries கடலுணவு வகைகள், மரக்கறி வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்!
Pub.

GB 70 P
ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly
முரசு: 8 25 செப்டெம்பர் 18 - 01 ஒக்டோபர் 2002 முழக்கம்: 402

FORWARD
CONSULTANTS
"Consulting For People"
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants. co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

# வன்னி முக்கிய சந்திப்புக்களுக்கு மீண்டும் தயாராகின்றது!

## நோர்வே அரச குழு, முஸ்லீம் காங்கிரஸ் குழு உட்பட பல தரப்பினையும் தமிழீழத் தேசியத் தலைவர் சந்திப்பார்?

## பாலசிங்கம் மீண்டும் வன்னி பயணமாகின்றார்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்ட தலைவர்களை சந்தித்து பேச்சுக்களைத் தொடர்வதற்காக நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக்குழு வன்னி விரையவுள்ளது. இக்குழுவில் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்கெய்மும் பங்கேற்க உள்ளார். இதேவேளையில் இச்சந்திப்புக்களுக்கு முன்னர் தாய்லாந்து பேச்சுக்கள் தொடர்பான விபரங்களை தமிழீழ தேசியத் தலைவருடனுன் கலந்து ஆலோசிப்பதற்காக விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரர் பாலசிங்கம் வன்னி செல்லவுள்ளார். அவரது போக்குவரத்து ஏற்பாடுகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்படவில்லையாயினும் அடுத்தடுத்த வாரங்களில் பாலசிங்கம் தம்பதியினர் வன்னி செல்வார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் வன்னி செல்வதற்கான பாதை தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. கொழும்பு மற்றும் டில்லி அரசுகளும் இதுபற்றிய விபரங்களை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை.

முஸ்லீம் காங்கிரஸ் உயர்மட்டக் குழுவும் விரைவில் வன்னி சென்று பேச்சுக்களை நடாத்தவுள்ளது. பிரபா-ஹாக்கீம் உடன்பாடு கையொப்பமிட்டதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் தொடர்பாக இரு தரப்புங்கள் கலந்து பேசவுள்ளது.

சிறீலங்கா தரப்பில் அதன் இணக்கத்திற்கான பிரதம மந்திரி செயலக பொறுப்பாளர் பேர்னட் குணதிலக தலைமையிலான குழு வன்னி சென்று பேச்சுக்களை நடாத்தலாம் எனத் தெரியவருகின்றது.

## நாம் பலமான நிலையில் தொடர்ந்து இருக்கவேண்டும்

### கனரக ஆயுதப் பயிற்சிபெற்றோருக்கான நிகழ்வில் தளபதி பதுமன்

(23.09.02)

'நாம் தொடர்ந்து பலமான நிலையில் இருக்கவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யமுடியும். எமது தலைவர் பிரபாகரனை எவராலும் ஏமாற்ற முடியாது. சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாகிவிட்டன என்று நாம் சும்மா இருக்க முடியாது.சிறீலங்கா இராணுவம் தனது படையினருக்கு சமாதான சூழ்நிலையில் பயிற்சிகொடுத்து வருவது போன்றே நாமும் எமது போராளிகளுக்குப் பயிற்சி வழங்கிவருகிறோம்' என திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி பதுமன் திருமலை கட்டளை தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கனரகப் படைப்பிரிவின் அணி வகுப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றிப் பேசும்போது தெரிவித்தார்.



நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசி

(☞ பக்கம் 02)

## 28ம் திகதி கைதிகள் பரிமாற்றம்

(22.09.02)

சிறீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தக் கைதிகள் பரிமாற்றம் எதிர்வரும் 28ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று தெரியவருகிறது. விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 படையினரை விடுவிப்பதற்குப் பதிலாக 23 பேரை சிறீலங்கா அரசு விடுவிக்குமாறு விடுதலைப் புலிகளால் கோரப்பட்டது. அதற்கு அரசு இணங்கிய போதிலும் சட்டப் பிரச்சினைகளை காரணம் காட்டி கைதிகள் பரிமாற்றத்தை ஒத்திவைத்தது.

தற்போது, 13 பேரை விடுவிக்க முன்வந்திருக்கும் சிறீலங்கா அரச தரப்பு, எதிர்வரும் 28ம் திகதி கைதிகள் பரிமாற்றம் நடைபெறவிருப்பதாக தெரிவித்துள்ளது. வன்னியில் நடைபெறும் இக்கைதிகள் பரிமாற்றத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பங்களிப்பு செய்யவுள்ளது. ஓமந்தையில், நடைபெற இருக்கும் கைதிகள் பரிமாற்றத்தில், கடற்படைக் கப்டன் அஜித் போயா கொட உட்பட ஏழு படையினர் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்படுவர்.



தியாகி திலீபனின் 15ம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் ஈழத் தமிழர்கள் வாழும் புலம்பெயர் நாடுகள் எங்கும் நடைபெற்று வருகின்றன. கடந்த 22.09.2002 அன்று சுவிசில் நடைபெற்ற நிகழ்வில் இருந்து...

தமிழினி
பல்பொருள் அங்காடி
195-197 The Broadway,
Southall, Middx Ub1 1LZ
Tel: 020 8606 9900
Fax: 020 8843 9429
TAMILINI Cash and Carry
* எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
**RCS PARIS**
B 399 673 110 (95B01491)
**Directeur de la publication:**
P. Velupillai
**Redacteur:** K. Jeisanthar
**Impression:**
IMPRIMERIES IPS
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
EELAMURASU
Postfach - 240346, 42233 Wuppertal.
Tel: 0173 / 5324511
Fax: 0202 / 7589320

டென்மார்க்: EELA MURASU
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: சுவிஸ் முரசம் புத்தகசாலை
Tellstr.31, 8004 Zürich, Swiss.
Tel: 043/3179600 - 079/6350216
Fax: 043/317 96 01

பிரித்தானியா: தபாற்தொடர்பு
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
பாஸ்கரன்: - Tel: 07811040188
ஆனந்: - Tel: 02085710323

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா: 'EELAMURASU'
Tel: (613) 9457 6347
Fax: (613) 9440 7367
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Tel: (416) 686-3041


குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

*(01ம் பக்கத் தொடர்ச்சி)*

## நாம் பலமான....

யக் கொடியைக் கட்டளைத் தளபதி பதுமன் ஏற்றிவைத்தார். பொது ஈகைச் சுடரை வீரச்சாவடைந்த கரும்புலி மேஜர் தனுர்னின் தந்தையார் ஏற்றிவைத்தார். கனரக ஆயுதப்பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் போராளிகளின் அணிவகுப்பு மரியாதையை மாவட்டக் கட்டளைத் தளபதி பதுமன் ஏற்றுக்கொண்



டார். போராளிகளின் இராணுவ ஒத்திகை இடம்பெற்றது. அதன் பின்னர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினரான மாவட்டக் கட்டளைத் தளபதி பதுமன் தொடர்ந்து பேசுகையில், 'கனரக ஆயுதப்பயிற்சியை முடித்துக் கொண்டு போராளிகள் வெளியேறும் நிகழ்வை நாம் இன்று வெளியரங்கில் நடத்துவதன் காரணம் இன்றைய சமாதான சூழ்நிலையில் மக்கள் கண்டு களிப்பதற்காகவே. சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் சமயத்தில் இடம்பெறும் இந்நிகழ்வை போருக்கான ஆயத்தமாக நினைக்கக் கூடாது. இது ஒரு வழமையான நிகழ்வு.

நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். தமிழ் மக்கள் சகல உரிமைகளும் பெற்றுச் சுபீட்சமாக வாழ்வதையே நாம் விரும்புகின்றோம். தலைவர் பிரபாகரன் தமிழ் மக்களுக்கு விடிவு பெற்றுத் தருவார். தியாகி திலீபனின் பாதையில் எமது விடுதலைப் போராட்டம் முன்னேறிச் செல்ல வேண்டும். இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் திருமலை மாவட்டத்தில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும்.

திருமலை மாவட்டத்தில் 1700-க்கும் அதிகமான போராளிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளனர். அவர்களின் கனவு நனவாக நாம் வழிசமைக்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தலைமையுரையாற்றினார்.

சமாதான சூழ்நிலையில் இப்பயிற்சி தேவை தானா என்று கேட்கலாம். இதுபோன்ற பயிற்சிகளின் மூலம் நாம் பலமான நிலையில் இருப்பதனால் தான் இன்றைய சமாதான சூழ்நிலை ஏற்பட்டது. இன்றைய சமாதான சூழ்நிலை நீடிக்க நாம் இன்னும் பலமாக வேண்டும். இம்மண்ணுக்கு 1479 மாவீரர்களை நாம் தத்தம் செய்துள்ளோம். இம் மாவீரர் கனவு நனவாக எமது பயிற்சி தொடரவேண்டும், இன்னும் இளைஞர்கள் எம்முடன் இணையவேண்டும். நாம் பலமாக இருப்பதால் தான் அரசாங்கம் சிலவிட்டுக் கொடுப்புகளைச் செய்ய முன்வந்துள்ளது. இன்னும் நாம் பலம் பெற மக்களின் உதவி தேவைப்படுகின்றது. இந்நிகழ்வைக் கண்டு களிப்பதோடு மட்டுமன்றி தங்களின் பங்களிப்பையும் மக்கள் எமக்கு வழங்க முன்வரவேண்டும்.

போர்ப் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள், கனரக ஆயுதப் பயிற்சி பெற்று வெளியேறியவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் சிறப்புப் பரிசுகள் ஆகியவற்றை மாவட்டக் கட்டளைத் தளபதி பதுமன் வழங்கினார்.

# ஐந்து நட்சத்திர விடுதியில் அடிதடி காயமடைந்து விமானப்படை அதிகாரி வைத்தியசாலாயில் இருந்து மர்மம்!

(23.09.02)

கொழும்பு ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் நேற்று அதிகாலை இரு குழுவினருக்கு இடையே நடைபெற்ற ஒரு மோதலில் சிறீலங்கா விமானப்படை அதிகாரியும் அவரது சகோரர் ஒருவரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும் இவர்கள் அங்கிருந்து தப்பித்து ஓடியுள்ளதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, குறிப்பிட்ட விடுதியல் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் நடைபெறுவதாக பொலீஸாருக்குத் தகவல் கிடைத்திதையடுத்து அங்கு விரைந்த பொலிசார், விமானப் படை அதிகாரி, அவரது சகோதர் மற்றும் இருவரை கைது செய்தனர். பின்னர் விமானப்படை அதிகாரி என்பதை அடையாளம் கண்டு காயமடைந்த அதிகாரியையும் அவரது சகோதரரையும் வைத்தியசாலையில் அனுமதித்தனர். ஆயினும், அனுமதித்த சில மணிநேரத்தின் பின்னர் அவர்கள் இருவரும் அறிவிக்காமலேயே அங்கிருந்து வெளியேறியிருக்கின்றனர்.

**முத்துமாரி அம்மன் அடியார்களுக்கு**

பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் அடியார்களே 21.09.02 முதல் அம்மன் ஆலயத்தில் புரட்டாதிச்சனி வழிபாடு நடைபெறுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். புரட்டாதிச் சனிவிரத வழிபாட்டிற்குரிய சகல பொருட்களையும் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். அம்மன் ஆலயம் காலை 9.30 முதல் இரவு 8.30 வரை திறந்திருக்கும்.

– நிர்வாகம்

**Cuisinier தேவை**

பிரெஞ்சு கதைக்கக்கூடிய, பலநாட்டு உணவு வகைகள் சமைக்கத் தெரிந்த, அனுபவம் மிக்க Cuisinier தேவை.
வேலை நேரம்: 9 மணி–18 மணி (வாரத்தில் 5 நாள்)
தொடர்புகளுக்கு: 01 46 07 69 40
M.Moya François
Mº: Louis-Blanc (Paris 10e)

**உங்கள் விழாக்களை இசைமழையில் அலங்கரிக்க**

பாரிசின் முன்னணிக் கலைஞர்களோடு 12 ஆண்டுகளைக் கடந்து உங்கள் மனம் கவர்ந்த

**பாரிஸ் இளையநிலா இசைக்குழு**

தொடர்புகட்கு:
இயக்குநர் M.குருநாதன் - 01 48 41 49 90
S. கஜன்-*Free Birds* - 06 09 56 71 81
அருள் Sono - 06 60 65 22 72

Pub.Fr-420

**பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி! உங்கள் பற்களில் பிரச்சினையா?**



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**S.M.T. Tele Movie**



உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் மற்றும் அனைத்து மங்களகரமான நிகழ்வுகளையும் சிறந்த முறையில் வீடியோவில் படம்பிடித்துக் கொள்வதற்கு நீண்ட காலம் படப்பிடிப்பில் அனுபவம் வாய்ந்தவர்களால் நவீன முறையில் கணினி (Computer) மூலம் உங்கள் இல்லங்களின் நிகழ்வுகளைப் பதிவு செய்து தருகின்றார்கள்.
தொடர்புகளுக்கு: 01 34 68 55 31 / 06 13 07 68 30

**Be an AGENT for SHP**

*Eam good money working part-time or full-time*

**if you have:**
- Enthusiasm
- Energy
- Good business connexions in your area
- Accuracy
- Ability to communicate clearly
- English and one or more other languages
- Can turn Contacts into Contracts

**Contact Skill Human power on 0870 330 8176(National rate rumber) immediately. Limited number of vacancies.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் முஸ்லிம்களுக்கு மிரட்டல் விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்

(22.09.02)

மன்னார் மாவட்டத்தில் கடந்த வாரம் முஸ்லிம் மக்களுக்கு மிரட்டல் விடுக்கும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. எல்லாளன் படையணி என்ற பெயரில் விடப்பட்ட இப்பிரசுரங்களில், மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் அனைவரும் எதிர்வரும் 30ம் திகதிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறிவிடவேண்டும், இல்லையேல் மாடுகளை வெட்டுவதைப்போல முஸ்லிம்களின் குழந்தைகளைக் கடத்தி வெட்டுவோம் என்றும் எச்சரிக்கும் துண்டுப் பிரசுரங்கள் மன்னார் மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

எல்லாளன் படையணி என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் இப்பிரசுரங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று சனிக்கிழமை அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றனர். அவ்வறிக்கையில் தீயசக்திகளின் திட்டமிட்ட இப்பிரச்சாரத்தை கருத்திற்கொள்ளாது அதனை முறியடிக்க மக்களை உதவுமாறு, புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, அண்மையில் மன்னார் மாவட்டத்தில் எல்லாளன் படையணி என்ற பெயரில் முஸ்லிம் சகோதரர்கள்பால் வெறுப்பையும், குரோத உணர்வையும் உமிழும் வகையில் தீயசக்திகளால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வன்மையான கண்டனத்தை இத்தால் பதிவுசெய்துகொள்கிறது. அமைதி, சமாதானம் மற்றும் சமூக நல்லிணக்கம் நோக்கி அனைவரும் உழைத்துக்கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் வெறுப்பையும் குரோதத்தையும் உமிழும் இத்தகைய கருத்தினை வெளியிட்டவர்கள் யாராக இருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அவர்களை வன்மையாகக் கண்டிக்கிறது.

வடக்கும் கிழக்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகம் என்ற நிலைப்பாட்டில் எமது விடுதலை இயக்கம் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதனை நாம் இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் வலியுறுத்திக் கொள்ள விரும்புகிறோம். தமிழ், முஸ்லிம் உறவுகளுக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் தீயசக்திகளால் கட்டவிழ்த்து விடப்படும் இத்தகைய விஷமப் பிரசாரங்களைக் கருத்திற்கொள்ளாது இத்தகைய தீயசக்திகளை முறியடிக்கும் வகையில் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் என்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அமெரிக்காவிற்கு எதிராக புத்தளத்தில் போராட்டம்

(22.09.02)

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டுவரும் தாக்குதலைக் கண்டித்து கடந்த 20ம் திகதி வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் புத்தளத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். வெட்டுக்குளம் பள்ளி வாசலுக்கு முன்பாகவும், மன்னார் வீதி புதுப்பள்ளி பள்ளி வாசலுக்கு முன்பாகவுமிருந்து ஆரம்பமான பேரணி 1400 மினாரா நினைவு கோபுரம் வரை இடம்பெற்றது.

பேரணியில் கலந்துகொண்டோர், 'அமெரிக்காவே தாக்குதலை நிறுத்து, அமெரிக்கா மோதி ஈராக் அழிவதா, அமெரிக்காவின் பயமுறுத்தல்களுக்கு இணங்கமாட்டோம்! உலகின் பெரிய பயங்காரவாதி அமெரிக்கா, உலக முஸ்லிம்களே ஒன்றுபடுங்கள்' என்பன போன்ற வாசகங்களையும் கொண்ட பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்திச் சென்றனர். இறுதியில் புத்தளம் காசிமியா அரபுக் கல்லூரி ஆசிரியர் அப்துல்லாஹ் ஆலிம் பிரதான உரையை நிகழ்த்தினார்.

## கிழக்கில் இருந்து வன்னிக்கு புலிகளின் தரைப்பயணம் ஒத்திவைப்பு

(22.09.02)

மட்டக்களப்பில் இருந்து வன்னி பெரு நிலப்பரப்பிற்கு தரைப் பாதையூடான பயணம் அடுத்த வாரத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப காரணங்களாலேயே இந்தப் பயணம் பிற்போடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கிழக்கிலிருந்து கடல் மார்க்கமாக வன்னி செல்வதற்கே விடுதலைப் புலிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் முதலாவது பயணமும் நடைபெற்று முடிந்திருந்தது.

இந்நிலையில் கடல் கொந்தளிப்பு காரணமாக இரண்டாவது கடல் வழிப் பயணம் தாமதமானது. ஆகவே, தரைப்பாதையூடாக இராணுவப் பாதுகாப்புடன் விடுதலைப் புலிகளை வன்னிக்கு அழைத்துச் செல்ல சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு சம்மதம் வழங்கியது. இதனையடுத்து, இன்று ஞாயிறன்று இப்பயணம் ஆரம்பிக்கப்பட இருந்தபோதும் அது ரத்துச் செய்யப்பட்டு எதிர்வரும் 24ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## புலிகள் பேச்சிலிருந்து விலகினால் அமெரிக்கா எமக்கு ஆயுதம் தரும்

(16.09.02)

விடுதலைப் புலிகள் பழைய நிலைப்பாட்டுக்குத் திரும்பிச் செல்ல முடியாது. ஏனென்றால் தொடர்ந்து போரிட அவர்களிடம் பலமோ பணமோ இல்லை. மீண்டும் சண்டைமூள சர்வதேச சமூகமும் அனுமதிக்கப்போவதில்லை. குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகள் பழைய நிலைமை மீண்டும் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்து கொள்ளும். மீண்டும் புலிகள் சண்டைக்குத் திரும்பினால் அந்த நாடுகள் எங்களுக்கு அயுதங்களைத் தரும் என இந்தியாவிற்கான சிறீலங்காத் தூதுவர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தோ - ஆசிய செய்திச் சேவைக்கு அளித்திருக்கும் பேட்டியொன்றிலேயே மங்கள முனசிங்க இவ்வாறு கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுகையில், சிறீலங்கா அரசாங்கமும் நாங்கள் பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறப் போகிறோம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் போரைத் தொடர்வதற்கு நிதியைத் தேடுவதில் அரசாங்கமும் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. அரசாங்கத்திடமும் மனிதவளமும் இல்லை. ஏனென்றால் பல படைவீரர்கள் இராணுவத்தை விட்டுத் தப்பியோடி விட்டார்கள். பேச்சுவார்த்தைகளுக்கான தயாரிப்புகளுக்கு கணிசமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் இறுதிச் சமாதானத்தை நோக்கிய நகர்வை அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கை மனதில் எழுவதற்கு இது காரணமாக இருக்கிறது. இலங்கையின் உள்நாட்டுப் போரின் வரலாற்றிலேயே மிக நீண்டகால போர் நிறுத்தம் - அதாவது 10 மாதகாலம் நடைமுறையில் இருக்கின்றது. முதற் தடவையாக போர் நிறுத்தம் (இருதரப்பினரும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் மூலம்) நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## சமாதான முயற்சிகள் வெற்றிபெற ஒத்துழைக்கத் தயார்

### ஐரோப்பிய ஒன்றியப் பிரமுகர் தெரிவிப்பு

(22.09.02)

இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றிபெற ஐரோப்பிய ஒன்றியம் எப்போதும் ஒத்துழைக்கத் தயாராகவுள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான ஆணையாளர் கிரிஸ் பெடன் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நியூயோர்க் நகரில் சந்தித்து உரையாற்றிய போதே கிரிஸ் பெடன் இதனைத் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்காக பூரண ஒத்துழைப்பினையும் ஆதரவினையும் தருவதாகக் குறிப்பிட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான ஆணையாளர் கிரிஸ் பெடன், சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக இலங்கை மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

செழுமைமிக்க சிறிய இலங்கைக்கு யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளைப் பற்றிதான் பெரிதும் கவலைப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், இலங்கையில் மீண்டும் இயற்கை நிலை மலரவேண்டும் எனப் பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டார். இலங்கைக்கான உதவிகளை வழங்கி சமாதான முயற்சிகளை வெற்றிபெறச்செய்வதற்காக ஒத்துழைக்கும் முகமாக ஐரோப்பிய ஒன்றியம் எவ்வேளையிலும் ஆயத்தமாக இருப்பதாக்வும், இதுவரை ஒரு கோடி 50 லட்சம் யூரோக்களை உதவியாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். சமாதான முன்னெடுப்புக்களை வெற்றிபெறச் செய்ய வேண்டுமாயின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை கூடிய விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டியதனை தாம் ஏற்றுக் கொள்வதாகவும், எதிர்காலத்தில் மேலும் இலங்கைக்கான உதவிகளை வழங்குவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் கிரிஸ் பெடன் குறிப்பிட்டார்.

GLENMORE
PROPERTY SERVICES LTD
Sales | Lettings | Management | Mortgage advice
எல்லாவித மோட்கேஜ்களும் செய்துதரப்படும்
You have tried the rest, now come to the best
810 Harrow Road. Wembley,
Middlesex HAO 3EL
Tel: 020 8904 5040
website: www.glenmoreproperties.co.uk
e-mail: rightmove@glenmoreproperties.co.uk
Fax: 020 8904 5220
your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அதிகாரங்களை ரணில் பயன்படுத்துகிறார்

## புலிகளுக்கு ஆதரவான பத்திரிகைகளைத் தடைசெய்யவேண்டும்

## அம்பாந்தோட்டையில் சந்திரிகா ஆவேசம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் சிலவற்றையே தற்போது பயன்படுத்தி வருகிறார். ஊடகங்களின் ஊடாக அவருடைய அரசு சர்வாதிகாரத்தை நாட்டில் நிலைநாட்டியுள்ளது. அவருக்கு நான் வழங்கிய சில அதிகாரங்களை இப்போது திருப்பிப்பெற்றேயாகவேண்டும்.

புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கவேண்டாம் என்று நான் பிரதமருக்குத் திரும்பத் திரும்பக் கூறியிருந்தேன். ஆனால், அவர் எனக்கு ஒரு மரியாதைக்குக்கூட கூறாமல் புலித் தடையை நீக்கிவிட்டார் என்று சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

தங்காலை நகரமண்டபத்தில் இடம்பெற்ற அம்பாந்தோட்டை சுதந்திரக் கட்சியின் மாவட்ட மாநாட்டில் பேசுகையிலேயே இப்படிக் கூறியுள்ளார். மிகவும் ஆவேசத்துடன் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகள் தமது பொலீஸ் படைக்கு ஆள்சேர்க்க பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். இந்தப் பத்திரிகைகள் தடைசெய்யப்படவேண்டும். அந்த சட்ட விரோத விளம்பரங்களைப் பிரசுரித்தவர்கள் சிறைக்கு அனுப்பப்படவேண்டும்.

எமது கட்சியைப் பலப்படுத்த வேண்டும். அதற்காக அமைச்சு அதிகாரங்கள் சிலவற்றை நான் கையில் எடுக்கவேண்டும். இந்த ஆபத்துக்கள் பற்றியெல்லாம் நான் பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தேன். பாதுகாப்பு அமைச்சரிடம் பதில் கேட்டிருந்தேன். சுமார் 200 தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பினுள் ஊடுருவியிருக்கிறார்கள் என்று நான் கூறியிருந்தேன். அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று கூறினால் தாம் கைதுசெய்வதாகப் பாதுகாப்பு அமைச்சர் எனக்குப் பதிலளித்திருக்கிறார் என்று சந்திரிகா தனது ஆவேசப் பேச்சில் கூறியிருக்கின்றார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தென்னிலங்கை மக்கள் சாவதற்கு அஞ்சவில்லை. நானும் அப்படித்தான். நாங்கள் ஆயுதம் ஏந்த வேண்டுமென்றால் நாம் அதனைச் செய்தாகவேண்டும். முல்லைத்தீவுக் காட்டுக்குள் புலிகள் பெருமளவு ஆயுதங்களை உள்வாங்கி வருகிறார்கள். இந்தத் தகவல் எனக்குத் கிடைத்த அடுத்தநாளே பாதுகாப்புச் சபையைக் கூட்டினேன். ஆனால், அங்கு நான் என்ன பேசப்போகிறேன் என்று தெரிந்துகொண்ட பிரதமர் கூட்டத்துக்கு வரவில்லை. புலிகளின் ஆயுதத் தொகுதிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்ட விடயம் பற்றி பாதுகாப்பு அமைச்சருக்கு நான் கடுமையாக எச்சரித்தேன். என்றும் தனது உரையில் குறிப்பிட்டார்.

# கோப்பாய் வடமராட்சி துயிலும் இல்லங்கள் புனரமைப்பு

(22.09.02)

சிறீலங்கா இராணுவத்தினரால் போர் விதிமுறைகளுக்கு முரணாக மனித நாகரிகமற்ற முறையில் அழிக்கப்பட்ட கோப்பாய் மற்றும் வடமராட்சி எள்ளங்குளம் பகு திகளில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் மக்களின் ஒத்துழைப்போடு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

1995, 1996 காலப்பகுதிகளில் சிறீலங்கா இராணுவம் யாழ் குடாவை ஆக்கிரமித்தபோது முற்றாக அழிந்து சின்னாபின்னமாகியிருந்த இந்த இரு மாவீரர் துயிலும் இல்லங்களும் தீலிபனின் உண்ணாவிரத ஆரம்பதினமான கடந்த 15ம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் 1978 நினைவுக்கற்களும், 966 விதைகுழிகளுமாக மொத்தம் 2944 மாவீரர்களின் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில், 1200 நினைவுக்கற்களும், 457 விதைகுழிகளுமாக மொத்தம் 1657 மாவீரர்களின் நினைவுச்சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திறப்பு விழாவில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் துறை பொறுப்பாளர் தமிழ்விழி, வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத் திறப்பு விழாவில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜா, யாழ் மாவட்ட சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம், போராளி செல்வி கோமதி ஆகியோர் நினைவுரைகளை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பால்வினை நோயாளி யாழில் மரணம்

(22.09.02)

பால்வினை (எய்ட்ஸ்) நோயினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர் மரணமாகியுள்ளார். நீண்டநாள் சிகிச்சை பெற்றுவந்த இவர் கடந்த 3ஆம் திகதி யாழ்.போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 17 நாள்களின் பின் 20ம் திகதி அங்கு உயிரிழந்தார். வடமராட்சி, தும்பளைப் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய இவர் இளமைக் காலத்தில் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு சென்று கப்பலில் பணிபுரிந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

வேண்டிய சிகிச்சை அளித்தும் இவரது காய்ச்சல் குணமடையாததை அடுத்து இவருக்கு செய்யப்பட்ட இரத்தப் பரிசோதனையில் இவர் ஓர் பால்வினை நோயாளி என உறுதிப்படுத்தப்பட்டது. இவர் மரணமானதை அடுத்து இவரது சடலம் பாதுகாப்பான முறையில் அவரது உறவினரிடம் கையளிக்கப்பட்டதுடன், வைத்தியசாயில் இவருக்காகப் பாவிக்கப்பட்ட சகல பொருள்களும் உடனேயே தீயிலிட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதுவரை யாழ். குடாநாட்டில் 15 பேர் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் 10 பேர் உயிரிழந்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடுகுச் செய்திகள்

- வவுனியாவில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை குமார் (45) என்பவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக 21ம் திகதி மீட்கப்பட்டுள்ளார். மேற்படி நபர் விடுதியில் கடந்த சில தினங்களாக தங்கியிருந்தார் என்றும் நேற்றுக் காலை அவரது அறைக் கதவு மூடப்பட்டிருந்ததைக் கண்டு கதவைத் தட்டியபோது உள்ளே இருந்து பதில் எதுவும் வராததையடுத்து கதவு உடைத்துத் திறக்கப்பட்டது. உள்ளே கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் அவர் சடலமாகக் காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மரணத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

☺☺☺

- தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுக்களை சிறீலங்கா இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல வரவேற்றுள்ளார். நாட்டில் அமைதி உருவாக வேண்டும் என்பதற்காகப் புலிகளுக்கு எதிராகப் போரிட்டு வந்தோம். இப்போது, பேச்சுக்களின் மூலம் அமைதி ஏற்பட இருதரப்பினரும் முனைந்துள்ளனர். இப்பேச்சு வெற்றிகரமாக முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இருபதாண்டுகளாக நடைபெறும் இரத்தக் களரிக்கு இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று தெரிவித்திருக்கிறார் பலகல்ல.

☺☺☺

- தமிழகத்திலிருந்து நாடுதிரும்பும் வழியில் கடலில் இறக்கிவிடப்பட்ட வேளை நீந்திக் கரைசேர முயன்ற இருவரில் ஒருவரது சடலம் சனியன்று நயினாதீவுக் கரையில் ஒதுங்கியது. கடந்த 12ம் திகதி தமிழகத்திலிருந்து திரும்பிய ஒன்பது ஈழ அகதிகளை படகு ஓட்டிகள் மன்னார் கடலில் மண்ல் திட்டியில் அநாதரவாக இறக்கிவிட்டனர். அவர்களில் இருவர் அங்கிருந்து நீந்திக் கரையை அடைய முயன்றதும் அவ்வாறு நீந்தியவர்களில் ஒருவர் காணாமற்போனார். காணாமற்போன பாணு (24 - வவுனியா) என்பவரின் சடலமே நயினாதீவுப் பகுதியில் கரை சேர்ந்தது.

☺☺☺

- கடந்த ஆறு வருடங்களாக பொதுமக்கள் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்த கச்சாயிலிருந்து கிளாலிக்குச் செல்லும் வீதி கடந்த வாரம் முதல் திறந்துவிடப்பட்டுள்ளது. இவ்வீதி திறக்கப்பட்டதால் கெற் பேலி, போக்கட்டி, பனங்காடு, விடத்தற்பளை,பாலாவி, உசன், கரம்பகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சாவகச்சேரிக்கு இவ்வீதி வழியாக இலகுவில் பயணம் செய்யக்கூடியதாக உள்ளது. சாவகச்சேரி - கிளாலி வீதி மூடப்பட்டிருந்ததன் காரணமாக இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிருசுவில் சந்திக்கு வந்து அங்கிருந்து கண்டி வீதி வழியாகவே இதுவரை தமது தேவைகளுக்கு சென்று வந்தனர்.

☺☺☺

- சிறீலங்கா இராணுவம் முன்னர் நிலைகொண்டிருந்த மருதங்கேணிப் பிரதேசத்திலிருந்து இதுவரை 1775 வெடிபொருள்களை விடுதலைப் புலிகளின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மீட்டுள்ளனர். மேற்படி பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடி, மிதிவெடிகள் ஆகியவற்றினை அகற்றும் வேலைகள் துரிதமாக்கப்பட்டுள்ளன என்றும் ஒருசில தினங்களுக்குள் இவ்வேலைகள் முற்றாகப் பூர்த்தி அடைந்துவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

☺☺☺

- யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றுகொண்டிருந்த வான் ஒன்றும் பயணிகள் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் தலைசிதறிப் பலியானான். கண்டி வீதியில் - முறிகண்டிப் பகுதியில் - கொக்காவில் 18ம் கட்டையில் - இந்த விபத்து நேர்ந்தது. வானில் பயணம் செய்த நாவாந்துறை வடக்கைச் சேர்ந்த துரை ஸ்ரோபன் (5) என்ற சிறுவனே சம்பவம் நடந்த இடத்தில் உயிரிழந்தான்.

☺☺☺

- அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கும் பிரதமருக்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்த 20ம் திகதி வெள்ளிக்கிழமை நியூயோர்க் நகரிலுள்ள பில் கிளின்டனின் காரியாலயத்தில் நடைபெற்றது.


உங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்

Hayes Food & Wine

OPEN 7 DAYS

HAYES FOOD & WINE

GROCERY & OFF-LICENCE
1100 Uxbridge Road, Hayes,
Middlesex, UB4 8QH

என்றும் உங்கள் மனதில் இருக்க வேண்டிய ஒரே நிறுவனம்

Hayes Food & Wine

7.00 am - 11.00 pm

தொலைபேசி இல : 0208 5732237 கை தொலைபேசி இல : 07786257736 தொலைநகல் : 0208 5732237


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்மடு விவசாயிகள் மீது படையினர் கெடுபிடி விடுதலைப் புலிகள் படை அதிகாரியுடன் சந்திப்பு

(22.09.02)

வவுனியா கல்மடுப் பகுதியில் உள்ள விவசாயிகள் மீது சிறீலங்காப் படையினர் மேற்கொண்டு வரும் கெடுபிடிகள் தொடர்பாக வவுனியா படை அதிகாரிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று சனிக்கிழமை பேச்சுக்கள் இடம்பெற்றன. வவுனியா படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தரவுக்கும் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் எழிலனுக்கும் இடையிலேயே இது தொடர்பாக பேச்சுக்கள் இடம்பெற்றன.

கல்மடுப் பகுதி விவசாயிகள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்துப் பேச்சுக்களில் விரிவாக ஆராயப்பட்டது. கல்மடுப் பகுதியில் உள்ள விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்குச் செல்லும்போது படையினரின் சோதனை நிலையத்தில் அடையாள அட்டையை ஒப்படைக்க வேண்டும் என்ற நடைமுறையை நிறுத்தவேண்டும் என்று எழிலன் கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட படையதிகாரி உடனடியாக இந்த நடைமுறையை அமுலுக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்துள்ளார்.

# திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திக்கு குடாநாடு முழுவதும் மக்கள் அஞ்சலி

(22.09.02)

தியாகி லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி குடாநாடு முழுவதும் மக்கள் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது. கடந்த வியாழக்கிழமை எல்லன்குளம் மாவீரர் இல்லத்தில் இருந்து இந்த ஊர்தி புறப்பட்டு வதிரிச்சந்தி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறைப் பகுதிகளூடாக பருத்தித்துறைக்கு வந்தது. ஊர்தி புறப்படுவதற்கு முன்னர் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா உட்படப் பலர் மலரஞ்சலி செலுத்தினார்கள். வெள்ளிக்கிழமை வலிகாமம் பகுதியூடாக இந்த ஊர்தி சென்றது. நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் இருந்து புறப்பட்டு கோப்பாய், மானிப்பாய், உரும்பிராய் பகுதிகளூடாகச் சென்று புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், மருதனார்மடம், உடுவில், சங்கானை வரை சென்றது. சங்கானையில் அன்று மாலை கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. சனிக்கிழமை சித்தங்கேணி, பண்டத்தரிப்பு, தொட்டிலடி, சண்டிலிப்பாய், தாவடி, கோண்டாவில் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டது. இவ் ஊர்திப் பேரணியில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டதுடன் வீதிகள் தோறும் சோடணைகளை செய்து திலீபனின் உருவப்படத்திற்கு தமது மலர் அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர். எதிர்வரும் வியாழக்கிழமை 26ம் திகதி தியாகி திலீபனின் 15வது ஆண்டு நினைவு தினம் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதேவேளை, கேணல் சங்கரின் முதலாம் ஆண்டு நிகழ்வுகளும் பல பகுதிகளில் நடைபெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# சமாதானப் பேச்சு ஒரு புதிய யுகத்தின் ஆரம்பம்

**- ஐ.நா. அபிவிருத்தி திட்ட பிரதம அதிகாரி -**

(22.09.02)

விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து உரையாடுவதற்கு வாய்ப்புக் கிட்டியமை இலங்கையின் ஒரு புதிய யுகத்தின் ஆரம்பமாகும் என ஐக்கிய நாடுகளின் (ஐ.நா.) அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நிர்வாகி மார்க் பிரவுன் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்கிழமை நியூயோர்க் நகரில் சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தூதுக்குழுவினரை சந்தித்து பேசியபோதே வேளையிலேயே மார்க் பிரவுன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் அப்பயணத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று இலங்கை தேசத்தின் எதிர்காலத்தினை வலுப்படுத்துவதற்கு தம்மால் இயன்ற சகலவித ஒத்துழைப்புக்களையும் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய அவர், சிறீலங்கா அரசு புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வருவதற்கு முடிந்தமையானது இலங்கையின் பாதுகாப்பு நிலைவரம் பற்றி அமெரிக்க முதலீட்டாளர்களிடையே நம்பிக்கை ஏற்படுவதற்கு ஏதுவாக அமையும் எனவும் அந்த நம்பிக்கையினூடாக இலங்கையில் அமெரிக்கா முதலீடு செய்யக் கூடிய பல்வேறு துறைகளை புதிதாக இனம் கண்டு முன்வைக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இச்சந்திப்பில் சிறீலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, வேலைவாய்ப்பு, தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, வெளிவிவகார துணை அலுவல்கள் அமைச்சர் லால் தர்மப்பிரியகமகே, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிஹால் ரொட்ரிகோ, கொள்கை அபிவிருந்தி அமைச்சின் ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம், நியூயோர்க் நகர் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறீலங்காவின் நிரந்தர பிரதிநிதி சி.மகேந்திரன் மற்றும் பிரதி சிறீலங்கா நிரந்தரப் பிரதிநிதி ஆர்.ஜயசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சுப்பிரமணிய சுவாமியின் புலம்பல்

தமிழினத்திற்கு எதிராக குரல் கொடுத்துவரும் தமிழகத்தின், ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்ரமணிய சுவாமி; தமிழினத்திற்கு புலிகள் துரோகம் செய்துவிட்டதாகப் புலம்பியுள்ளார். தாய்லாந்துப் பேச்சுக்களின் போது தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டதாகத் தெரிவித்திருப்பதன் மூலம் விடுதலைப் புலிகள் இலங்கைத் தமிழர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டதாக இவர் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவைப் போன்று இலங்கையிலும் சமஷ்டி ஆட்சி அமைந்தால் மட்டுமே அந்நாட்டுத் தமிழர்களின் பிரச்சினை தீரும். இதற்காகத் தான் தமிழீழம் கோரி இலங்கைத் தமிழர்கள் போராடி வந்தனர். ஆனால், இந்தப் போராட்டத்தை நிறுத்திவிட்டு தற்போது இலங்கை அரசுடன் புலிகள் பேச்சுக்கள் நடத்தச் சென்றதே தவறு. இந்நிலையில் முதற்கட்டப் பேச்சுவார்த்தையின் நிறைவில் தமிழீழம் கேட்டு நாங்கள் போராட வில்லை என்று புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். இதனை இலங்கை தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இவ்வாறு கூறியதன் மூலம் புலிகள் தமிழர்களுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்துவிட்டனர் எனவும் தெரிவித்தார்.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலையை விடுங்கள்

இதோ புதிய திருத்தியமைக்கப்பட்ட வடிவத்தில்
ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு



Naturina®

முடி உதிர்வு, மெல்லிய முடி, இளநரை, முடிவளர்ச்சி நிறுத்தம், முடியின் வெடிப்புத் தன்மை, பளபளப்பற்ற முடி, நகங்கள் விரைவில் உடையும் தன்மை, கணைவெடிப்பு, போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கு மட்டுமல்ல இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வைத் தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக, ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.




இதோ நிவாரணம் தருகின்றது

ஜேர்மனியில் புதிதாக திருத்தியமைக்கப்பட்ட வடிவில்

Naturina® இக்குறைபாடுகளை 3 மாதங்களுக்குத் தொடர்ந்து பாவிப்பதன் மூலம் இக்குறைபாடுகளைத் தவிர்க்கலாம்.

உங்கள் தோலுக்குத் தேவையான உயிர்ச் சத்துக்களையும் கனியுப்புக்களையும் வழங்குகிறது. Naturina®

மேலும் உங்கள் தோல் வரட்சித் தன்மையாகவோ அல்லது எண்ணெய்த்தன்மை கூடியதாகவோ அல்லது மெதுமையான நகங்களுக்கு விரைவில் உடையும் நகங்களுக்கு நிவாரணம் தருகின்றது Naturina® கூட்டுக்குளிகைகள்.

Naturina® வால் நிவாரணம் அடைந்த பலர் தமது பாராட்டுக்களை எமக்குத் தெரிவித்தவண்ணமுள்ளனர்.

புதிய வடிவமைக்கப்பட்ட அதிசக்தி கொண்ட Naturina தயாரிப்புக்கள் தற்போது மலிவு விலையில் விற்பனையாகின்றது.
மூன்று மாதங்களுக்கான பொதி (3 Xshampoo+3X Hairtonic +3X Capsules
ஜேர்மனி 99 யூறோ, சுவிஸ் 166.50 சுவிஸ் பிராங்
பிரித்தானியா -65 பவுண்

விசேட விலைச் சலுகையைத் தவறவிடாதீர்கள்.

எமது புதிய தயாரிப்புக்களைப் பற்றி அறிய விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கான ஆலோசனைகளை வழங்கக் காத்திருக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:

**Intercare Handels GmbH**

Nassauer str 33-37, 59065 Hamm-Germany
Tel: 0049 1805 915910 / Fax: 0049 1805 915920
Internet: www.naturina.de


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீரப்பனிடம் தூதுவராகச் செல்ல கல்யாணி, சுகுமாரன் நிபந்தனை!

கொளத்தூர் மணி மீது தொடரப்பட்டுள்ள பொய் வழக்குகள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டால், சந்தனக் கடத்தல் வீரப்பன் கடத்திச்சென்றுள்ள நாகப்பாவை மீட்க காட்டுக்குள் செல்லத் தயார் என்று மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த பேராசிரியர் கல்யாணி, புதுவை சுகுமாரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். கடலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பழ. நெடுமாறனைச் சந்தித்தபின்னர் கடலூரில் கடந்த 22ம் திகதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி விபரம் வருமாறு:



`கர்நாடக அரசின் அனுமதியுடன் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டுள்ள கொளத்தூர் மணியைச் சந்தித்துப் பேசினோம். தற்போது மணி மீது ஒரு தடா வழக்கு உட்பட 5 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் அனைத்தும் கர்நாடக அதிரடிப் படையினரால் வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்கில் தொடரப்பட்ட பொய் வழக்குகள் ஆகும். கர்நாடகப் பாதுகாப்பு ஆலோசகர் டி.சீனிவாசலு எங்களைச் சந்தித்துப் பேசியபோது நாகப்பாவை மீட்க தாங்கள் இருவரும் காட்டிற்குள் செல்லவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக்கொண்டபடி கர்நாடக உள்துறை அமைச்சரைச் சந்தித்தோம். அப்போது கொளத்தூர் மணி, நிருபர் சிவசுப்பிரமணியன், முத்துக்குமார் ஆகியோர் மீது கர்நாடக அரசு தொடரப்பட்டுள்ள வழக்குகள் குறித்து சி.பி.ஐ விசாரணை அல்லது தேசிய மனித உரிமைகள் ஆணையம் விசாரணைக்கு உத்தரவிடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டோம்.

நாகப்பா மீட்பு விவகாரத்தில் தமிழக அரசு எங்களை அழைக்கவில்லை. மனித நேயம் காரணமாகத்தான் நாகப்பாவை மீட்கத் தயார் என்றோம். ராஜ்குமாரை மீட்க உதவியவர்கள் மீது வழக்குப் போட்டது நம்பிக்கைத் துரோகம் எனவே வழக்கைத் திரும்பப் பெறவேண்டும். பழ. நெடுமாறனை நாங்கள் சந்தித்தபோது நாகப்பாவை மீட்கத் தூதுவராகச் செல்லவேண்டுமானால் சில நிபந்தனைகளை இரு அரசுகளும் ஏற்க முன்வரவேண்டுமென்று அவர் எங்களிடம் கூறினார். அதில், வீரப்பனுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது என்பதும் ஒன்று. ராஜ்குமார் விடுவிக்கப்பட்டபின்னர் எந்த ஒரு சமூக விரோதச் செயலிலும் வீரப்பன் ஈடுபடவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கையை நெடுமாறன் எங்கள் மூலமாகத் தெரிவித்தார். நாகப்பா விடுதலை என்பதோடு நிற்காமல் இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண இரு மாநில முதல்வர்களும் உறுதிகொள்ள வேண்டும்' என்று பழ.நெடுமாறன் தெரிவித்ததாகப் பேராசிரியர் கல்யாணி, சுகுமாரன் ஆகிய இருவரும் தெரிவித்துள்ளனர்.

# கர்நாடக முதல்வருக்கு இந்திய உச்ச நீதிமன்றம் அறிவித்தல்

தமிழ்நாட்டிற்கான காவிரி நதி நீரைத் திறந்துவிட மறுத்த கர்நாடகம் மீது தமிழ்நாடு அரசு தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணையில் கர்நாடக



முதல்வர் கிருஷ்ணாவுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் கடந்த செப்டெம்பர் 23ம் திகதி அறிவித்தல் அனுப்பியுள்ளது. தமிழ்நாடு அரசின் மனு தலைமை நீதிபதி கிர்பால் தலைமையிலான மூவர் கொண்ட குழுமுன்பாக விசாரணைக்கு வந்தது. செப்டெம்பர் 30ம் திகதிக்குள் இந்த மனுமீது பதிலளிக்குமாறு கர்நாடக முதல்வருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம் மற்றும் காவிரி நதிநீர் ஆணைய முடிவுகளைத் தொடர்ந்து மேட்டூர் அணைக்கான நீர்வரத்து குறித்த விபரங்களைத் தாக்கல் செய்யவும் இந்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்திய அரசின் நீர்வளத்துறைச் செயலர், கர்நாடக தலைமைச் செயலர் மற்றும் நீர்வளத்துறைச் செயலர் ஆகியோருக்கும் இந்த வழக்குத் தொடர்பாக அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. காவிரி நதிநீர் தொடர்பாக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் செப்டெம்பர் 3ம் திகதியன்று தமிழ்நாட்டிற்கு 1.25 டி.எம்.சி. நீரைத் தினந்தோறும் திறந்துவிட உத்தரவிட்டது. அடுத்த சில தினங்களில் கூடிய காவிரி நதிநீர் ஆணையமோ 0.8 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டிற்குத் திறந்துவிடக் கூறியது. இந்த நீரை முழுமையாகத் திறந்துவிடாத கர்நாடக அரசு கபினி நீர்த்தேக்கப் பகுதியில் ஒருவர் இறந்ததால் நீரை நிறுத்துவதாக அறிவித்தது. இதையடுத்தே தமிழ்நாடு அரசு நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்துள்ளது.

# அபுசலேமை இந்தியா அனுப்ப போத்துக்கல் நீதிமன்றம் தடை

மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் முக்கிய குற்றவாளியான அபுசலேம் கடந்த 20ம் திகதி போர்த்துக்கல் நாட்டில் சர்வதேசப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். அவரை இந்தியாவிற்கு நாடுகடத்த போர்த்துக்கல் நீதிமன்றம் தடைஉத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால் அவரை இந்தியா கொண்டுவருவதற்கான பதில் நடவடிக்கைகளை இந்திய அரசு தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றி வருகிறது. போலிக் கடவுச் சீட்டுக்கள் வைத்திருந்ததாக அபுசலேம், பிரபல இந்தி திரைப்பட நடிகையும் அபுசலேமின் மனைவியுமான மொனிக்கா பேடி மற்றும் அவரது கூட்டாளியும் நீதிமன்றத்தில் ஆயர்ப்படுத்தப்பட்டனர். மூவரையும் 3 மாதங்களுக்கு நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

தென்னாபிரிக்கா உட்பட பல்வேறு நாடுகளில் பயங்கரவாதத் தொடர்புகளை ஏற்படுத்துவதில் கடந்த 9 ஆண்டுகளாக ஈடுபட்டு வந்துள்ளார் அபுசலேம். அவர் மீது 60 கொலை வழக்குகள் இந்திய நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. அபுசலேமை இந்தியாவிற்குக் கொண்டு வருவது குறித்து மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் தொடர்ந்து



விவாதித்து வருகின்றனர். இவரை இந்தியா கொண்டு வருவதற்காக இன்னும் ஓரிரு நாளில் சி.பி.ஐ அதிகாரிகள் குழு லிஸ்பன் நகருக்குப் புறப்பட்டுச் செல்கிறது என சி.பி.ஐ. இயக்குநர் பி.சி சர்மா ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

அபுசலேமை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கு லிஸ்பன் நீதிமன்றம் விதித்துள்ள தடை இறுதியானதாக இருக்காது என்றும் அவரை இந்தியா கொண்டுவருவதற்கான ராஜதந்திர முயற்சிகள் இன்ரபோல் மற்றும் போர்த்துக்கல் காவல்துறையினர் மூலமாக முயற்சிகளை இந்தியா தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது என்று இந்திய வெறியுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பயங்கரவாதிகளை பரஸ்பரம் நாடுகடத்தும் ஒப்பந்தத்தை இந்தியா போர்த்துக்கல் நாட்டுடன் செய்துகொள்ளவில்லை. எனினும் குற்றவாளி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்ற உறுதிமொழி அளித்து அபுசலேமை இந்தியா கொண்டுவருவதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாக துணைப் பிரதமர் அத்வானி தெரிவித்துள்ளார்.

# `நந்தன்' இதழ் நிறுத்தப்பட்டது

கடந்த 6 ஆண்டுகளாக தமிழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த நந்தன் இதழ பொருளாதாரச் சிக்கல் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. செப்டெம்பர் 16ல் வெளிவந்த பெரியார் சிறப்பிதழே அதன் கடைசி இதழாகும். பல புதிய சிந்தனைகளையும், புரட்சிகரமான கொள்கைகளையும் பகுத்தறிவுக் கொள்கைகளையும் தாங்கிவந்த இவ் இதழ் நிறுத்தப்பட்டது பலருக்கு ஏமாற்றத்தையும், கவலையையும் அளித்துள்ளது.

இவ் இதழின் ஆசிரியரான நா.அருணாச்சலம் அவர்கள் இவ் இதழ் நிறுத்தத்திற்கு பணப் பிரச்சினையே காரணம் எனத் தனது கடைசி இதழில் தெளிவுபடுத்தியுள்ளார். இவ் இதழின் சிறப்பு ஆசிரியராக முன்பு பேராசிரியர் சுபவீ அவர்கள் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத் தமிழர் நலனின் அக்கறையுடன் செயற்பட்ட ஒரு இதழ் நிறுத்தப்பட்டது ஈழத் தமிழருக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

## சிறுகதைப் போட்டி

ஈழமுரசின் நிறுவக ஆசிரியர் கப்டன் கஜனின் ஆறாம் ஆண்டு நினைவாகவும், வளர்ந்து வரும் புகலிட சிறுகதை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் ஈழமுரசு நடாத்தும் சிறுகதைப் போட்டி.

### போட்டிக்கான விதிகள்

- சிறுகதைக்கான மையப்பொருள் புகலிடத்தின் வாழ்வு நிலையை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்.
- கையெழுத்துப் பிரதியாயின் (அளவு A4) 8 பக்கங்களுக்கும், தட்டச்சு பிரதியாயின் 3 பக்கங்களுக்கும் மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
- ஒருவர் எத்தனை சிறுகதைகளும் எழுதி அனுப்பலாம்.
- அனுப்பி வைக்கப்படும் சிறுகதை தனது சொந்த முயற்சி என்பதும், ஏனைய பத்திரிகைகளிலோ, வெளியீடுகளிலோ பிரசுரிக்கப்படவில்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
- 10.10.2002ற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும் சிறுகதைகள் மட்டுமே போட்டியில் இணைத்துக் கொள்ளப்படும்.

ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. தேர்வு செய்யப்படும் முதல் மூன்று சிறுகதைகளுக்கும் பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும். போட்டியில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கப்படும் சிறுகதையாயின் கடித மூலையில் `சிறுகதைப் போட்டி` எனக் குறிப்பிட்டு ஈழமுரசு தலைமைப் பணிமனையின் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# ஆசிரியர் போராட்டம் மீண்டும் தொடங்கியது

கொடுத்த வாக்குறுதிகளை மீறி அரசு செயற்படுவதால் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து கழகத்தின் பொதுச் செயலர் வை. சுவாமிநாதன் கடந்த 22ம் திகதி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அரசுக் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களுடன் இணைக்கும் அரசின் முடிவிற்கு எதிராக அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகம் ஒகஸ்ட் 21 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது. ஆசிரியர் பிரச்சினைபற்றி ஆராய முதல்வர் அறிவித்த மூவர் குழுவை ஏழுபேர் குழுவாக கல்வியமைச்சர் மாற்றியுள்ளார். அக்குழு தன் முடிவுகளை இறுதிசெய்யும் முன்னரே இணைப்புச் சட்டத்தை அமுல்படுத்த அரசு தயாராகிவருவதாகத் தெரிகிறது. அதனால் அரசு கல்லூரிகளை பல்கலைக்கழகங்களுடன் இணைக்கும் சட்டத்தைக்கைவிடவேண்டும். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் கல்லூரிகள் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ்வாறு அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழமுரசு
Eelamurasu Weekly
'உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை'

# தமிழீழ விடுதலைப் போர் பலப்படுத்தப்பட்டுள்ளது!

## சமாதானத்திற்கு யார் தடை?

கடந்த வாரம் தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்கள் சமாதானத்திற்கான அத்திவாரத்தை கட்டியெழுப்பியுள்ளன. பேச்சுக்கள் முன்னேற்றகரமாக முடிவடைந்துள்ளதாக இருதரப்பும் தெரிவித்துள்ள கருத்துக்கள் சமாதானத்தை நேசிக்கும் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதை விரும்பும் மக்கள் புது உற்சாகம் பெற்றிருக்கின்றார்கள். போர் நிலைமை ஓய்ந்து நிலையான அமைதி, சமாதானம் மலரும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

17 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் போரில் பதினேழாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்து இந்த அமைதியான வாழ்விற்கு வழியமைத்து தந்துள்ளனர். விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்து தமிழினத்திற்கு தாங்கள் விரும்பும் தீர்வொன்றைத் திணித்துவிடலாம் என்ற எண்ணத்தில் இருந்த சிங்கள தலைமைகள், புலிகளின் பலத்தின் முன்னால் கண்ட தோல்விகளும் இழப்புக்களும் தான் இந்த சமாதானப் பேச்சுக்கும், இலங்கையில் நிலவிவரும் அமைதிக்கும் காரணம்.

இந்த அமைதியான வாழ்வு தமிழ் மக்களுக்கு மட்டும் கிடைத்துவிடவில்லை. பொருளாதாரம், நிம்மதியான வாழ்வு என்ற... மிகவும் மோசமான நெருக்கடிக்குள் அமிழ்ந்துகொண்டிருந்த சிங்கள மக்களுக்கும் மறுவாழ்வு அளிப்பதாகத்தான் அமைந்திருக்கின்றது. இந்த சமாதானம் நீடித்து நிலைத்திருப்பதும், இடையில் முறிவடைந்து போவதும் சிங்கள மக்களின் கரங்களில் தான் தங்கியுள்ளது. தமிழ் மக்கள் பொறுப்பாக மாட்டார்கள். ஏனெனில் சமாதான முன்னெடுப்புக்களை தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக வரவேற்றுள்ளார்கள். (சந்திரிகாவுடன் இணைந்து இயங்கும் 'தமிழர்' என்று கூறும் டக்ளஸ் தரப்பு கூட இதற்கு எதிராக செயற்பட்டதாக தகவல் இல்லை) ஆனால், சிங்கள தரப்பிலோ இச்சமாதானப் பேச்சுக்களுக்கு ஒரு பகுதி கடுமையான எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றது. இதில் குறிப்பிடக்கூடிய விடயமாக அந்நாட்டின் ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுக்களை வரவேற்பதாக ஒருபுறம் கூறிக்கொண்டு மறுபக்கம் அதனை கடுமையாக விமர்சித்து வருகின்றார் என்பது தான். இவரது கருத்துக்கள் சமாதானத்தை முறியடிக்கும் விதமாகவே அமைந்து வருகின்றன. சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் இனக்குரோதத்தை வளர்க்கும் விதமாக இவரது அண்மைக்கால உரைகள் அமைந்துள்ளன. அத்துடன் ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற சிங்கள இனவாத சக்திகள் ஒன்றுதிரண்டு இப்பேச்சுக்களை முறியடிக்கும் விதத்திலும், இனக்குரோதத்தை வளர்க்கும் செயற்பாடுகளிலும் முனைப்பாக ஈடுபட்டுள்ளன. இந்த எதிர்ப்புக்களில் இருந்து தப்பித்தே சமாதானக் கட்டடம் எழுப்பப்பட வேண்டும்.

'சமாதானப் பேச்சுவார்த்தை தொடருவதற்கு புரிந்துணர்வுள்ள நெருக்கமான உறவு என்பது அவசியம்' என கடந்தவாரம் தாய்லாந்தில் பத்திரிகையாளர்களுக்கு பதில் அளிக்கையில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்து, பேச்சுக்களில் கலந்துகொண்ட இரு பகுதியினருக்கும் என்றபோதும் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வை கட்டியெழுப்ப சிங்களத் தலைமைகள் தவறும் பட்சத்தில், இலங்கைத் தீவில் நிரந்தரமான ஒரு அமைதியை அல்லது சமாதானத்தை கட்டியெழுப்புவதென்பது சாத்தியமாகாத விடயமாகவே இருக்கும். இதனை தென் பகுதி வாழ் மக்கள் புரிந்துகொண்டு இவ்வாறான விரோத சக்திகளை அடையாளம் கண்டு ஒதுக்க தவறும் பட்சத்தில், சமாதானம் மீண்டும் கானல் நீராகவே போய்விடும் நிலை தவிர்க்க முடியாததாகிவிடும்.

தாய். பேச்சுக்களின் இறுதிநாள் நிகழ்வின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் பாலசிங்கம் அவர்கள் வெளியிட்ட சில நுட்பமான விடயங்களை உலகளாவிய ஊடகங்கள் தமது விபரணங்களுடன் மற்றுமொரு கோணத்தில் வெளியிட்டு அரங்கை பரபரப்பாக்கியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழம் என்னும் கோரிக்கையை கைவிட்டுவிட்டனர் அல்லது கிடப்பில் போட்டுவிட்டனர் என்கின்ற செய்தியே உலக ஊடக அரங்கை நிரப்பியது.

உண்மையில் புலிகள் அத்தகைய வாக்குறுதியை வழங்கினார்களா?.

இல்லை.

## பார்வை

எதனால் இத்தகைய கருத்து பரபரப்பாக்கப்பட்டது?

நாங்கள் பிரிவினை என்கின்ற கோணத்தில் விடயங்களை அணுகவில்லை தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்கின்ற அடிப்படையிலேயே இயங்குகின்றோம் என பாலசிங்கம் அவர்கள் வெளியிட்ட கருத்தையே ஊடகங்கள் திசைதிருப்பியுள்ளன.

* * *

ராஜதந்திர நோக்கில் புலிகள் தாய். பேச்சுக்களின் மூலம் நிறைய சாதித்துள்ளனர். தமிழ் மக்களின் போராட்டம் அடிப்படையில் உலகின் தலையாய பிரச்சினைகள் என வல்லவர்களால் குறிக்கப்படும் பயங்கரவாதம் என விபரிக்கப்படும் சகதிக்குள் வீழ்த்தப்படாது பாதுகாக்கப்படுவதற்கும், அங்கீகரிக்கப்படுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. உலக சமூகத்தின் முழுமையான ஆதரவைப் பெற்றதன் மூலம் தமிழர்களின் குரல் மூலைக்குள் தள்ளப்படும் ஆபத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது. புலிகள் இயக்கத்தின் தேசிய தலைமைப் பாத்திரத்தை அங்கீகரித்தன் மூலம் எதிர்காலத்தில் புலிகளின் பேச்சுரிமைக்கான எல்லைகளை விரிவாக்கியுள்ளது. பொருண்மிய விடயங்களில் புலிகள் நியமிக்கும் பிரதிநிதிகள் அடங்கிய செயலணி நேரடியான பங்கை வகிக்கவிருப்பதால் தொடர்ச்சியான சர்வதேச பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் புலிகள் பங்கேற்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

மேற்கூறிய வாய்ப்புக்களுடன், தென்னாசியப் பிராந்தியத்தில் இடம்பெறும் மறைமுகமான பலப் பரீட்சையினை ஓரத்தில் இருந்து பார்க்கும் சந்தர்ப்பத்தையும் புலிகளும், தமிழர்களும் பெற்றுள்ளனர். தமிழர்கள் தூண்டிவிட்டு அல்லது தமிழர்களின் இரத்தத்தில் எழுதப்படும் வரலாற்றை தமது பிராந்திய - உலக பலப்பரீட்சைகளுக்காகப் பயன்படுத்தும் ஒநாய் அரசியலில் ஈடுபட்ட தரப்பினர்கள் இனி நேரடியாகவே விவகாரங்களிற்குள் புகவேண்டும். அதாவது, புலிகள் இந்த இணக்க முயற்சிகளுக் கான விவகாரத்தில் நேரடியாக முரண்பட்டு மீளப் போரை ஆரம்பித்தால் அது சில நாடுகளின் அரசியல் - வெளிவிவகார நலன்களைப் பாதுகாத்திருக்கும். மாறாக, இணக்கப் போக்கின் ஊடாக தமது அரசியல் நலன்களைப் பாதுகாத்து, தமது இலக்கைப் புலிகள் பலப்படுத்துவது குறுங்காலத்தில் சில தரப்புக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கும். இனி தமது காய்களை நகர்த்த தமிழர்களின் உதவியை அவர்கள் எதிர்பார்க்க முடியாது. (தென்னாசியாவில் அதிகரிக்கும் அமெரிக்கத் தலையீடு, இந்தியாவின் கையறுநிலை, சீனாவின் அச்சம் என்பனவற்றின் பின்னணியில் இதனை வாசிக்கவும்.)

* * *

புலிகளுக்கான அல்லது தமிழர்களுக்கான அங்கீகாரம் அல்லது கௌரவம் என்கின்ற சொல் சிங்கள அமைப்பையும், இந்தியாவில் உள்ள புலி எதிர்ப்பு தரப்பினரையும் உறங்கவிடவில்லை என்பதை தாய். பேச்சுக்களுக்குப் பின்னான விடயங்கள் புலப்படுத்துகின்றன. இந்தியாவின் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் கான்சில் சிபால் அவர்கள், புலிகளின் நிலைப்பாட்டிற்கு இரு முரண்பட்ட விளக்கங்கள் உள்ளன என ஊடகங்கள் முன் பகிரங்கமாகவே கவலைப்பட்டார். புலிகள் தமிழீழத்தை கைவிட்டுவிட்டதாக கூறியுள்ளது பற்றிய கேள்விக்குப் பதிலளித்த அவர், புலிகள் அப்படியொன்றும் மாறவில்லை எனச் சில ஆய்வாளர்களால் கூறப்படுவதாக அவர் தேவையில்லாமல் சுட்டிக்காட்டினார். முன்பும் புலிகள் இதைத்தான் கூறினார்கள் என்றார். (புலிகள் திம்புவில் சொன்னதைத்தான் இப்போதும் கூறுகின்றார்கள். ஆனால் இம்முறை தமிழர்களுக்குக் கொடுக்கப்பட்ட சமஅந்தஸ்துக் காரணமாக புலிகள் கூறியவை எடுபடுகின்றது என்கின்றார் வேறு ஒரு சர்வதேச ஆய்வாளர்)

ஏன், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிக்கு இந்தக் கவலை?.

1. புலிகளுக்குக் கிட்டும் சர்வதேச அந்தஸ்து இவரை கவலைப்படுத்துகின்றதா?.
2. புலிகளும் - சிறிலங்காவும் ஒரு சமதளத்தில் நோர்வேயின் சமரசத்துடன் வெற்றிகரமாகப் பேசுவது இந்தியாவின் முன்னைய அணுகுமுறையை எள்ளிநகையாடுவது போன்றுள்ளது எனக் கவலைப்படுகின்றாரா?.
3. பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்படும் புலிகளின் அரசியல் பண்பும் - ராஜதந்திர முதிர்ச்சியும் இனியும் தமது கைகளிற்குள் தமிழர்களை வைத்து துன்புறுத்த முடியும் என்கின்ற நோக்கத்திற்கு தடையாகவுள்ளதை எண்ணி இவர் கவலைப்படுகின்றாரா?.

எதுவாக இருப்பினும், இந்தியா தனது தமிழீழ மக்கள் தொடர்பான கொள்கையை மீள்பார்வை செய்ய வேண்டும்.

– ராஜா

## முரசு கருத்து

# இரட்டை விசுவாசப் போக்குடைய அதிகாரிகளுக்கு பிரதமர் சூடு!

கடந்த காலங்களில் நாட்டின் பந்தோபஸ்து என்ற பெயரில் பலகோடி ரூபாக்கள் கமிஷன் ஆகச் சூறையாடப்பட்டன. அதே பந்தோபஸ்து, பாதுகாப்பு என்ற பெயரில் - மக்களினதும் நாட்டினதும் பெரும் செலவில் - 21ஆம் நூற்றாண்டின் யுத்தம் ஒன்றை - ஓய்வு பெற்ற லெப்டினன்ட் கேணல் ஒருவர் மூலம் - 18ஆம் நூற்றாண்டு இராணுவ யுக்திகளோடு நடத்தினார்கள். இப்படி உண்மைகளைப் புட்டு வைத்திருப்பவர் வேறுயாருமல்லர் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான்.

இலங்கையில் வைத்து அவர் இதனைக் கூறவில்லை. நியூயோர்க்கில் ஹோட்டல் வோல்ட்ரோப் அஸ்டோரியாவில் தமக்கு அளிக்கப்பட்ட இரவு விருந்துபசாரம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார். அங்குள்ள இலங்கை வர்த்தகப் பிரமுகர்கள் இணைந்து அமைத்துள்ள ஸ்ரீலங்கா வெஸ்ட் என்ற அமைப்பு இந்த விருந்துபசாரத்தை நடத்தியது. நாட்டில் இரட்டை விசுவாசத்துடன் செயற்படும் இராணுவ மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு இந்த உரையின்போது அவர் கடும் எச்சரிக்கையும் விடுத்தார்.

சமாதானத்துக்கான கடைசிச் சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்த அரசு இப்போது முயன்று கொண்டிருக்கிறது. இந்நேரத்தில் இரட்டை விசுவாசத்துடன் நடந்து அந்த முயற்சிகளைக் குழப்ப முயல்பவர்களை நான் பொறுத்துக்கொள்ளமாட்டேன். அரசாங்கத்தின் கொள்கை மற்றும் போக்கைப் பிடிக்காத பொதுத்துறை நிர்வாகிகளும், இராணுவ அதிகாரிகளும் சேவையை விட்டு வெளியேறலாம் அல்லது அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள் இப்படி எச்சரித்தார் பிரதமர் விக்கிரமசிங்க. எதிரணியினருடன் ஐக்கிய முன்னணியினாலும் ஜே.வி.பியினாலும் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு எதிரான திரைமறைவு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஒளிந்திருந்துகொண்டு - மறைவில் - இத்திட்டங்களுக்கு உதவி புரியும், ஒத்துழைக்கும் அரச மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கே பிரதமர் இவ்வாறு கடும் சூடு போட்டதாகக் கருதப்படுகின்றது. சமாதானப் பாதை குண்டும் குழியும், தடைகளும் நிறைந்தது என்பதை நாம் அறிவோம். எனினும் சமாதானம் என்ற இறுதி இலக்கை நாம் எட்டுவோம். அதில் நாம் உறுதியாக உள்ளோம். அதற்கான மக்கள் ஆணையை நான் பெற்றுள்ளேன். அதை நான் நிறைவேற்றியே தீருவேன் என்று பிரதமர் உறுதிபடக் கூறியிருக்கின்றார்.

ஒருபுறம் மிகநெருக்கடியுடன் முன்னகரும் சமாதான முயற்சிகள், மறுபுறம் அதைக் குழப்ப முயலும் பேரினவாதிகளின் தீவிரமும், சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக நிற்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையும். இவற்றுக்கு நடுவில் பிரதமர் ரணில் அல்லாடுவது தெளிவாகத் தோற்றுகின்றது.

இந்நிலையில் தாம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு வேட்டுவைக்கமுயலும் அரச அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள்மீது அவர் கோபப்படுவதில் நியாயமிருக்கத்தான் செய்கிறது. இரட்டை விசுவாச வேடம் போடும் அதிகாரிகள் முழு சமாதான முயற்சிகளுக்குமே குந்தகமாகி விடுகின்றார்கள்.

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு அடிப்படையாக விளங்குவது அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தமும், அதன் அடிப்படையிலான யுத்த நிறுத்தமும்தான்.

இந்த இரண்டும் மீறப்படும் சம்பவங்களுடன் கடற்படையே அதிகம் தொடர்புபட்டிருக்கின்றது என்பது கடந்தகால நிகழ்வுகளின் வெளிப்பாடு. எனவே, இரட்டை விசுவாசம் காட்டும் அதிகாரிகள் மீதான நடவடிக்கையை கடற்படையில் இருந்துதான் பிரதமர் ஆரம்பிக்கவேண்டியிருக்கும் எனச்சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

(நன்றி: உதயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புஷ் கோரிக்கை புடினால் நிராகரிப்பு

## ஐ.நா.வின் தலையீடு மாத்திரமே சாத்தியம் என்பதில் உறுதி

(21.09.02)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தனது ஈராக் யுத்த திட்டத்துக்கு தொடர்ந்தும் ஆதரவு தேடும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார். இதுவரை பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் மாத்திரம் இராணுவத்தை அனுப்புவதில் உடன்பாடு தெரிவித்துள்ளன. இந்நிலையில் ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடீனுடன் நீண்ட தொலைபேசி சம்பாஷனையொன்றினை அவர் மேற்கொண்டார். அதன்போது தாம் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கை எதிர்ப்பதாயும் ஐ.நா.வின் ஆயுத பரிசோதகர்கள் ஈராக்கில் மீண்டும் செயற்படுவதையே தாம் விரும்புவதாயும் ரஷ்ய அதிபர் கூறினார். அடுத்த மாதம் மெக்சிக்கோவில் இடம்பெற உள்ள ஆசிய பசிபிக் பொருளாதாரக் கூட்டுறவு மாநாட்டில் இருவரும் சந்தித்துக்கொள்ள இணங்கினார்கள். வாஷிங்டனில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோவுடன் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார். மேற்படி சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சர் சேர்சேய் இவானோவும் கலந்துகொள்வார்.



இதுவரை காலமும் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஈராக் விதிமுறைகள் மாற்றப்பட்டு புதிய கடுமையான திட்டங்கள் அமுல்படுத்தவேண்டும் என்றும் அமெரிக்கா கோரியுள்ளது. ஆனால் ரஷ்யா அது தேவையற்றதென்றும் இதுவரை அமுல்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளை ஈராக் முழுமையாக செயற்படுத்த வருகின்றது என்று ரஷ்யா உறுதியாகக் கூறியுள்ளது.

# 'அரபாத் முற்றுகை'

## ஐரோப்பா கடுமையான கண்டனம்

இஸ்ரேலிய அரசு கடந்த மூன்று நாட்களாக பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் யாசீர் அரபாத்தின் தலைமையகம் அமைந்துள்ள ரமல்லா பகுதிமேல் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. இராணுவத்தின் கனரக தாங்கிகளும் பார ஊர்திகளும் தலைமையகப் பகுதிக்குள் ஊடுருவிக் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு பல கட்டிடங்களைத் தகர்த்துள்ளன. இஸ்ரேலிய அரசு அரபாத்தின் நடமாட்டத்தை முடக்கி அவரது பாதுகாவலர்களைக் கைதுசெய்ய மேற்கொண்டுள்ள சுற்றிவளைப்பை ஐரோப்பா ஒட்டுமொத்தமாகக் கண்டித்துள்ளது. ஐரோப்பாவின் பிரதான நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் உடனடியாக இந்நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும் என்று கோரியுள்ளது. பிரெஞ்சு வெளியுறவு அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிக்கையொன்று பாலஸ்தீன அதிபரின் அலுவல்கள் உள்ள பகுதியில் நடக்கும் இராணுவ நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாக அது நிறுத்தப்படவேண்டும். பாலஸ்தீன அதிபருக்கோ அல்லது அவரது அதிகாரிகளுக்கோ மனோ ரீதியான பயமுறுத்தல்கள் விடுக்கப்படக்கூடாது என்று கோரியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைகளின் தலைவர் சாவியேர் சொலானா; இஸ்ரேலிய தலைவர்களுடன் தொடர்புகொண்டு பாலஸ்தீன அதிபரின் கட்டிடத் தொகுதிகள் முற்றுகைக்குள்ளாகியுள்ளது குறித்து கவலை தெரிவித்துள்ளார். தற்போதைய நிகழ்வுகள் ஆழ்ந்த கவலையை அளிக்கின்றது. இஸ்ரேலின் பாதுகாப்பு என்பது பேச்சுக்களின் மூலம் கூட்டு ஒத்துழைப்புக் கூட்டுறவு போன்றவைகள் மூலமே சாத்தியமாகும் என்றுள்ளார். 2002ம் ஆண்டின் இறுதிவரை ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை வைத்துக் கொண்டுள்ள டென்மார்க் இஸ்ரேலின் இம்மாதிரியான நடவடிக்கைகள் பாலஸ்தீனக் குண்டுத் தாக்குதல்களை ஒருபோதும் தடுத்து நிறுத்தாது என்று கூறியுள்ளது. அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் பாலஸ்தீன அதிபரின் நடமாட்டத்தை மட்டுப்படுத்துவது பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் சாத்தியப்படாத ஒரு முறையாகும் என்று கூறியுள்ளதுடன் இஸ்ரேல் உடனடியாக முற்றுகையை நிறுத்தி அரபாத் சுயமாக செயற்படுவதற்கு வழியேற்றப்படுத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.

# ஐவரி கோஸ்டில்

## அரச எதிர்ப்பு மோதல்கள் தீவிரம்

(22.09.02)

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்டில் கடந்த வியாழனன்று தொடங்கிய அரச எதிர்ப்பு மோதல்கள் இன்னும் தொடர்கின்றன. முன்னாள் பிரெஞ்சு காலனித்துவ நாடான ஐவரி கோஸ்டில் 99ம் ஆண்டில் சதியொன்றின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றி பின் பதவியிழந்த இராணுவ தளபதியான ரொபேட் கய் மேற்படி அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. அரச படைகளுடன் நடந்த மோதலில் இவர் கொல்லப்பட்டு விட்டார் என்று கூறிய அரச செய்தி நிறுவனம் உள்துறை அமைச்சர் மோதல் ஒன்றில் கொல்லப்பட்டார் என்றும் அறிவித்துள்ளது. மோதல்கள் தொடங்கியபோது ஜனாதிபதி பக்போ நாட்டில் இல்லை என்று சொல்லப்படுகிறது.

நாட்டின் பொருளாதார தலைநகரான அபிஜானில் மோதல்கள் முடிவடைந்துள்ள நிலையில் நாட்டின் வடபகுதியில் பல பகுதிகளில் இன்னமும் மோதல்கள் தொடர்வதாகச் சொல்லப்படுகிறது. இன்று வரை முன்னூறுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். பல நூறுபேர் காயமடைந்துள்ளனர். இப்போது தொடரும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குக் காரணம் என்ன என்பது அறியப்படாதபோதிலும் வெளிநாடு ஒன்றின் தூண்டுதலுடன் ரொபேட் காய் ஆட்சியை கவிழ்த்த இராணுவத்துக்குள் பிளவை ஏற்படுத்தினார் என்றும் பிரிவடைந்த இராணுவ அணிகளே மோதல்களில் ஈடுபட்டு வருகின்றன என்று சொல்லப்படுகிறது. அபிஜானில் வெளிநாட்டு குடியேற்ற வாசிகள் வாழ்ந்து வந்த பல குடியேற்றப் பகுதிகள் இராணுவத்தால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அண்டை நாடான புர்கினாபாசோ தற்போது நடக்கும் மோதல்களுக்கு பின்னணியில் உள்ளது என்ற குற்றச்சாட்டு கிளப்பப்பட்டுள்ளது. அரச எதிர்ப்பு மோதல்களை ஆரம்பித்தவர்கள் குடியேற்றவாதிகளின் வீடுகளில் மறைந்திருந்தவாறே தாக்குதல்களை ஆரம்பித்தனர் என்று அறிவிக்கப்பட்டதாலேயே மேற்படி குடியிருப்புக்கள் தீமூட்டி அழிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சூடான் விமானி அமெரிக்காவில் கைது

## கடத்தலுக்குத் திட்டமிட்டதாக குற்றச்சாட்டு

(22.09.02)

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் பயங்கரவாத எதிர்ப்பு விசேட உளவுத் துறையினர் சூடானின் முன்னாள் விமானப்படை விமானி ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். குடிவரவு விதிகளில் மீறல்களை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அவர் மீது ஐக்கிய அமெரிக்காவில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளாரா என்பதனை அறியும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவருடன் மேலும் பல சூடான் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை என்றும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் மேற்படி நபர்களுக்கும் ஒசாமா பின்லாடெனின் அல்கைடா அமைப்புக்கும் தொடர்புகள் உள்ளனவா என்பது பற்றிய விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ள விமானி ஆப்கானிஸ்தானில் பயிற்சி பெற்றவர் என்றும் விமானம் ஒன்றைக் கடத்தி வெள்ளை மாளிகையின் மேல் மோதும் திட்டத்தை வைத்திருந்தார் என்றும் பிரபல செய்தி ஏடொன்று தெரிவித்துள்ளது. மேற்படி நபர் வாடகைக்கார் சாரதி என்றும் அமெரிக்காவில் சட்டரீதியான ஆவணங்களுடனேயே வாழ்ந்து வருகின்றார் என்றும் கூறியுள்ள அவரது நண்பர்கள் மிகவும் அப்பாவியான சுபாவம் கொண்டவர் விமானத்தைக் கடத்தும் திட்டத்தை வைத்துள்ளார் என்று குற்றம் சுமத்தியுள்ளது அபாண்டமானது என்று கூறியுள்ளனர்.

டென்மார்க் வாழ் அனைத்து தமிழ் மக்களதும் நம்பிக்கையைப் பெற்ற ஒரேயொரு பிரயாண முகவர் நனா ரவல்ஸ்.

Srilankan Airlines இன் டென்மார்க்கின் ஏக விற்பனையாளர்கள் நாமே.

தொடர்புகளுக்கு: நனா ரவல்ஸ்

| DENMARK | LONDON | SRI LANKA | INDIA |
|---|---|---|---|
| Mr.Neilwashington<br>Nanna Rejser<br>Fredensgade 1<br>7400 Herning<br>T.P. 0045-97 21 41 47<br>Mobil. 27 44 36 06<br>Fax 00 45 97 21 42 47<br>nannatravels@mail.dk | Mr.S.Thasan<br>Nanna Travels Ltd<br>14 pinglestone close<br>Westdrayton, Middx<br>UB7 0DL, England<br>T.p: 0044-2088979694<br>Mobil-0044-7789268979<br>nannatravels@hotmail.com | Mr.S.Rajan<br>Nanna travels Ltd<br>S-82 Bristol Street<br>Colombo-1<br>Srilanka<br>T.P.0094-74 71 28 35<br>Fax-00 94-74 71 49 90<br>nannatravels@vsnl.com | Mr.Kevin joseph<br>Nanna travels<br>no. 71 Kasiestate<br>Ashokngar, madras 83<br>T.p.0091 44 48 96 325<br>Mobil -0091 98 41 08 98 35<br>fax-0091 44 48 93 991<br>nannatravels@vsln.com |

Nanna Travels NANNA REJSER

Pub D

Denmark

எமது தற்போதைய விலை விபரங்கள்

Airlanka
Billund-Colombo- 5555+Tax
Copenhagen-Colombo- 5055+Tax
Billund-Madras- 5620+Tax
Copenhagen-Madras- 5240+Tax

Lufthansa
Billund-Madras- 6300+Tax
Billund-Singapore - 5250+Tax

Emirates
Billund-Colombo- 6100+Tax

GulfAir
Billund-colombo- 4995+Tax
Billund-Madras- 4875+Tax

நாம் Airlanka, Kuwait Airways, Gulfair, Singapore Airlines, Emirates, Thai, Maersk போன்றவற்றின் நேரடி முகவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 செப். - 01 ஒக். 2002

முரசு.இதழ்

murasu.ithal

வாழ்வு - இலக்கியம் - பண்பாடு

# காலம் ஆகி வந்த கதை

## காடுகள் சுடுகின்றன

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தான் மிதித்தது நீர்ப்பாம்பு அல்ல; நாகம்தான் எனும் அச்சம் அம்மாவிற்கு வந்தது. கபரக்கொய்யா என்று பிள்ளையை வெருட்டியதுதான். ஆனால் அது முதலை. அம்மாவிற்கு அச்சம் இன்னும் பீடித்தது. பிக்கு `சாது சாது' எனப் பற்றைக்குள் அனுப்பிய நாகபாம்புகள் எல்லாம் படம் எடுத்துத் திரண்டு வந்தன. அம்மா நல்லாப் பயந்தா. அப்பாவிற்கும் அச்சம் இருந்தது. ஆனால் வெளிக்காட்டவில்லை. அம்மா இன்னும் அஞ்சுவா.

அக்காவிற்கு அச்சம் தெரியா வயது. அக்காவை பெரேரா அழைத்துப்போய் இனிப்பு வாங்கிக் குடுத்து உருகிக் குழம்பாய்க் கொதித்துக்கொண்டிருக்கும் தார்ப்பீப்பாவில் போட்டாலும் அக்கா சிரிப்பா. அது கொதிதார் என அக்காவிற்கு உறைக்க முன்னம் அக்கா உறைந்து போய்விடுவா. ஆனால் பெரேரா அப்படிச் செய்பவர் அல்லர். காடையரால் கொதிதார் கொண்டு அம்மாவின் பிறந்த மேனியில் `சிங்கள சிறீ' எழுது முடியாமல் போனது பெரேராவினால்தான். `நங்கி எண்ட தங்கையை முல்லைத்தீவிலை தமிழாக்கள் எரித்துப்போட்டாங்கள்' எண்டு அழுதழுது சொன்னார் பெரேரா. அவர் தங்கை முல்லைத்தீவில் நேர்சாக இருக்கிறா. `ஆனால் எண்ட உயிர் போனாலும் உங்களுக்கு ஒண்டும் நடக்கவிடன்' என்று உறுதிசெய்து நந்தாவை அனுப்பி சொதியும், சோறும் கொண்டுவரச் சொன்னார். நந்தா ஒளித்து சொதி தளம்ப, சோறு கொண்டுவந்தா. அதில் நஞ்சு கலந்திருக்கும் என அம்மா அஞ்சவில்லை. நஞ்செல்லாம் கலக்கும் காலம் அப்போது இல்லை. அமுதம் தராயினும் அன்னமாவது தரும் காலம் அது. ஆனால் பெரேராவின் தயவில் தங்கள் வீட்டில் ஒளித்திருக்கவேண்டி வந்தது அப்பா அம்மாவிற்கு. மொட்டைத்தலை தடவி பிக்கு ஒரு நாளைக்கு காலமையும் பிறகு பின்னேரமுமாக வந்தார். `பயப்பிட ஒன்றுமில்லை' என்றார். என்றாலும் நீர் கொழும்புப்பக்கம் சிறிய சுவாலை வெளிச்சமும், கொழும்புப் பக்கம் பெருஞ்சுவாலை வெளிச்சமும் தெரிய பிக்குவும் யோசிக்கத் தொடங்கினார். `சிறீலங்காவிற்கு என்ன கேடு வந்தது? பற்றி எரிகிறது' என்று நற நறத்தார். அவர் பண்டாரநாயக்காவைத் திட்டினார். ஹாஜியார் வீட்டில் ஒளித்திருப்பதுதான் உசிதம் என்று பலரும் அபிப்பிராயப்பட்டார்கள்.

அந்தக் கலவர காலத்திலும் கொலைகள் விழுகிற நேரத்திலும் உருகுகிற தாரினால் தமிழர் மீது சிங்கள சிறீ எழுதுகிற பொழுதிலும் உம்மா கண்களில் கலக்கம் படர்ந்திருக்க, முகத்தினில் பீதி குடிகொண்டிருக்க, சந்தோசமாக இருந்தார். அவாவின் துணைக்கு அம்மா வந்துவிட்டா. அவாவுக்குச் செல்லம் கொஞ்ச ஒரு குண்டுமோள் வந்துவிட்டாள். அந்தக் குண்டு மோளும் வீடு முழுவதும் வெள்ளைக்கால் இழுத்து சுருண்ட மயிர் நனைத்து, உருண்டு திரிந்தது. எவ்வளவு காலத்திற்குப் பிறகு ஒரு குழந்தை தவழ்கிற வீடாய் இது ஆகிவிட்டது என்று உம்மா திளைத்தார். எவ்வளவு காலத்திற்குப் பிறகு ஒளிவீசுகிற வீடாக இது ஆகிவிட்டது. அந்தக் குண்டுமோளின் கால்கள் எல்லா அறைகளிலும் வீட்டின் எல்லாப் பரப்பிலும், எல்லாத் தரையிலும் படுகிறதாக அமையவேண்டும். அவள் ருசித்துச் சாப்பிட வேண்டும். சுவைபடத்தின்றால் மாம்பழக்கன்னம் விரிய குறுஞ்சிரிப்பு உதிரும். அதற்காக உம்மா இடியப்பம் அவித்தா. பினைய உருளைக்கிழக்கு வேகவைத்தா. அது வே எல்லோருக்கும் ஆகுவதற்காய் மீன் சொதியும், உருளைக்கிழக்குக் குழம்பும், றால் பொரியலும் வைத்தா சாப்பிடத்தான் முடியவில்லை அப்பாவால். சுருட்டுப் பிடித்து ஹாஜியாருடன் குசுகுசுத்துக் கதைத்தார். `எண்ட அல்லாவே' என்று அடிக்கடி பெருமூச்சு விட்டார் ஹாஜியார். வீட்டின் வெளியே இருட்டைத் துழாவினார்.

செய்யாத வைத்தியமில்லை. இருக்காத விரதமில்லை. வேண்டாத தெய்வமில்லை. பண்ணாத நேர்த்தியில்லை. கல்லுவைத்த கோயிலெல்லாம் கையெடுத்துக்கும்பிடா நாளுமில்லை. பூக்கட்டி வைச்சுப்பார்த்து பரியாரியிட்டைப் போச்சினம். சீமையிலையிருந்து வெள்ளைக்கார டாக்குத்தர் வந்தோடனை ஓடிப்போய்க் காட்டிச்சினம். அம்மா களைத்தா. அப்பா தடவினார். அப்பா களைத்தார். அம்மா தடவினா. `மலடி மலடி என்று வையகத்தார் ஏகமுன்னே' என்று பாட்டு கேட்டபோது அம்மா விம்மினா. தன் வயிற்றில் மாறி மாறிக் குத்தினா. யாரும் பிள்ளை பெத்து தூக்கிச் செல்லும் பெண்பார்து ஏங்கினா. `அம்மாளே அம்மாளே...' என்று அம்மாள் கோயிலில் கிடையாய்க் கிடந்தா.

அம்மாள் அதைக் கொடுக்க ஆறுவருசம் ஆயிற்று. ஒரு மொட்டு முகிழ்த்து, வயிற்றில் வளர்ந்து பத்து மாதத்தில் பந்தாய் உருண்டு, வெள்ளையாய், குண்டாய் உருண்டபடி ஒரு பெட்டை வந்தாள். ஆரும்பார்த்து ஆசைகொள்ளும் மாம்பழம் ஆனாள். அந்த உருண்டைக்கு உரு வயது ஆகிவிட்ட நேரம். ஏதும் நடக்குமோ? இது இந்த உலகிற்கு வந்து ஒரு வருசம் போதும் என்று இறைவன் நினைத்தானோ? வந்த ஒரு வருசத்தில் அத்தனை மகிழ்வையும் அள்ளிப் பரப்பிய இந்தச் சிறுமொட்டு ஒரு கணத்தினில் சிதையப் போகிறதோ? அப்பா சுருட்டு சுருட்டாய்க் குடித்தார். ஹாஜியார் அப்பாவின் முதுகைத் தட்டினார். உம்மா அம்மாவின் முகத்தைத் தடவினா.

ஆருக்கும் எதுவும்-அட, நாங்கள்தான் செத்துப்போகட்டும்- இந்தப் பச்சைக் குழந்தைக்கு, பிஞ்சுப் பாலகிக்க ஏதும் நடக்காது அல்லாவே அருள் செய்யமாட்டாயா? அம்மாளே, பித்தளையில் பெண் செய்து, பெண் கையில் விளக்கு வைத்து, உனக்கு ஒளியூட்ட நீ தந்த அருஞ்செல்வமல்லவா? அழகுத் தெய்வமல்லவா? அவளுக்கு யாதொன்றும் நிகழாமல் அனுக்கிரகம் செய்யமாட்டாயா, அம்மாளே!

யாதொன்றும் நிகழவில்லைத்தான். அப்பா அடிக்கடி சுருட்டுக் குடித்தும், அம்மா அடிக்கடி வெத்திலை பாக்குச் சப்பியும் ஹாஜியார், `எண்ட அல்லாவே' என்று அடிக்கடி பெருமூச்சு விட்டும் உம்மா மொட்டாக்கு சரியவிடாமல் சரிவரக் காத்தும் ஏங்கிக்கிடந்ததிலோ, அம்மாளின் அனுக்கிரகத்திலோ பிக்குவின் பிராத்தனையிலோ, அல்லாவின் பெருங்கருணையிலோ, அல்லாது இதற்கும் அப்பால் வேறேதாலுமோ ஒன்றும் நிகழவில்லைத்தான்.

ஒன்றும் நிகழாததற்க உள்ளூர ஏது காரணமோ? வெளிப்பட அம்பிகாபதி அத்தாச்சியும் காரணம். மினுவாங்கொடையில் அவா பெரிய பக்ரறி வைத்திருந்தா. சிங்களவர் போல் தோற்றம் தரும் பெரியசாமி கார் ஓட்ட அப்பாவைத்தேடி வந்துவிட்டா அத்தாச்சி. அக்காவிலை அத்தாச்சிக்குக் கொள்ளை ஆசை. போக எல்லாம் முடிவானது. மிகுந்த பாதுகாப்புடன் பஸ்சில் ஏறினார்கள். `அல்ல அல்லா' என்று அடிக்கடி தொழுகை செய்து ஹாஜியார் பயணம் அனுப்பினார். உம்மா விம்மி விம்மி அழுதா என்று அடுத்த வசனம் வந்தால் இந்தச் சூழலுக்குப் பொருந்தும். ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை. அக்காவையும் தூக்கிக்கொண்டு, அம்மாவையும் இழுத்துக்கொண்டு தனது அறைக்குப் போய் கதவை மூடினா. பிறகு உம்மா என்ன செய்தா என்பதை அம்மா சொல்ல மறுக்கிறா. மந்திரிச்சாபோலை. அம்மாவைக் கட்டி அணைச்சா. அக்காவை இறுக்கி முத்தமிட்டா. அல்லா காப்பாற்றுவார் என்றா. அதை உறுதியா நம்பினா. அதனால் உம்மா அழவில்லை. ஒரு புன்னகை சிந்தி ஒரு கை மொட்டாக்கை சரிய விடாமல் பிடித்திருக்க மறுகை அசைத்தா. முன்னும், பின்னும், ஆர்மி ஜீப் பாதுகாப்புக் கொடுத்துப்போக மூன்று பஸ்கள் போயின. அவை அப்பால் ஐம்பது அறுபது பஸ்கள் ஆயின.

பகலில் பயணம். பொழுதுபட அனுராதபுரம் வந்தது. அப்பா வழியெங்கும் எரிந்த கடைகளை, சிதைந்த கட்டிடங்களைப் பார்த்தார். அம்மா, நேற்று இந்நேரம் என்ன நடந்தது, முந்தநாள் இந்நேரம் என்ன நடந்தது, போன கிழமை இந்நேரம் என்ன நடந்தது, போன மாசம் இந்நேரம் என்ன நடந்தது என்று நிறைவுற்றுப்போன ஒவ்வொரு நேரத்தையும் தன்னுள் சேமிக்கத் தொடங்கினா. ஒவ்வொரு நேரத்துக்கும் ஆனந்தமும் அழகும் இருந்தன. அர்த்தமும் ஆழமும் இருந்தன.

கல்லுலுவவை இனிக்காணமாட்டோம் என்று அம்மாவிற்கு நிச்சயம் தெரிந்தது. ஏங்கவும் செய்தா. உம்மாவைக் காணமாட்டம், நந்தாவைக் காணமாட்டம், வாய்க்கால் நீரில் நெளிகிற பூரணை இனி இல்லை. பஞ்சி பாராமல் நிறையத் தேங்காய்ப்பால் விட்டுக் காய்ச்சுகிற மீன் சொதி இனி இல்லை. மாசிக் கருவாட்டுச் சம்பல் இல்லை, குண்டுப் பெட்டை குதூகலிக்கும் பொழுதும் இனி இல்லை.

இரவுக்கு ஒரு குளக்கட்டில் பஸ்கள் நின்றன. சுற்றிவர இருள்தான் இருந்தது. இருளுக்கும் எந்த இரக்கமும் இல்லை. `சளங், சளங்' என்று குளத்தின் தண்ணீர் சத்தம் போட்டது. முதலை வாயைப் பிளக்கிறதா, வாலால் அடிக்கிறதா? எதுவும் தெரியவில்லை. முதலை கரைக்கு வருமோ? குளக்கட்டில் ஏறுமோ? குழந்தையைப் பிடித்து இழுக்குமோ? அனுராதபுரத்தின் முதலைகள் பசியோடு அலைகின்றன. அம்பாரம் நுளம்புகள் அக்காவைக் குத்தி குத்தி இரத்தம் உறுஞ்சின. கையில் கொண்டு வந்திருந்த பேப்பரால் அப்பா விசுக்கினார். அப்பாவிற்குக் கையுளைய அம்மா விசுக்கினா. அம்மாவிற்குக் கையுளைய அப்பா விசுக்கினார்... `துலைவாங்கள் இதுக்கை ஏன் கொண்டு வந்து வைச்சிருக்கிறாங்களோ தெரியேல்லை' அம்மா புறுபுறுத்தா. `சத்தம் போடாமல் பேசாமல் இரும்' அப்பா அதட்டினார். சளசளக்கிற சனத்தை பொலிஸ் அதட்டியது. குழந்தைகளின் அழுகுரலை ஆரினாலும் அடக்க முடியவில்லை. அக்கா அழவில்லை. ஆழ்ந்து உறங்கினாள் அந்தப் பெண். அனுராதபுரத்தின் இரவு மிக வெக்கையாக இருந்தது.

`சத்தம் போடாதையுங்கோ. சத்தம் போட்டு உங்களைக் காட்டிக்குடுக்காதையுங்கோ. அனுராதபுரம் ரவுனுக்கை பெரிய குழப்பம் நடக்குது. அதுதான் இதிலை நிப்பாட்டினாங்கள். ஆர்மிக்கு அறிவிச்சிருக்கு. ஆர்மி வருமட்டும் நாங்கள் இதிலை நிக்கிறது எவைக்கும் தெரியக்கூடாது. சத்தம் போட்டுக் காட்டிக் குடுக்காதையுங்கோ' இன்ஸ்பெக்ரர் கதிர்காமர் தெளிவாகச் சொன்னார்.

சத்தம் வெகுவாக அடங்கியது. குழந்தையின் அழுகுரல் இடையிட்டுக் கேட்டது. மெல்லிய குரலில் `ஓ... ராராரோ... என்று தாலாட்டு வந்தது. அனுராதபுரம் சந்தி தாண்டி மதவாச்சி ஏறி வவுனியா போக வேண்டும். வவுனியா எங்கள் தேசம். பிறகு எவன் எங்களை என்ன செய்துவிட முடியும்? ஆனால் அதற்கிடையில் குரும்பை வெட்டுகிற கத்திகள் வைத்திருக்கிறாங்கள்-தமிழர் தலைகள் வெட்டுவதற்கு.

தமிழர் இராசதானியாக இருந்து பிறகு சிங்களவர் இராசதானியாக மாறிய அனுராதபுரம் தமிழர்களைக் கொல்வதில், தமிழர் சொத்து அழிப்பதில் முன்னுக்கு நிற்கிறது. இப்போது தமிழ்க் கடைகள் எரிக்கப்பட்டு விட்டன. அதனால் சுவாலை தெரியவில்லை. காங்கைகளின் வெக்கை வீசுகிறது. அங்குள்ள தமிழர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள். அதனால் கதறல் கேட்கவில்லை. பிணங்களினதும் நிணங்களினதும் மணம் வீசுகிறது. ஆயினும் சிங்கத்தின் பசி அடங்கவில்லை. வாயை ஆவென்று வைத்தபடி நிணம் புசிக்க சிங்கங்கள் அலைகின்றன. இன்ஸ்பெக்ரர் கதிர்காமருக்கு அதுதான் யோசனையாக இருந்தது.

(தொடரும்)

இரவி. அருணாசலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# இயல்புநிலை திரும்பாதவர்கள்



நாளைக்குப் பௌர்ணமிதினம். நிலவு பளபளத்துக் கொண்டிருந்தது. சினிமாப்பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி நான் சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தேன். எங்கேயோ இரவுச் செய்தி வானொலியில் கேட்டுக் கொண்டிருந்தது. தூரத்தே சிறியனின் சுவையகத்தில் மின்னொளி தெருவரை பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

முன்பென்றால் இந்த நேரம் தெருவில் யாருமே நடமாட முடியாது. வீடுகளில் மின்னொளி பாவிக்க முடியாது. ஆயுத்துடன் வீதிகளில் இராணுவத்தினர் நடமாடுவார்கள். தெருவைத் தேய்த்துக்கொண்டு இராணுவ வாகனங்கள் மட்டும் ஓடும். என்னை விலத்திக்கொண்டு மோட்டார் சைக்கிள்கள் பறக்கின்றன. எதிரே ஒளியை உமிழ்ந்துகொண்டு ஏதோ ஒரு வாகனம். இராணுவச் சென்றிகள் கூட இப்போது இல்லை. நான் வீட்டுக்குத் திரும்ப ஒரு நிமிடம் தாமதித்தாலும் முன்பு அம்மா பதறிப்போவாள். இப்படித்தான் முன்பு ஒருதடவை ஏதோ அவசரத்தில் அடையாள அட்டையை வீட்டில் விட்டு விட்டுப் போய்விட்டேன். சந்தியில் இருந்த சென்றிப் பொயின்ரில்- இராணுவத்தினர் அடையாள அட்டையைக் கேட்டபோது நிலைமை பிசகியது. உள்ளே அழைத்துப்போய், ஏராளமான கேள்விகள் கேட்டு, கன்னத்தில் இரண்டு போட்டு அனுப்பினார்கள். நிச்சயமாக என் கன்னத்தில் அறைந்தவனுக்கு என்னைவிட வயது குறைச்சலாகத்தான் இருக்கும். அக்கணம் ஆத்திரமும் அவமானமும் எழுந்தன. ஆயினும் இயலாமையுடன் வீடுவரத்தான் முடிந்தது. எங்கள் வீட்டுக்கு அண்மையில் இருந்த இரு கடைகளும் திறந்திருந்தன. ஒன்று சின்னமணி அக்காவின் பலசரக்குக் கடை, மற்றையது பிரசாந்தின் வீடியோக்கடை.

பின்னேரம் நானும் தேவகாந்தனும் சிற்றுண்டிச் சாலையில் தேனீர் குடித்தபடி தற்போதைய நிலைமைகள் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தோம்.

'மச்சான்... பாத்தியெடா... என்ன மாதிரி இயல்புநிலை திரும்பியிட்டுதெண்டு..?'

வானத்தில் தெரிந்த நிலவு அவன் முகத்திலும் பளிச்சிட்டது.

'எதை வைச்சுக்கொண்டு அப்படிச் சொல்லுகிறாய் இப்ப..?'

கையில் இருந்த சிகரெட்டை ஒருதரம் உறுஞ்சினேன். சிகரெட் பிடிப்பது எங்கள் பரம்பரையிலேயே இல்லை. ஆனால், கடந்த இரண்டு வருடங்களாக அந்தப் பழக்கம் தவிர்க்க முடியாததாகி விட்டது. அதுவும் இங்கே சிற்றுண்டிச் சாலையில் மட்டும்தான்.

'இரவில் சனம் திரியுது... வாகனங்கள் ஓடுது... கடையள் திறந்திருக்கு... சென்றிப் பொயின்ரில ஆமி நிக்கிறேல்ல... நிண்டாலும் ஐ.சி கேக்கிறேல்லை... '

நான் புன்னகைத்தேன்.

'ஏன் நான் சொல்லுறது பொய்யோ..?'

சின்னவிரல் நகத்தைக் கடித்தபடி அவனைப் பார்த்தேன்...

'சுத்திவளைப்பில்லை... விசாரணை இல்லை... கெடுபிடியள் குறைவுதானே... இயல்பா இருக்கிறம்.. நீ என்ன சொல்லுறாய்..?'

நான் எதுவும் சொல்ல விரும்பாதவனாய் எழுந்தேன். அவ்விடத்திலேயே பிரிந்தோம்.

கடந்த காலத்தின் சில வடுக்களை அசைபோட்டபடி போய்க் கொண்டிருந்தேன். வீட்டினுள் மின் விளக்கு எரிவது தெரிந்தது. அம்மாவும், தம்பியும், தங்கச்சியும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பார்கள். அம்மா இப்போது நன்றாக சினிமாப்படம் பார்ப்பா. எங்கள் வீட்டுக்கு எதிர்வீடு பரஞ்சோதி அக்காவினுடையது. ஒன்பது மணிக்குப் பிறகு அங்கே சனம் நிக்கும். அவ கொமினிக்கேசன் வைத்திருக்கிறா. வெளிநாட்டுக் கோல்கள் இரவில்தான் வரும். அதனால் அக்கம் பக்கத்துப் பெண்கள் இரவில் நடுச்சாமம் கழியும் வரை பரஞ்சோதி அக்காவீட்டில் கூடுவது வழக்கமாகியிருக்கிறது.

இராணுவத்தினரும் சில வேளைகளில் தென்னிலங்கையிலுள்ள தம் குடும்பத்தினருக்கு கோல் எடுக்கப் பரஞ்சோதியக்கா வீட்டுக்கு வருவார்கள். ரெலிபோனில் கதைத்துவிட்டு, கூடிநிற்கிற பெண்களுடன் பகிடிவிட்டுச் சிரித்து விட்டுப் போவர்களாம். இப்படி ஒருநாள் ரெலிபோன் கதைக்கவென்று வந்த இரண்டு ஆமிக்காரர் கூறினார்களாம். தங்களுக்குச் சண்டைபிடிக்க விருப்பமில்லை ஒற்றுமையா வாழத்தான் விருப்பமெண்டு.

ஆருக்குத்தான் சண்டைபிடிக்க விருப்பம். சண்டை வலிய வருகுது போராடுறம்.

வீட்டு வாசலில் யாரோ குந்திக் கொண்டிருப்பது தெரிந்தது. வழமையாக வீடு திரும்பும் நேரத்தைவிட இன்று சற்று அதிகமான நேரம்தான் கடந்துவிட்டது. ஏதாவது ஒரு காரணத்தைத் தேடிப்பிடித்து அம்மாவிடம் கூறமுயன்றபடி வாசலில் இறங்கினேன். கூர்ந்து பார்த்தபோது - இருளில் குந்தியிருந்தது அம்மாவல்ல! அது - அவன்.

அவனை எல்லோருக்கும் தெரியும். அவனுக்கு இருபது வயதிருக்கலாம். விலா எலும்புகள் வெளித்தெரிய, அரும்பு மீசை தாடியுடன் ஊரெங்கும் உலாவுபவன். இரண்டு கைகளின் சுட்டு விரல்களும் அவனுடைய காதுத் துவாரங்களை அடைத்திருக்க அவன் நடப்பான். இப்போது அவனை எனக்கு அடையாளம் தெரிந்தது. அவன் எங்கள் மதிலோரமாய் காதுகளைப் பிடித்தபடியே பதுங்கியிருந்தான். அவன் மனநிலை குழம்பியவன். அவனைப் பார்த்ததும் என்றுமில்லாதளவு துயரம் நெஞ்சுக்குள் பெருகியது. எங்கள் ஊரைச் சேர்ந்தவன்தான். அவனுடைய தகப்பன் தச்சுவேலை. செய்பவர். இந்திய இராணுவம் குண்டு வைத்துத் தகர்த்த எங்கள் வீட்டின் கூரை வேலையை அவர்தான் மீண்டும் செய்து தந்தவர். அவருடன் சிறு பொடியனாய் - எடுபிடியாய் வந்ததைப் பார்த்தேன். பாடசாலையில் எங்கள் தம்பியின் வகுப்பில்தான் படித்துக் கொண்டிருந்தான். தொண்ணூற்றி ஐந்தில் யாழ்ப்பாணம் முழுவதும் பலாலியிலிருந்து ஏவப்பட்ட செல்கள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்த நேரம்.

அவனுடைய வீட்டு முற்றத்திலும் செல் ஒன்று விழுந்து வெடித்தது. தாயும், தங்கையும், அவ்விடத்திலேயே சிதறிச் செத்துவிட, இவனும் இவனுடைய இரண்டு தம்பிகளும், அப்பாவும் மட்டும் பலத்த காயங்களுடன் தப்பினார்கள். தகப்பனுக்கு காலொன்று துடையளவில் துண்டிக்கப்பட்டுவிட, இவன் உடற்காயங்கள் மாறியும் மனநிலை குழும்பிய நிலையில்!

இவனைக்கூட இங்கிருக்கும் இராணுவத்தினர் விட்டு வைக்கவில்லை. இரவில் நடமாடினான் என்று குற்றம் சாட்டி, பிடித்துக் கொண்டுபோய் அடித்துத் துன்புறுத்திய பின் விடுவித்தனர். ஒரு இடத்தில் ஐந்து நிமிடங்கள் கூட இவனால் நிம்மதியாக இருக்க முடியாது. எறிகணை இரையும் சத்தம் எப்பொழுதும் இவனுக்குக் கேட்டுக் கொண்டிருக்கும் போல. யாராவது உணவு கொடுத்தால் கூட அதை அள்ளிச் சாப்பிடுவதற்கு கைகளை எடுக்கமாட்டான். காதுகளைப் பொத்தியபடியே குனிந்து, நாய் சாப்பிடுவதுபோல வாயால் கௌவிச் சாப்பிடுவான். சாப்பிட்ட குறையில், காதுகளைக் கூர்மைப்படுத்தி எதையோ கிரகிப்பவன்போலத் தோற்றம் காட்டிவிட்டு ஓடிவிடுவான்.

நிலவு ஒளியில் நான் அவனைப் பார்த்தேன். நான் வந்ததுகூடத் தெரியாமல் சுவர் அருகே குந்தியிருந்தான். 'சாப்பிட்டியா..?'

'...............'

'சாப்பாடு வேணுமா..?'

'...............'

அவன் இந்த உலகில் இல்லாதவனாய் தெரிந்தான். நான் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே போனேன். மனது மிகவும் சோர்ந்து போயிருந்தது. அம்மா குசினி லைற்றைப் போட்டாள்.

'எனக்குச் சாப்பாடு வேண்டாமம்மா...'

'ஏன் தம்பி... நல்ல இடியப்பமும் பால்சொதியும் கிடக்கு... கொஞ்சமாச் சாப்பிடன்...'

'எனக்குப் பசிக்கேல்லை...'


உடைகளை மாற்றிக்கொண்டு படுக்கையில் சாய்ந்தேன். வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாய் போவது கேட்டது. யாரோ சினிமாப் பாடல் ஒன்றைப் பெரிதாகப் படித்தப்படி சையிக்கிளில் போய்க் கொண்டிருப்பதும் கேட்டது. சிறியனின் சிற்றுண்டிச்சாலையில் கொத்துரொட்டி அடிக்கும்சத்தம் துல்லியமாகக் கேட்டது. அதையும் மீறி எங்கோ வெகு தொலைவில் நாயொன்று குரைத்தது. பெரும்பாலான நாய்களுக்கு இப்போது ஓய்வு. இல்லையென்றால் இரவுகள் அவற்றின் கச்சேரியாகத்தான் இருக்கும். அம்மாவும் ஒரு நாய்வைத்திருந்தாள். லக்கி என்று அதற்குச் செல்லப்பெயர். அதுவும் இப்போது எங்காவது மூலைக்குள் வாலைச் சுருட்டிக் கொண்டு இயல்பாகத் தூங்குமென நினைத்துக் கொண்டேன். இயல்பு என்றதும்... தேவகாந்தன் சொன்னவைகள் நினைவில் வந்தன... கூடவே காதுகளைப் பொத்திக் கொண்டு திரியும் அவனும் நினைவுக்கு வந்தான்...

இயல்புநிலை திரும்பலாம்... ஆனால் இவனும் இவனைப் போன்றவர்களும் இயல்புநிலை திரும்புவார்களா..? என்கின்ற ஏக்கம் என்னுள் வியாபித்தது... எத்தனை எத்தனை இயல்புகள் நிரந்தர இழப்புக்களாகிவிட்டன என்று எண்ணிப் பார்த்தேன் ஏழுவருட கால நீட்சியில், படுகொலை செய்யப்பட்ட ஆத்மாக்களும், இழக்கப்பட்ட உறுப்புகளும், சிந்தப்பட்ட குருதியும், அழிக்கப்பட்ட சொத்துக்களும்... ஆறாமல் என்றுமே சுமந்து நிற்கும் ரணங்களும் ஒரு போதுமே இயல்பு நிலைக்கு மீண்டும் வரப்போவதில்லை என்பதை நான் உணர்ந்தவனாகினேன்.

**ஆதிலட்சுமி சிவகுமார் (வன்னி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் சர்வோதயா அருச்சுனன், செல்வன் நிலன் திசவீரசிங்கம், செல்வி லக்ஷிகா ஸ்ரீ, செல்வன் சிவராசா சேந்தன் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவெனக் குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.



# சிறுவர் முற்றம்

## விடுகதை முற்றம்

### கடந்தவார விடை

1. நதி.
2. கிளி
3. பென்சில்.
4. சீப்பு.
5. தராசு.
6. பாம்பு.

### இவ்வார விடுகதைகள்

1. ஊசி நுழையாத கிணற்றில் ஒரு படி தண்ணீர் அது என்ன?
2. ஓடுவேன், ஒதுங்குவேன் ஒற்றைக்காலில் நிற்பேன் நான் யார்?
3. ஊசிபோல் இருப்பான். ஊரையே எரிப்பான். அவன் யார்?
4. ஊருக்கு நடுவே உயர்ந்திருக்கும். உருவங்கள் பலவும் சுமந்திருக்கும் அது என்ன?
5. எரியும் ஆனால் குளிரும். அது என்ன?
6. எரிவான்; மணப்பான்; உற்சாகம் கொடுப்பான் அவன் யார்?
7. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் யானை நிற்குது அது என்ன?
8. எல்லாத் திசைகளிலும் பயணிக்கும் மண்ணிலும் இல்லை; விண்ணிலும் இல்லை. அது என்ன?

## விடுகதை முற்றம்

### வட்டநிலாவே கிட்டவாரும்

வட்ட வட்ட நிலவே ஏனோ
எட்ட நிற்கிறாய் – நீர்
எட்ட எட்ட நின்று என்ன
புதினம் பார்க்கிறாய்.

பக்கம் வரக் கேட்கும் எம்மை
பார்த்துச் சிரிக்கிறாய் – என்ன
வெட்கத்தாலா முகிலுக்குள்ளே
முகத்தை மறைக்கிறாய்.

பாட்டி உன்னை காட்டிக் காட்டி
அமுதை ஊட்டுறாள் – முகத்தை
காட்டிக் காட்டி நீயோ எம்மை
மகிழ்வில் ஆழ்த்துறாய்.

பால் நிலாவே சின்னப் பாப்பா
பக்கம் வாறீரோ உன்னைப்
போல நாமும் உயர வழிகள்
சொல்லித் தாரீரோ

– வேலணையூர் சுரேஸ் –

## கதை முற்றம்

### வெற்றி

`உலகமே உலகமே! இன்னும் நீ ஏன் உருப்படவில்லை?' என்றான் மனிதன்.

`எல்லாம் உன்னால்தான்!' என்றது உலகம்.

`என்னாலா!'

`ஆம்; உன்னால்தான்! உன்னுடைய பலவீனத்தால் தான்!' என்று அடித்துச் சொல்லிற்று உலகம்.

மனிதன் சிரித்தான்; `ஏன் சிரிக்கிறாய்?' என்று கேட்டது உலகம்.

`உன்னுடைய அறியாமைக்காகத்தான் சிரிக்கிறேன்!' என்றான் மனிதன்.

`என்னுடைய அறியாமைக்காகவா?'

`ஆம், மண்ணை நான் வென்றிருக்கிறேன்; விண்ணை நான் வென்றிருக்கிறேன்; காற்றை நான் வென்றிருக்கிறேன்; நெருப்பை நான் வென்றிருக்கிறேன்; கடவுளையே நான் பல விசயங்களில் வென்றிருக்கிறேன். அப்படியிருக்க என்னை நீ பலவீனன் என்கிறாயே, உன்னுடைய புத்திசாலித் தனத்தை என்னவென்று சொல்ல?' என்றான் மனிதன். உலகம் சிரித்தது; `ஏன் சிரிக்கிறாய்?' என்று கேட்டான் மனிதன்.

`உன்னுடைய அறியாமைக்காகத்தான் சிரிக்கிறேன்!' என்றது உலகம்.

`என்னுடைய அறியாமைக்காகவா!'

`ஆம், எதை வென்று என்ன பிரயோசனம்? உன்னை நீ வெல்லவில்லையே? அதனால்தான் இன்னும் நீ உருப்படாமல் இருக்கிறாய்!' என்றது உலகம்.

## பொன்மொழிகள்

* இரண்டு கெடுதல்களுக்கிடையே எதையொன்றையும் தேர்ந்தெடுக்காதீர்கள். இரண்டு நல்லவற்றுக்கிடையே இரண்டையும் தேர்ந்தெடுங்கள்
– ரயன் எட்வேட் –
* யாரால்தான் அறிவுரை வழங்க முடியாது. அது மலிவானது. அதற்கு விலை எதுவும் கொடுக்கவேண்டியதில்லை.
– றொபேட் பற்றன் –
* மற்றவர்கள் உங்களை புகழ்ந்து பேச வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களா? அப்படியானால் உங்களை நீங்களே புகழ்ந்து கொண்டு வருவதை நிறுத்துங்கள்.
– அயாக்கோ –
* புல் தரையின் மீது நடப்பவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்று அறிவிப்புப் பலகையில் எழுதுவதற்குப் பதிலாக பசுமை நிறைந்த புல்தரையை உருவாக்க எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று எழுதுவது நல்ல பலனைத் தரும்.
– ஜேம்ஸ் ரூசல் –
* நிழலில் அமர்ந்து எவ்வளவு அழகான இடம் என்று கவிதை இயற்றுவதனால் அழகான தோட்டம் உருவாகிவிடப்போவதில்லை
– ரட்யாம் கிப்பிங் –

## சித்திரக்கதை

### ஓயாத அலைகள் - 01 அலை-04



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புலம்பெயர் தலைமுறை தங்கள் மூலவேர்களைத் தேடத் தொடங்கியுள்ளது'

## எனது வாழ்க்கையும் எழுத்தும் – எஸ்.பொ

*(கடந்த 11.08.2002 அன்று, காவ்யா வட்டம் சென்னை ஆனந்த திரையரங்க வளாகத்தில் நடத்திய விழாவின் படைப்பாளி அரங்கத்தில், எழுத்தாளர் எஸ்.பொ. அவர்கள் `எனது வாழ்க்கையும் எழுத்தும்' என்ற தலைப்பில் ஆற்றிய உரையில் புலம்பெயர் மக்கள் தொடர்பான பல விடயங்கள் அடங்கியுள்ளன. எனவே, ஈழமுரசு வாசகர்களுக்காக அதனை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.)*

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

ஒருசாரார் சொல்கிறார்கள் சுரண்டுவோனும் சுரண்டப்படுவோனும் இல்லாத ஒரு சமுதாயத்திலே சமத்துவம் சம்பவிக்கின்றது. இல்லையா ஐயா. அது ஒருவகையான சமத்துவம். இன்னொரு சாரார் சொல்கிறார்கள் ஆணும் பெண்ணும் தங்களை மறந்து அந்த கலவியின் மோனத்திலே இருவரும் இழந்த அந்த நொடிப்பொழுது நேரத்திலே சம்பவிக்கிறது அற்புதமான சமத்துவம் என்று. அங்கே ஆணும் இழந்துவிட்டான், பெண்ணும் இழந்துவிட்டாள் என்று சாரார். இன்னொரு சாரார் இதெல்லாம் பேய்க்கதை ஐய்யா. இந்த ஆன்மா பரமாத்மாவுடன் கலந்து அந்த அந்த அந்த நிலைதான் உண்மையான சமத்துவத்திற்கான நிலை. இந்த நிலைகள் உண்மையாக ஒரு



பரிபூரண விமுக்தியை, விமுக்தி என்ற சொல்லை நான் பயன்படுத்தவது நீங்கள் கட்டுப்படுத்தி வைத்திருக்கக்கூடிய அடிமைத்தனங்களிலிருந்து முழுவதுமே விடுபட்ட நிலைதான் விமுக்தி நிலை. அது நிப்பானாவிற்கு அடுத்த நிலை. நிப்பானா என்பது சல்வேஷன். அதுக்காகத்தான் மனுஷன் வாழுறானாம். அந்த சல்வேஷனை நிதுங்கிய ஒரு நிலைதான் விமுக்கி. இந்த விமுக்தியை அடைவதற்கான சமத்துவ சமரச நிலை. இதைப்பற்றிய ஒரு தேடலாகத்தான் அந்த முறுவல் நாடகத்தை நான் அமைத்தேன். அந்த முறுவல் நாடகத்திலே நான் மற்றவர்களைப்போல நரேட்டர்ஸ் கதை சொல்லிகள். இல்லாவிட்டால் கட்டியக்காரன் அது அது வேணும். ஆனால், நிச்சயமாக இந்த முறுவல் வந்து என்னுடைய நண்பர் பேராசிரியர் ராமானுஜம்தான் அதற்கு முன்னரை தந்திருந்தார். சுய மரபு தேடலாகவும் அது அமைக்கப்பட்டது. அதிலே கமன்டேட்டர்ஸ் அதாவது வந்து விமர்சகர்கள். அந்த விமர்சகர்களுக்கு மூன்று உடைகளைக் கொடுத்துவிட்டேன். பச்சை, நீலம், சிவப்பு. பச்சை இலங்கையில் யுஎன்பி கட்சியை, ரணில் விக்ரமசிங்கே யுஎன்பி, அந்தக் கட்சியினுடைய நிறம் பச்சை. சந்திரிகா அம்மையாருடைய அம்மா ஸ்ரீமாவோவினுடைய புருஷனார் பண்டார நாயகா எல்லோரும் நீலக்கட்சி. மார்க்சியவாதிகளுக்கும், கம்யூனிஷ்டுகளுக்கும் ஆன நிறம் சிவப்பு.

அந்த மூன்று கண்ணாடிகள் மூலமும் இந்த விமுக்தி நடக்கும்பொழுது அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்ற நினைவோட்டங்களை நாடகத்திலே கொண்டுவர முடியுமா என்ற பரிட்சார்த்தம் தான் இந்த முறுவல். ஒரு கட்டத்திலே கொசு நீங்கள் கொசுவென்றா சொல்லுவீர்கள். எங்க ஊர்ல நுளம்பு என்று சொல்லுவோம். மஸ்கிட்டோ அதை அடிப்பார்கள். ஏன் கொசுத்தொல்லை. அந்த நாட்கள்ல கொசுவர்த்திகள் வரவில்லை. ஆனபடியால் கொசுவை அடிக்கிறார்கள். அடித்து அவர்கள் சொல்கிறார்கள் கொசுக்கள் ஒழிக என்று. ஒருத்தன் கேட்கிறான் ஏன் கொசுக்கள் ஒழியவேணும். கொசுக்கள் ஒருநாளும் மனுஷன் ஒழிக என்று சத்தம் போடவில்லை. நீங்கள் என்னத்துக்கு கொசுக்கள் ஒழிக என்று சத்தம் போட வேண்டும். கொசுக்களைக் கொல்றது பாவம், உயிர்க்கொலை, அப்ப இந்த நாட்டிலே மனிஷனை அடித்துக்கொல்லலாமோ, கொல்லலாம். ஏனென்றால் அவன் தமிழ் பேசுறானே. இவ்வாறான உரையாடல்கள் மூலம் கேவலம் கொசுக்களைப்பார்க்க மனிதர்கள் மலிவான உயிர்கள் என்று சிங்கள அரசாங்கம்... அந்த நாடகத்தை நான் பல தடவைகள் கொழும்பிலே மேடையேற்றினேன். அதுமட்டுமல்லாமல், தம்பி காசி ஆனந்தன் நடித்த நாடகம் அவன் எல்லாளனாக நடித்தது. அந்த நாடகத்திலே இலங்கையின் அவதாரப் புருஷன் என்று சொல்லப்பட்ட துட்ட கைமுனுவைப் பெற்றவளான விகாரமா தேவி கற்பு நெறி பிறழ்ந்து ஒரு தமிழ் தளபதியை செட் யூஸ் பண்ணி அந்த வெற்றிபெற்றது என்ற பதிவை மேடையேற்றிக்காட்டினேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், என்னுடைய எழுத்து பயம் அறியாதது. அது இதை எழுதுவதினால் என்ன விளைவுகள் ஏற்படும் என்று நினைத்து அதற்காக வளைத்து அதற்கான இணக்கம் கண்டு வந்ததில்லை. எனவே, நான் பெருமைப்படுகிறேன்.

இந்தக் கவிதையைப் பற்றி ஒன்று இந்த கவிஞர்கள் பலர் இருக்கிறபடியால்... நிற்பாட்டு என்று சொல்லும்போது நிற்பாட்டத் தெரியும். எனக்கு அது தெரியும். சுருக்கவும் தெரியும், நீட்டவும் தெரியும். ஆனால் நீட்டலும், மழித்தலும் எழுத்தில் இல்லை- கவிதை... கவிதை.. கவிதையோடுதானைய்யா; நான் இலக்கியத்துக்கு வந்தேன். அந்தக் கவிதையோடு வந்தபொழுது எனக்கு இலக்கண இலக்கியங்கள் தெரியாது. ஏதோ இந்தப் பாரதி பாடலையும், பாரதிதாசன் பாடலையும் வச்சால், என்னென்ன எதுகை மோனை என்றால் இதுல வரவேணும், இதுல வரவேணும். அவ்வளவுதான். அதுல கவிதை எழுதல நான். எனக்கு அந்த முதல் பாட்டு இன்னும் ஞாபகம்.

`தளிர் பச்சை இலைகளின் நடுவினிலே தலையை ஆட்டும் மல்லிகையே அழிப்பாய் உனது அழகின்பம் அணங்கின் முத்துப் பற்களைப்போல்'


என்பதுதான். அதிலே கவிதை இருக்கோ இல்லையோ தெரியாது. ஒரு இடத்திலே நான் சொல்லிப்போட்டு விட்டுட்டன். அதைத் திரும்ப அழுத்திச் சொல்ல வேணும். என்னுடைய எழுத்து ஊழியத்தை வழிப்படுத்தி நெறிப்படுத்தி அதை புடம் போட்டு எடுக்கச் செய்தது ப. ஜீவானந்தத்தினுடைய உறவு. அவர் இலங்கைக்கு வந்திருந்தது பற்றி டொமினிக் ஜீவா போன்றவர்கள் பல பொய்களை வரலாறாக எழுதியிருக்கிறார்கள்.

(உரை தொடரும்)

## கவிக்களம்

### திலீபன் மறைந்தாலும் அவர் உணர்வு மறையாதே!

பெற்ற அன்னை முகம் பார்த்து மலர்ந்த பாலன் பார்த்தீபன்
பெற்றவள், அவன் துள்ளு நடை போடு முன்பே, பிரிதலானாள்
உற்ற தந்தை உணர்வினாலே தாயாகி உரமளித்தார்
உற்ற கல்வி உவந்து பெற்று மருத்துவத்தை தேர்வு செய்தான்
மாணவ அணியமைத்து மகத்தான கடமையே தலையாய பணியென்று
மக்கள் நலம் காணவென அயராது உழைத்து நின்று
வேங்கையாய் உருவெடுத்து எதிரி வேட்டில் குடல் வெந்து உயிர்
பிழைத்து
ஈழமக்கள் நலனிலே கணம் கணமாய் சிந்தையிட்டு
உணர்வற்ற எதிரிதனை உணரவைக்க எனவெண்ணி
உண்ணா நோன்புதனை உலகறிய உளமார ஏற்று நின்றார்.



தில்லையிலே நடமாடும் தில்லைச் சிவன்
அருகிருக்க
வீர மகா காளி அம்மன் அருகினிலே
வீற்றிருக்க
நல்லையிலே கந்தனவன் நாதனுமாய்
அமர்ந்திருக்க
கைலாயப் பிள்ளையவர் அருகினிலே
பார்த்திருக்க
நல்லூராம் பொற்பதியில் பொறுப்புடனே
உண்ணா நிலைகொண்டார்.

உண்ணா நோன்பு தான் கொண்ட வேளையிலும் நன்னீரும்
அருந்தேன் என்றார்
நான் வகுத்த வேண்டுதலை இந்தியா நிறை வேற்றுமாயின்
நான் எழுவேன், நான் உண்பேன், நான் மகிழ்வேன் என்றிருந்தார்
காந்தி மகான் பெருமைதனைக் கொண்டிருந்த இந்தியனும்
நியாயத்தை மறந்து நிற்க
இந்தியனின் வேடத்தை வெளிக் கொணர்ந்து காட்டி நின்றார்

அலை அலையாய் மக்கள் திரள் நிறைந்து கூட
கணம் கணமாய் நாட்களுமே கலைந்து போக
அணு அணுவாய் அவர் சக்தி இழந்துபோக
உற்ற நண்பர் உறவாளர் அவர் நோக்கி நீரருந்தக் கேட்டும்
என் நோன்பு தனைக் குலைக்க வேண்டாம் என வேண்டி
உளமார உற்றாரை இரங்கி நின்றார்

பன்னிரண்டு பொன் நாட்கள் மக்கள் அலை சூழ்ந்து விம்ம
மக்களோடு மக்களாய் மௌனம் காத்து
ஆயிரமாம் தோளாயிரமாம் எண்பத்தேழு செப்ரெம்பர் இருபத்தாறில்
உற்ற உடல் விட்டு உயிர் நீத்தார்

தித்திக்கும் தமிழ் அமுதைத் தினம் தினமும் தந்தவரே
பொங்குதமிழ் ஈழமதை வென்றெடுப்போம் என்றுரைத்தார்
தன் உணர்வை உலகறிய உண்ணா நோன்பு செய்து
அணு அணுவாய் உடலாற்றல் இழந்து கொண்டார்

ஒளி கொண்ட அவர் கண்கள் உள்ளேயாகி
தமிழ் வழங்கும் திரு நாவும் தழ தழக்க—நாவரண்டு
புன் முறுவல் பூத்த உதட்டிதழ்கள் வெடிப்புறவே
நாளாந்தம் நலம் காத்த நாடித் துடிப்பதுவும் நிலைகுலைய
உடல் நலிந்து யாவும் செயலிழந்து
துடிப்போடு உலவிவரும் அவருருவம் அடங்கியதே!
உடல்தான் மறைந்தாலும் அவர் உணர்வு மறையாதே!

– சுதேசிகன்.


# PAPAYA

Restaurart



MODERN CEYLON CUISINE

குறைந்த விலையில் குன்றாத மனநிறைவு

* தமிழர்களால் தயாரிக்கப்பட்டு தமிழர்களால் பரிமாறும் அறுசுவை உணவகம்.
* அனுபவமும், திறமையும் உள்ள சமையலாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.
* இத்தாலிய உணவுவகைகளும் தேர்வுகளுக்குண்டு.
* திருமணம், பிறந்தநாள் மற்றும் விருந்துபசார வைபவங்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த நியாயமான விலைகளில் அறுசுவையுடன் பரிமாற காத்திருக்கின்றார்கள்

15 Village Way East,
Rayners Lane,
Harrow,
Middlesex HA2 7LX

Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
www.papayauk.com,
e-mail:papaya@papayauk.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உலகில்..!

### எங்கள் பற்களின் ஆயுளை நாங்களே கூட்டுவோம்

மனித இனத்தில் ஒவ்வொருவரின் முகமும் தனித்தனி அமைப்பைப் பெற்று இன்னார் இவர் என்று அடையாளம் காண உதவுகிறது. முகத்திற்கு அழகைக் கொடுப்பதில் கண்கள், மூக்கு மற்றும் வாய் அதனிலும் வாயில் பற்கள் வெகு முக்கியத்துவம் பெறுகின்றது. பற்களின் அமைப்பு வாய் அழகை நிர்ணயிக்கிறது. பிறக்கும்போது, அதன் பின்பு பற்கள் முளைக்கும்போது, பற்களின் வரிசை அமைப்பு எல்லோருக்கும் ஒரே மாதிரியாக உருவாகின்றது. அவரவர் பராமரிப்பின்படி பிற்காலத்தில் உடல் வளர்ச்சியின்போது பற்களின் அமைப்பு மாறிவிடுகின்றது.

இக்கால நவீன யுகத்து மனிதர்கள் பற்களுக்கு அதிக வேலை கொடுப்பதில்லை. குறைந்த பட்சமாகப் பற்களுக்கு என கொடுக்க வேண்டிய வேலையைக்கூட ஒழுங்காக கொடுப்பதில்லை. இது அவசர உலகம். உணவு உண்பதில் மனிதன் பொறுமை காட்டுவதில்லை. வேக வேகமாக உண்டு விட்டு அடுத்த வேலைக்குத் தாவி விடுகிறான். நிதானமாக உணவை உண்பதால் மட்டுமே உணவு நன்கு அரைக்கப்படும். பற்களுக்குரிய வேலை அளிக்கப்படும். அதனால் பற்கள் உறுதிப்படும். மேலும் பற்களுக்கும் அதன் ஈறுகளுக்கும் பயிற்சி அளிக்கும் வகையில் நார்ச்சத்துள்ள மற்றும் கடினமான வகை உணவுகளை நாங்கள் உண்பதில்லை. வேக வைத்த மென்மையான உணவைப் போட்டு போட்டு சாப்பிடுவதுதான் பெரும்பாலும் நடக்கிறது. உணவை வாயில் நன்றாக மென்று விழுங்கும் போதுதான் அதனுடன் போதுமான உமிழ்நீர் கலந்து இரைப்பைக்குச் செல்லும். சரியாக மெல்லாமல் உணவைப் போட்டு சாப்பிடுவதால் தேவையான உமிழ்நீர் கலவாமையால் இரைப்பையில் சுரக்கும் அமிலத்துக்கு அங்கு செல்லும் உணவு ஒவ்வாமையை உண்டாக்கி அஜீரணக்கோளாறு ஏற்படுத்துகின்றது. மேலும் 20 வயது இளைஞன் செய்ய வேண்டிய வேலையை, 2 வயது குழந்தை தலையில் தூக்கி வைப்பது போல, பற்கள் செய்ய வேண்டிய வேலையை மென்மையான குடலுக்கு நாங்கள் அளிப்பதால் உடல் நலம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. பற்களுக்கு நாங்கள் சரியான வேலை அளிக்காததால் தான் அவை சொற்ப வயதிலேயே விழுந்து விடுகின்றன. எனவே நாங்கள் உணவு உண்பதில் நிதானம் காட்ட வேண்டும். உணவை நன்கு அரைத்து பற்களுக்கு வலுக் கூட்ட வேண்டும். நார்ச்சத்து மற்றும் கடின வகை உணவை பற்களுக்கு வேலை கொடுத்து அரைத்து உண்ண வேண்டும். இவ்வகைகளில் எங்கள் பற்களை உறுதியான தாக்கவும், அவை எமக்கு வயோதிப காலம் வரை எங்கள் வாயில் நிலைத்து இருக்கவும் எம்மால் செய்ய முடியும்.

### 100 வயதை கடந்து வாழும் 18,000 ஜப்பானியர்கள் !

ஜப்பானில் 100 வயதை கடந்து வாழும் மக்களின் எண்ணிக்கை 17,934 ஆகியுள்ளது. இமயமலை பாபாஜி 2000 ஆண்டுகளாக வாழ்ந்து வருவது உண்மையா? இல்லையா? என்ற சர்ச்சையை அப்படியே விடுங்கள். இப்போது ஜப்பானில் இருந்து ஒரு ஆச்சரியமூட்டும் தகவல் வெளியாகி இருக்கிறது. ஜப்பானில் 100 வயதை கடந்து வாழும் மக்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகின்றது. 1963ல் ஜப்பானில் 100 வயதை கடந்து 153 பேர் மட்டுமே வாழ்ந்து வந்தார்கள். இந்த ஆண்டு மட்டும் 100 வயதை கடந்தவர்கள் எண்ணிக்கை 2,459 அதிகரித்துள்ளது. இதன் மூலம் ஜப்பானில் இப்போது 100 வயதை கடந்து வாழும் மக்களின் எண்ணிக்கை 17,934 ஆகியுள்ளது. உலகின் மிகவும் மூத்த மனிதர் ஹமாட்டோ ஹேங்கோ ஜப்பானில்தான் வாழ்ந்து வருகிறார். கடந்த செப்டம்பர் 16ம் திகதி 115 வயது ஆகிவிட்டது. அவருக்கு அடுத்த நிலையில் 113 வயதான நிலையில் வாழும் யுகிச்சியும் ஜப்பானில்தான் உள்ளார்? சரி எப்படி ஜப்பானில் மட்டும் இத்தனை வருடம் வாழ முடிகிறது என்கிறீர்களா? நல்ல சீதோஷ்ண நிலை, சத்தான உணவு ஆகியவைதான் அதற்கு காரணமாகின்றது என்கிறார்கள்.

### மனிதர்களை விட கோழி, பன்றி அறிவு மிகுந்தவை !

நாங்கள் நினைப்பதைவிட கோழிகளும், பன்றிகளும் அறிவு கூர்மை மிக்கவை என்று இங்கிலாந்து பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆராய்ச்சி விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள் ஆறறிவு பெற்றிருப்பதாலே நாங்கள் எங்களை அதிபுத்திசாலிகள் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம். மற்றவர்களை தாழ்வாக மதிக்கிறோம். ஒரு கோழி மற்றைய கோழியிடம் இருந்து கற்றுக்கொள்வதும், புரிந்து கொள்வதும் அதிகம். அதேபோல பன்றிகள் தந்திரத்துடன் செயல்படுவதில் வல்லமை மிக்கவை. தங்களது சுயநலத்துக்கு சில மனிதர்கள் மற்றைய மனிதர்களை பலியாக்கிவிடுவதை அப்படியே பன்றிகளும் பின்பற்றுகின்றனவாம். தங்களுக்கு உணவு கிடைப்பதற்கு தங்களது கூட்டாளிகளின் அறிவை பன்றிகள் பயன்படுத்துகின்றன எனவும் கூறப்பட்டுள்ளது.

### கழுதைப்பால் குடித்தால்...

குழந்தை பிறந்த முதல் 3 தினங்களுக்கு ஒவ்வொரு நாளும் அரைக்கரண்டி என்ற அளவில் கழுதைப் பாலைக் கொடுத்து வந்தால் அக் குழந்தையில் மூச்சிழுக்கும் உறுப்புக்கள் நல்ல பலம் பெற்று விரிவடைவதுடன், உணவு செமிக்க உதவும் உறுப்புகளும் நல்ல முறையில் இயங்கும். கழுதைப்பால் பல ஆயுர்வேத மருந்துகளுக்கும் உதவுகின்றது. மார்புச்சளிக்கு கழுதைப்பாலே மிகச் சிறந்த மருந்து என்று இந்திய ஐதராபாத் அரசு ஆயுர்வேதக் கல்லூரி, தமது ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்துள்ளது.

### குழந்தை மருத்துவத்தில் நவீன வளர்ச்சி

குழந்தை மருத்துவம் என்பது மருத்துவத்துறையில் ஒரு சிறப்புப் பிரிவாக இருந்தாலும், அதில் நிறைய உட் பிரிவுகள் உள்ளன. உதாரணமாக ஒரு குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் போதே அதற்கு ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால் அதைக் கண்டறிந்து கருப்பையின் உள்ளேயே சிகிச்சை செய்ய முடியும். அதை போடல்திரப்பி என்பார்கள். முன்பெல்லாம் புதிதாக பிறந்த குழந்தைகள் மற்றும் எடை குறைவாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகமாக இருந்தது. ஆனால் தற்போதுள்ள நவீன சிகிச்சைகள் மூலம் அது பல மடங்காகக் குறைக்கப்பட்டுள்ளது. இதயவியல் துறையிலும், குணப்படுத்த முடியாத பல பிறவிக் கோளாறுகளுக்கு இப்போது அறுவைச் சிகிச்சைகள் வந்துள்ளன. இருதய மாற்று அறுவை சிகிச்சை கூட குழந்தைகளுக்கு செய்ய வசதிகள் உள்ளன.


தொகுப்பு - ஸ்காபுரோ சசி (கனடா)

# 300 சிறிய பலூன் மூலம் 7000 அடி உயரம் பறந்தவர்

மைக் ஹார்வர்ட் என்பவர் 300 சிறிய பலூன்களைக் கட்டி அதன் மூலம் 4000 அடி உயரம் வரைச் சென்றுள்ளார். பிரிஸ்டொல் சர்வதேச பலூன் திருவிழா நடந்தது. இதில் மைக் ஹார்வர்ட் என்பவர் 300 சிறிய பலூன்களை கட்டி அதன் மூலம் 11,000 அடி உயரம் பறந்து சாதனை படைக்க திட்டமிட்டு இருந்தார். 3000 அடி உயரம் பறந்ததும் வெப்பம் தாக்கியது. அதன் பிறகும் 4000 அடி உயரம் மேலே சென்றார். அப்போது மேகங்கள் சூழ்ந்து கொண்டன. அதற்கு மேல் அவரால் செல்ல முடியவில்லை. அதனால் பயணத்தை கைவிட்டார். கைத்துப்பாக்கியால் பலூன்களை சுட்டு காற்றை வெளியேற்றிவிட்டு கீழே இறங்கினார். அதுபற்றி அவர் கூறுகையில், பலூனை சுட்டது வேடிக்கையாக இருந்தது. சரியான வானிலை நேரத்தில் நான் மீண்டும் இதைப்போல் சாதனை பயணம் தொடங்குவேன் என்றார்.

## பலதும் பத்தும்

# செப்டெம்பர் 11 சிலைக்குக் கடும் எதிர்ப்பு



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையம் கடந்த செப்டெம்பர் 11ம் திகதி தகர்க்கப்பட்டதன் நினைவாக அமைக்கப்பட்ட சிலைக்கு கடும் எதிர்ப்பு பல தரப்பில் இருந்தும் எழுந்துள்ளது. பெண் ஒருவர் நிர்வாண கோலத்துடன் தலைகீழாக விழுவதுபோன்று அமைக்கப்பட்ட அச்சிலை கடந்த 11ம் திகதி திறந்துவைக்க முடிவு செய்யப்பட்டது. எனினும் எதிர்ப்புக்கள் அதிகரித்ததால் அச்சிலை திறப்புவிழா ஒத்திவைக்கப்பட்டது. அத்துடன் அச்சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து அதனை அகற்றுவதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# அமெரிக்காவின் சிறைச்சாலை ஏலத்திற்கு வருகிறது!



அமெரிக்கா, சிறைச்சாலை ஒன்றை தனியாருக்கு ஏலத்திற்கு விட முடிவு செய்துள்ளது. இண்டியானா தீவில் சுமார் 35 ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் அமைந்துள்ள சிறைச்சாலையையே ஏலத்தில் விடுவதற்கு முடிவு செய்துள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் 20ம் திகதி நடைபெறவுள்ள ஏலத்தில், பெரும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சிறைச்சாலையை இடிப்பதற்கு தீர்மானித்த அரசு, அதனால் ஏற்படும் செலவினை விட இதனை விற்பதன் மூலம் இலாபத்தினை அடையலாம் என்றே இதனை ஏலத்தில் விடுவதற்கு தீர்மானித்துள்ளது. இதனை ஏலத்தில் எடுப்பவர்கள் கட்டடத்தை இடித்து அகற்றிவிட்டு அதனை ஒரு முக்கிய கேந்திர வர்த்தக நிலையமாக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக கூறப்படுகிறது.

# வந்தால் கார்...

ஆண்கள் தான் சாதனையாளர்கள் என்ற அகம்பாவத்தை உடைக்க இதோ இந்தியப் பெண் ஒருவர் துணிந்துவிட்டார். தன் தலை முடியினால் கார் ஒன்றை கட்டியிழுந்து சாதனை படைத்துள்ளார். இந்தியாவில் பூகம்பம் ஆட்டிப்படைத்த ஆமதாபாத் மாநிலத்தைச் சேர்ந்த தரணி மகேஷ் என்ற பெண்ணே இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழீழத்தின் அகிம்சாவாதி

தமிழீழ விடுதலைப் போராட்டம் உறுதியான தலைமையானாலும், ஆயிரம், ஆயிரம் போராளிகளின் தியாகங்களினாலும், அர்ப்பணிப்புக்களினாலும் இன்று பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. சர்வதேச ரீதியிலே தமிழர் போராட்டம் முக்கியத்துவம் பெற்று வருகின்றது.



ஊரெழு கிராமத்திலே அவதரித்த லெப், கேர்ணல் திலீபன் அவர்கள் விடுதலையின் பால் ஈர்க்கப்பட்டார். தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காகவும், கௌரவமான வாழ்க்கைக்காகவும் சிறீலங்கா அரசுகளை எதிர்த்து விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டார். வட்டுக் கோட்டைப் பொறுப்பாளராக் இருந்த திலீபன் அவர்கள் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஊட்டக்கூடிய கருத்தரங்குகளையும், கலந்துரையாடல்களையும் ஏற்படுத்தி மக்களை விழிப்படைய வைத்தார். மக்கள் கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றிய தியாகி திலீபன் அவர்கள் யாழ்ப்பாணம் கோட்டையின்மேல் புலிக்கொடி பறக்கும், அந்நிய இராணுவப் படைகள் அடித்து விரட்டப்பட்டு நமது பிரதேசங்கள் யாவும் மீட்கப்படும் எனக் குறிப்பிட்டார். அவர் அப்போது கூறிய அந்த வார்த்தைகள் மெய்ப்பிக்கப்பட்டன. யாழ்கோட்டை தகர்ந்தது, புலிக்கொடி பறந்தது. முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆனையிறவு எனப் பெரும்பாலான தமிழர் பகுதிகள் வடக்கிலும், கிழக்கிலும் மீட்கப்பட்டன.

அரசியல் பொறுப்பு வகித்த திலீபன் அவர்கள் மக்கள் மத்தியில் நல்மதிப்பையும், செல்வாக்கினையும் பெற்றுவந்தார். யாவரிடமும் அன்பாகவும் மரியாதையுடனும் பழகும் திலீபன் அவர்கள் சிறுவர் பால் அன்பும், பெரியோர் பால் மதிப்பும் வைத்திருந்தார்.

புரட்டாதி 14ல் தனது உயிரை அகிம்சை ரீதியில் அர்ப்பணிக்க முன்வந்தார். இந்த அகிம்சைப் போராட்டமானது தனித்துவம் வாய்ந்தது. ஆயுதம் ஏந்திப் போராடிய திலீபன் தான் நேசித்த மண்ணிற்காகவும் தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும் இந்திய அரசாங்கத்தின் கபடத்தனத்தை வெளி உலகிற்குக் காட்ட முன்வந்தார். திலீபன் அவர்களின் இலட்சியப் பற்றும் தளராத கொள்கையும், பங்களிப்புக்களும், தியாகங்களும் தூய்மையானவை, மகத்தானவை, வீரவரலாறு படைத்தவை.

தமிழீழத்திலே உண்ணா நோன்பு இருந்து இலட்சியத்திற்காக இன்னுயிரை அர்ப்பணித்த முதல் அகிம்சாவாதியான தியாகி திலீபன் அவர்கள் மகாத்மா காந்தியையே விஞ்சிநின்றார். தெற்காசியாவின் வல்லரசும், அகிம்சையின் பிறப்பிடம் என மார்தட்டிக் கொள்ளும் பாரத தேசத்தின் கபடத்தனத்தையும், நயவஞ்சகத்தையும் வெளிக்கொணர்ந்தார். காந்தி பிறந்த மண் உலக அரங்கிலும், மக்கள் மத்தியிலும் தலைகுனிந்தது. இந்தியர்களின் வாயினை அடைத்தது. இம் மாவீரனின் உன்னத நோன்புக் காலங்களில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியிலே மக்கள் மடைதிறந்த வெள்ளம்போல தமிழீழம் எங்களும் திரண்டு வந்தனர். இவைகளையெல்லாம் பார்க்கும்போது திலீபன் அவர்கள் மக்கள் மனங்களில் நீங்காத இடம் பெற்றிருந்தார் என்பதைக் காட்டுகின்றது. இந்த மாவீரன் தனது மகத்தான உயிரை தமிழீழ மக்களுக்காக செப்டெம்பர் 26ல் ஈழத்து வீர வரலாறு படைத்தார். திலீபன் அவர்களின் மறைவினால் தமிழீழம் சோகமயமாகியது. இல்லங்கள் யாவற்றிலும் கறுப்புக்கொடிகள் தொங்கின. கிராமங்கள் தோறும் அஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெற்றன.

தியாகி திலீபனின் நினைவெழுச்சி நடைபெறும். இந்தக் காலகட்டங்களில் தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது ஆகும். எங்கள் தேசியத் தலைவரின் ராஜதந்திர வழிகாட்டலிலும், மதிநுட்பத்திலும், போராளிகளின் தியாகங்களினாலும், மக்களின் பேராதரவினாலும் திலீபன் அவர்களின் கனவுகளும், இலட்சியங்களும் ஈடேறும்.

*ஊரெழு மண்ணில் அவதரித்தாய்*
*உரிமைப் போருக்கு புறப்பட்டாய்*
*தமிழீழ விடுதலைப் புலியானாய்*
*ஆயுதம் ஏந்திப் புறப்பட்டாய்*
*களங்கள் பலதில் வெற்றிகண்டாய்*
*விடுதலைத் தீயினை வளர்ந்து வந்தாய்*
*தமிழீழமே தீர்வென முழங்கி வந்தாய்*
*அகிம்சைப் போரினில் ஈடுபட்டாய்*
*மகாத்மா காந்தியை விஞ்சிநின்றாய்*
*புதிய வரலாறு படைத்துவந்தாய்*
*பாரத தேசத்தை குனியவைத்தாய்*
*தமிழீழ அகிம்சாவாதியானாய்*
*தமிழர் நெஞ்சங்களில் நிலைத்துநிற்கின்றாய்*
*தமிழர்களின் வீரவரலாறு ஆனாய்.*

**- வட்டூர் க. மயில்[illegible]**

# உலக கால்நடை உற்பத்திகளின் பிறப்புரிமையியல்களுக்கான 7வது மாநாடு!


## - ஈழத் தமிழர்களும் பங்கேற்பு -

**ஈழமுரசு: *ஜெயறூபன்! பொஸ்வானியாவிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்கு முதல் தடவையாக வந்திருக்கிறீர்கள். உங்களைப் பற்றி...?***

**ஜெயறூபன்:** இங்கு வந்ததில் எனக்குக் கிடைத்த முதல் மகிழ்ச்சி என்னுடைய ஆசிரியர் ஒருவரைச் சந்தித்ததுதான் (சொல்லிக்கொண்டே அருகே அமர்ந்திருந்த தேவமனோகரனை அணைத்துக்கொள்கிறார். இருவரின் கண்களும் தங்கள் மகிழ்வினைப் பகிர்ந்து கொள்கின்றன) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தேவமனோகரன் விரிவுரையாளராகப் பணியாற்றியபோது நான் இவரின் மாணவன்.

18 ஆண்டுகளுக்குப் பின்னர் இவரைச் சந்தித்தது மகிழ்ச்சிதானே! (மீண்டும் இருவரும் தம் கரங்களால் இறுகப் பற்றிக்கொள்கின்றனர். ஒரு தாய் வயிற்றில் பிறந்து பிரிந்து போன இரு சகோதரர்கள் மீண்டும் சேர்ந்துகொண்டது போன்ற பாச உணர்வு இருவரின் முகங்களிலும் பளிச்சிட்டு கண்கள் கசிந்தன) மானிப்பாய் எங்கள் சொந்த ஊர். எனது தந்தையார் மரியதாஸ் ஒரு கணித ஆசிரியர். மிகவும் கட்டுப்பாடோடு எங்களை வளர்த்தவர். எனது ஆறு சகோதரர்களும் தாயாரும் ஈழத்தில் வாழ்கிறார்கள். ஒரு சகோதரி மட்டும் கனடாவில். நான் எனது மனைவி இரு பிள்ளைகளுடன் கிழக்காபிரிக்காவில் பொஸ்வானா நாட்டில் பிறப்புரிமையியல் ஆராய்ச்சியாளராக 1999 முதல் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன்.

**ஈழமுரசு: *ஈழத்தில் உங்கள் பணிபற்றிச் சொல்லுங்கள்!***



புனிதர் சம்பத்திரிசியார் கல்லூரியில் எனது உயர் கல்விவரை தொடர்ந்து பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு 1985ல் இருந்து 1999 வரை இலங்கை மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றினேன். 1988ல் கனடா சென்று 1992ல் எனது கலாநிதிப் படிப்பை முடித்துக்கொண்டு மீண்டும் இலங்கை வந்து என் பணியைத் தொடர்ந்தேன்.

கனடா உதவியுடன் நான் எடுத்த ஆராய்ச்சியின் பயனாக இலங்கையில் அதிக முட்டைகள் இடக்கூடிய புதிய கோழி இனத்தை அரசின் விவசாய ஆராய்ச்சி நிறுவனம் (Young scientist award frum council of agriculture usearch)

`இளம் விஞ்ஞானி' என்ற பட்டத்தை வழங்கி என்னைக் கௌரவித்தது. இதுவரை வேறு ஒருவருக்கும் இந்தப் பட்டம் வழங்கப்படவில்லை.

(அவரை அறியாமலே அவர் முகத்தில் சிறு பெருமிதம் பளிச்சிடுகிறது)

**ஈழமுரசு: *உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் இத்தனை ஆராய்ச்சியாளர்களும் வந்திருக்கிறார்களே, இந்த மாநாடு அவ்வளவு முக்கியம் வாய்ந்ததா?***

**தேவமனோகரன்:** நிட்சயமாக! எங்களைப் போன்ற ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்ல, உலகின் வறுமையைப்போக்கி உணவு உற்பத்தியைப் பெருக்கவும் இந்த மாநாடு உறுதுணையாக இருப்பதால் இது ஒரு முக்கியம் வாய்ந்த மாநாடுதான்.

**ஜெயறூபன்:** 4 வருடங்களுக்கு ஒருமுறை வெவ்வேறு நாடுகளில் நடக்கும் இந்த மாநாட்டில் பங்கு கொள்ளும் ஆய்வாளர்கள், அண்மைக்காலங்களில் தாங்கள் நடாத்திய ஆராய்ச்சிகளை ஏனைய ஆய்வாளர்களோடு பகிர்ந்துகொள்வதோடு, தம் துறை சார்ந்தாரோடு நேர்முகமாக அறிமுகமாகி, பின்னர் கூட்டாக இணைந்து தம் ஆராய்ச்சிகளை விரிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்லவும் இந்த மாநாடுகள் பெரிதும் உதவுகின்றன.

**தேவமனோகரன்:** இதன் அவசியத்தை இன்னமும் கொஞ்சம் விரிவாக விளக்கிச் சொல்வதென்றால் மனித தேவைகளுக்கான உணவைப் (பால், இறைச்சி, முட்டை) பெற்றுக்கொள்ளவும், நிலங்களை உழவும், உரமூட்டவும், பொருட்களை எடுத்துச் செல்வதுமான அவசிய தேவைகளுக்காக பண்ணை விலங்குகளை உட்படுத்த வேண்டிய கட்டாயம் கடந்த 5000 வருடங்களாகவே நடைமுறையில் உள்ளது. ஆரம்ப காலங்களில் 1/2 லீட்டர் பால் தந்த மாடுகள் தற்போது 20 லீட்டர் ஆகவும், வருடத்திற்கு 40 முட்டைகளைக் கொடுத்து வந்த கோழிகள் 300 வரை கொடுக்கக் கூடியனவாகவும், மேலும் குறுகிய காலத்தில் நிரம்பிய உடல் வளர்ச்சி பெற்று அதன் மூலம் நிறைந்த பலன் தரும் வர்க்கங்களை உருவாக்கக் கூடியதுமான இன்றய வளர்ச்சிக்கு பிறப்புரிமையியலின் ஆராய்ச்சிகளின் பங்களிப்பு அளப்பரியவை என்றே சொல்லவேண்டும்.

**ஈழமுரசு: *இந்த மாநாட்டில் உங்களிருவரினும் ஆய்வுகளினூடாக எவ்வாறான ஆராய்வுகளைச் சமர்ப்பித்துள்ளீர்கள்?***

**தேவமனோகரன்:** ஆசிய நாடுளில் விவசாய தேவைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பண்ணை விலங்குகளில் `எருமை'யினங்களைப் பற்றி ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் மிகக் குறைவாக இருப்பதால், அதனையே என் தெரிவாக எடுத்துக்கொண்டேன்.

உலகில் எருமையினங்களை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். நந்நீர் எருமையினம் (Riverune Buffalo) சேற்றெருமையினம் (Swamp Buffalo) ஆகிய இவ்விரு வகையான இனங்களில் நந்நீர் இனம் உலகளவிலான தொகையில் 2/3 பங்கையும், சேற்றினம் 1/3 பங்கையும் கொண்டுள்ளன.

இவற்றின் பொதுப் பயன்பாடுகளாக, நந்நீர் இனம் பால், இறைச்சி போன்றவற்றிற்காகவும், சேற்றினம் வயல் வேலைகளுக்காகவும் இருந்து வந்துள்ளன. இந்த இரண்டிலும் நிற முகூர்த்த எண்ணிக்கையில் வேறுபட்டிருப்பினும் இவற்றை இனம் கலர்ந்து பெறப்படும் கலப்பினம், பால் உற்பத்தியில் கூடியதாகவும், இளுவை வலுவிலே முன்னேற்றம் காணக்கூடியதாகவும் இருப்பதால் ஆசியாவின் சில நாடுகளில் இந்தக் கலப்பினங்களையே தங்கள் விவசாயப் பாவனைக்கு ஈடுபடுத்துவதில் விருப்பம் காட்டி வருகிறார்கள். எனினும், கலப்பினமில்லாத மூல இனங்களை தனித்தனியே அழித்துவிடாமல் காப்பாற்றவும், அவற்றின் பாரம்பரிய அடிப்படையில் தெரிவுசெய்து காப்பாற்றி பாதுகாக்கக்கூடியதுமான திட்டங்களையும், இனப்பெருக்க முறைகளையும் மேற்கொள்ளுவதற்கான வழிமுறைகளையும், அதன் காரணிகளைக் கண்டுகொள்வதுமான எனது ஆய்வுகளையே இந்த மாநாட்டில் சமர்ப்பித்துள்ளேன்.

**ஈழமுரசு: *தமிழீழத்தைப் பொறுத்தவரையில் எருமையின வளர்ப்பு பாதுகாப்பு, நிறைந்த பயனைத் தரக்கூடியனவா?***

**தேவமனோகரன்:** பொதுவாக இலங்கையைப் பொறுத்தவரையில் 95% சேற்றினம் மிகுதி 5% நந்நீரினம். கடந்த 40 வருடங்களாக நான் முன்னர் கூறியதுபோல கலப்பினத்தை உருவாக்க இந்தியாவிலிருந்து நந்நீரினத்தைத் தருவித்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டபோதிலும், இவற்றின் பால் உற்பத்தி, உடல்நிறை வளர்ச்சி விகிதம் இளுவைவலு, நோய் எதிர்ப்புத்தன்மை போன்ற இயல்புகள் பாகிஸ்தான் இத்தாலி, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள எருமை இனங்களோடு ஒப்பிடும்போது தரம் குறைவாகவே உள்ளது. இதற்குத் திட்டமிடப்பட்ட ஆராய்ச்சியின்மை, திட்டமிடப்பட்ட இனப்பெருக்க பராமரிப்பின்மை நல்ல விவசாய விரிவாக்கமின்மை போன்ற காரணங்களைச் சொல்லலாம்.

எங்கள் பிரதேசங்களாக முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களில் இந்த நாட்டெருமையினம் (சேற்றினம்) பாவனையில் இருந்தபோதிலும் தரம்குறைவுதான். ஆகவே இனிமேல் வரும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களில் நான் கூறிய காரணிகளைக் கவனத்தில்கொண்டு எருமையின அபிவிருத்தித் திட்டங்களையும் சேர்த்துக்கொள்வது மிகுந்த பயன்பாட்டை எங்கள் மக்களுக்குத் தரும்.

*(மிகுதி அடுத்த வாரம்)*

***சந்திப்பு: எம்.அரியநாயகம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பட்ட பார்வைகொண்ட பாரதியும் ஔவையும்

**(புரட்சிக் கவிஞர் பாரதியின் நினைவாக...)**

(சென்றவாரத் தொடர்ச்சி)

'காலம் பணவிலை உடையது' என்ற குறிப்புடைய ஆங்கிலப் பழமொழி ஒன்று இருக்கிறது. இந்த சமாசாரம் நம்மவருக்குத் தெரிவதே கிடையாது. பொழுது வீணே கழிக்கப்படுமாயின், அதனால் பணலாபம் கிடையாமற் போகும். இன்று செய்யக்கூடிய கார்யத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமதப்படுத்தி வைப்பதனால், அந்தக் கார்யம் பலமான சேதமடைந்து போகும்.



'இத்தகைய மூட பக்திகளெல்லாம் படிப்பில்லாமையால் ஏற்கப்பட்டிருக்கின்றன' என்றும் 'ஜனங்களுக்குப் படிப்பு கற்றுக் கொடுப்பதால் இவை அழிந்து போய்விடும்' என்றும் இங்கிலீஷ் படிப்பாளிகள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆனால், பி.ஏ., எம்.ஏ தேர்வுகள் தேறி, வக்கீல்களாகவும், உபாத்தியாயராகவும், என்ஜினீர்களாகவும், பிற உத்தியோகஸ்தராகவும் வாழும் கணக்கில்லாத ஐயர், ஐயங்கார், பிள்ளை முதலியவர்கள் எவராவது ஒருவர் தம் வீட்டுக் கல்யாணத்துக்கு லக்னம் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று நிறுத்தியிருப்பாரா? 'பெண் பிள்ளைகளின் உபத்திரவத்தால் இவ்விதமான மூட பக்திகளுக்கு கட்டுப்பட்டு வாழும்படி நேரிடுகிறது' என்றும் சிலர் முறையிடுகிறார்கள். பெண்பிள்ளைகளுக்கு மரியாதை கொடுக்கவேண்டிய இடத்தில் கொடுக்க வேண்டும். மூடத்தனமான, புத்திமான்கள் கண்டு நகைக்கும் படியான செய்கைகள் செய்ய வேண்டுமென்று ஸ்திரீகள் பலனின்றிப் பிதற்றுமிடத்தே, அவர்களுடைய சொற்படி நடப்பது முற்றிலும் தவறு.

ஆனால், உண்மையில் பாரதியின் தத்துவ தரிசனம் என்ன? வாழ்க்கைக் கண்ணோட்டம் என்ன? பாரதி கடவுள் உண்டென்ற கொள்கையுடையவன்தான். ஆயினும் அவன் 'ஒருவனே தேவன்' என்பதையோ, கடவுள் 'இப்படியன், இவ்வண்ணத்தன், இந்நிறத்

**– சபேசன் (தமிழ்க்குரல்) –**

தன்' என்பதையோ, நிலைநாட்டுவதை முதற்பெரும் கொள்கையாகக் கொள்ளவில்லை. பாரதியின் இலக்கியம் முழுவதையும் துருவி ஆராய்ந்தால், தேசியப் பாடல்களையோ, தோத்திரப் பாடல்களையோ, வேதாந்தப் பாடல்களையோ, இதர பாடல்களையோ எதை ஆராய்ந்து பார்த்தாலும் இந்த வாழ்வையும், இதில் மனித வர்க்கம் முழுவதும் உயர்நிலை எய்தி வாழ்வதையும் அதற்கான கால மாறுதலையும் பெருநோக்காகக் கொண்டு நிற்கின்றான் என்பதைத் தெளிவாகக் காணமுடியும்.

'செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணியிருப்பர்
பித்தமனிதர் அவர்சொல்லும் சாத்திரம்
பேயுரையாமென்று ஊதேடா சங்கம்' (வேதாந்த - சங்கு)

இந்தப் பாட்டில், செத்தபிறகு வாழ்வு உண்டென்றோ, சிவலோகம், வைகுந்தம் உண்டென்றோ நினைக்கும் கருத்தை மண்டையிலடித்து நசுக்கி விடுகின்றான்.

'மண் பயனுற வேண்டும்
வானகம் இங்கு தென் படவேண்டும்'

இவ்வாறு, 'வேண்டும்' என்ற பாட்டில் சொர்க்கம் வேறு எங்கேயும் இல்லலை, அது இங்கேயே தோன்ற வேண்டும் என்கிறான்.

'வீடு (மோட்சம்) வேறு எங்கேயும் இல்லை, அது இங்கேயே இருக்கிறது.' 'கவலை துறந்து இங்கு வாழ்வதே வீடு' என்று 'அறிவே தெய்வம்' என்ற பாட்டில் பாடுகின்றான்.

'ஐயமுண்டு பயமில்லை மனமே - இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு: நிலையுண்டு'

என்று 'ஜீவன் முக்தி' என்ற பாட்டில் இந்தப் பிறப்பிலேயே விடுதலை உண்டு என்கிறான்.

பாரதி தமிழ் - தமிழ் என்றே மூச்சுவிட்டான். இதோ தமிழைப் பற்றியும், தமிழ் இனப்பற்றினைக் குறித்தும் அவன் எழுதியவற்றில் ஒரு சில துளிகள்.

'தமிழ், தமிழ், தமிழ் - என்றும், எப்பொழுதும், தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால், புதிய - புதிய செய்தி, புதிய - புதிய யோசனை, புதிய - புதிய உண்மை, புதிய - புதிய இன்பம் தமிழில் ஏறிக்கொண்டே போகவேண்டும். தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்தைப் பார்க்கும் பொழுது, எனக்கு வருத்த முண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்குச் சம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாக இருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகின்றது.'

(மிகுதி அடுத்த வாரம்)

# இலக்கியம்-கலைஞன்-அரசியல்

## -பாலுமகேந்திராவுடன் யமுனா ராஜேந்திரன் உரையாடல்-

**- 02 -**

(சென்றவாரத் தொடர்ச்சி)

எழுத்து கொடுக்கிற சுதந்திரத்தை சினிமா தராது. இவந் தீர்மானிச்சு, இருட்டுக்கு கூட்டிட்டுப்போயி உட்காரவச்சு, பார்ராங்கறது தான் சினிமா. மகா மகா போக்கிரித்தனமான குரூரமான ஊடகம் சினிமா. அதுதான் சினிமாவின் வலிமை. அந்த நகர்கிற பிம்பத்தில உன்ன மாத்திக்கற. கமல்ஹாசனா, சிறிதேவியா மாத்திக்கற. இலக்கியத்துக்கும் சினிமாவுக்குமான இந்த வித்தியாசத்தைப் புரிஞ்சிக்கனும். நா ஏ இதச்சொல்றன்னா, நா ஆரம்பத்தில ஒரு எழுத்தாளன். அப்புறம் தான் சினிமாவுக்கு வந்தன். சினிமா என்னை முழுசா ஆக்கிரமிச்சிருக்கிற இன்னைக்கும் கூட, நான் வெறிகொண்ட ஒரு வாசகனா இருக்கறன். நேத்தவரைக்கும் வந்த நல்ல சிறுகதை, நல்ல நாவல் என எல்லாத்தையும் தேடித்தேடிப் படிக்கிற வாசகனாத்ததான் நா இருக்கறன். அதனால எனக்கு இப்பிடி ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டப்ப, டி.வி.ல. உனக்கு 52 வாரத்துக்கு நேரம் தர்றம் நான் சிறுகதைகள் எழுதக் கூடியவன்.., குறும்படமும் எடுப்பேன்... நா எடுத்துக் கொண்ட கதைகள்ல்ல ஒண்ணு ரெண்டு வந்து இலக்கிய அங்கீகாரம் பெற்ற கதைகளாகவும் இருக்கலாம். பெரும்பாலான கதைகள இலக்கியக் கண்ணோட்டத்துல பார்ககறப்ப இலக்கிய அங்கீகாரங் கொண்ட உன்னதங் கொண்ட கதைகள் அல்ல.



கதைகள் என்று அதப் பார்க்கறப்ப அழுத்தமான உள்ளடக்கம் கொண்ட கதைகளாக அது இருக்குது. இந்த நல்ல விஷயங்கள மட்டும் நா எடுத்துட்டன். அதப் பண்ணினன். என்னா பண்றாரு இவருங்கறாங்க. பட்டுக்கோட்டை பிரபாகரப் பண்ணீட்டு இருக்காரு. சுஜாதாவப் பண்ணீட்டு இருக்காருங்கறாங்க. ராணி பத்திரிகையில நிருபரா ஒரு பையன், 23 வயசு கூட இல்ல, தாம்பத்ய நினைவுகள்ன்னு ஒரு கதை. நா அத ஒரு அற்புதமான கலைப் படைப்பாக ஆக்கியிருக்கிறன். பல தீவிர எழத்தாளர்கள் எனக்கிருக்கிற இந்தப் பிரச்சினயைப் புரிஞ்சு கொள்றதேயில்லை. என்ன என்னுடைய கதைக ஒன்னு கூடச் செய்யலன்னு கேட்கறதுக்குப் பதிலாக, ஜெயகாந்தனப் பாரு புதுமைப்பித்தனப்பாரு என்கிறாங்க. ஐயா, இவங்களையெல்லாம் நா தலையில வச்சுக் கும்படறேன்யா. ஒரு சினிமாப் படைப்பாளியா, அது எனக்குப் பிரயோஜனமில்லை என்கிறத புரிஞ்சு கொள்ள மாட்டேங்கறாங்க.

**ய.ரா:-** மேற்கில செவிவயல் இலக்கியம்ன்னு இருக்கிற எல்லா நாவல்களுமே சினிமாவா வந்திருச்சுங்க. இப்ப சேக்ஷ்பியர், தாஸ்தயாவ்ஸ்க்கி, டால்ஸ்டாய் அப்பிடீன்னு எடுத்திட்டாலும் சரி, அதுக்குப் பிற்பாடு காம்யூ, ஸார்த்தர், காப்கான்னு எடுத்துட்டாலும் சரி, சமகாலத்துல குந்தர்கிராஸ், அம்பர்தோ எக்கோ, கார்ஸியா மார்க்வஸ் அப்பிடீன்னு எடுத்திட்டாலும் சரி, தீவிரமான இலக்கியமெல்லாம்? சினிமாவா வந்திருச்சி. இந்திய, தமிழ்ச் சூழலல்ல பார்த்தமுன்னா, அப்பிடி தீவிர இலக்கியம் சின்னிமாவுக்குள்ள வரல. இதுக்கான காரணமா நீங்க என்ன நெனக்கிறீங்க?

நீங்க பேசும்போது சொன்னீங்க ஒரு ஊடகத்திலிருந்து, குறிப்பா இலக்கியததிலிருந்து, இன்னொரு ஊடகத்துக்குள்ள கொண்டு வரும்போது, சினிமாவுக்கு கொண்டுவரும்போது, அந்தந்த ஊடகத்துக்குள்ள இருக்கிற பிரச்சனகளப்பத்திச் சொன்னீங்க. அப்படிப் பார்க்கும்போது சில படைப்புக்கள சினிமாவுக்குள்ள கொண்டுவற்ற சாத்தியமே இல்ல அப்பிடீங்கறமாதிரி எனக்குத் தோணுச்சு. அப்பிடிப் பார்க்கும்போது, ஒரு சின்ன உதாரணம் சொல்லாம்னா லண்டன்ல்ல தாஸ்தயாவ்ஸ்க்கி திரைப்படவிழா பார்த்தேன், எங்களுக்குத் தெரியும் தாஸ்தயாவ்ஸ்க்கியினுடைய படைப்புகள்ல வந்து காட்சிபூர்வமான அம்சம் (visual aspects) வந்து துப்புரவா இல்லை. அவருடைய படைப்புகள்ல பாத்திங்கன்னா, இயற்கை வர்ணனைக்கும் புறச் சூழலுக்கும் இடமேயில்லை. மனிசனுடைய உளவியல் போராட்டங்களை, அந்த அளவுல அவனுக்குள்ள ஏற்படுகிற உளவியல் சிக்கல்களத்தான் அவர் விவரிச்சிட்டுப் போறார். இன்னும் உரையாடல்தான் அவருடைய நாவல்கள்ல நெருக்கடிகளத் தீர்க்கற அம்சமா இடம் பெறுது. இருந்தாலும் அவருடைய நாவல்கள் திரைப்படமாக்கப்பட்டிருக்குது. சினிமாவினுடைய வலிமைன்னு நான் பாரக்கக்கூடியது என்னன்னா, அது பரவலான மககளுக்கிடையில போறது. ஒரு குறிப்பிட்ட நேர வரையறைக்கள்ள, மற்றது ஒரு வரையறுக்கப்பட்ட இடத்துக்குள்ள அது மிகப் பெரிய அனுபவத்தைக் கொடுக்கக்கூடியதா இருக்குது. அப்ப குறைந்தபட்ச சமரசத்தோட, தமிழிலையும் இப்படியான படைப்புகள சினிமா ஊடகத்துக்குக் கொண்டு போகக்கூடிய தேவையொன்னு இருக்குது. இன்னும் கல்வி வளர்ச்சி இல்லாத நம்ம நாடுகள்ல, உயர்ந்த தளத்திலான படைப்புக்கள நாம பரந்துபட்ட மக்கள் கிட்ட கொண்டு போகவேண்டிய தேவையிருக்குது.

**பாலு:-** பிரதான காரணம் இலக்கியத்தில எழுத்தில சொல்லும்போது வெளிப்படற அந்த கம்பீரம், ஆளுமை, அந்த ரூபம், இத நான் என்னுடைய ஊடகத்துல கொடுக்க முடியாம போகிறபோது, அந்தப் படைப்பைப் படிச்ச ஒரு வாசகனுக்கு, அந்த எழுத்தைப் படிக்கிறபோது ஏற்பட்ட ஒரு சுகானுபவம் அவனுக்குக் கிடைக்கிற கற்பனை சுதந்திரம், அந்தக் கற்பனை சுதந்திரம் சினிமாவுல அந்த தளத்துல மறுக்கப்படுது. அதுக்கு உதாரணமாத்தான் பாட்டி வடை சுடற கதையச் சொன்னேன். எழுதி முடிஞ்ச உடனே அந்தப் படைப்பு பூர்த்தியாயிடுச்சுன்னு கொள்ளக் கூடாதுன்னு நா நெனக்கிறன். வாசகன படித்து அனுபவம் கொண்டபிறகுதான் அந்தப் படைப்புச் செயல்போக்கு முடியுதுன்னு நான் நெனக்கிறன். எழுத்து என்கிற இந்த ஊடகத்தினுடைய பற்றாக்குறை காரணமாக, (பற்றாக்குறைன்னு நா எதச் சொல்றன்ன பின்னாடி வர்றன்) பற்றாக்குறை காரணமாகச் சொல்ல முடியாமல் போன விஷயம், அப்புறம் கலாரீதியாகச் சொல்லாமலே தவிர்த்துக் கொண்ட விஷயம், ஊடகத்தின் பற்றாக்குறை காரணமா சொல்லாமல் போன விஷயங்களை வாசகன் இட்டு நிரப்பியபின், கலாரீதியாகவும் இட்டு நிரப்பியபின் தான், இந்தப் படைப்புப் பூர்த்தியாகிறதென நான் நினைக்கிறேன். வாசகன் வந்து ஒரு சக படைப்பாளியாக மாறுகிறான். இது எழுத்து ஊடகத்தில் இருக்கிற அட்டகாசமான நிலை. வாசகன் இப்படி இலக்கியத்தை தன் வயப்படுத்திக் கொள்கிறான். சினிமா பாக்கறவன் அப்பிடி இல்ல. ஒரு சில விஷயங்கள் தான் அவனுடைய கற்பனைக்கு விட்டுவைக்கப் படுது. காரணம் காட்சித்தன்மை, இது ஒரு காரணம்.

இலக்கிய உன்னதம் என்று அங்கீகாரம் கொண்ட ஒரு படைப்பு, (இப்ப எழுத்து என்கிற ஊடகத்தினுடைய பற்றாக்குறை என்னன்னு நான் சொல்ல வர்றன்) எழுத்துல சில விஷயங்கள எடுத்துச் சொல்லவே முடியாது. சொற்களால முடியாது. என்னைப் பொறத்த அளவில மொழிங்கற போது, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், மலையாளம்ன்னு சொல்ற இந்த அர்த்தத்துல நான் அந்த வார்த்தைய உபயோகிக்கிறன். மொழி என்பது ஒரு ஊடகம். மொழி எப்பிடி இயங்கும்? வார்த்தைகளிலான வாக்கியங்கள். வார்தைகளுக்கான அர்த்தங்கள். இந்த வார்தைகள் கோர்க்கப்படும் விதத்தில் தொனிக்கும் வேறு அர்த்ததங்கள். இந்த வார்த்தைகள் சொல்லப்படும் தொனியில் தொனிக்கும் வேறு அர்த்தங்கள. ஒரே வார்தை வெவ்வேறு தொனியில் உச்சரிக்கப்படும் போது வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுக்கலாம்

உதாரணமா நீங்க கேட்கறீங்க, அப்ப நா கெளம்பட்டுமா? சரி நீ போயிட்டுவா. நா கெளம்பட்டுமா?. சரி போ. இது அர்த்தமே வேற. இதனுடைய தொனியும்? முக பாவ மாற்றமும், அதுகட்கு வேறொரு அர்த்தத்தைக் கொடுக்கும். இந்த வார்தைகளும் அதனுடைய அர்த்தங்களும் ஒரு சாதாரணமான தளத்திலதான் நமக்குத் தொடர்பு கொள்ள உதவுது. (உரையாடல் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகலிட நிகழ்வுகள்

### நெதர்லாந்தில் தமிழர் விளையாட்டு விழா - 2002

24.08.2002 சனிக்கிழமை Utrecht, Zeist Oost , Dijnsel Burg மைதானத்தில் காலை 9.30 மணிக்கு மாவீரர்களிற்கான அகவணக்கத்தைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் உதைபந்தாட்டப் போட்டிகளுடன் தமிழர் விளையாட்டுவிழா




ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மதியவேளைக்குப் பின்பு சிறுவர்களுக்கான போட்டிகள் பார்வையாளர்களுக்கான போட்டிகளாக விளையாட்டுவிழா சூடுபிடிக்க ஆரம்பித்தது. சென்ற தடவைகள் போலல்லாது இவ்வாண்டு பல



நூற்றுக்கணக்கில் தமிழ்மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமை அடுத்தவருடம் இன்னும் பல போட்டிகளை



இவ்விழாவில் சேர்க்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது.

அத்துடன் சென்ற தடவைகள் பெண்களுக்கான விளையாட்டுக்களாக சங்கீதக் கதிரையே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இம்முறை கயிறு இழுத்தல், ஓட்டப்போட்டிகள் என பல போட்டிகள் பெண்களுக்காக நடாத்தப்பட்டிருந்தமை வரவேற்கத்தக்கவையாகும். முதன்முறையாக மைதானத்தில் தமிழ் வர்த்தகநிறுவனங்களின் மலிவுவிற்பனைகளும் மக்கள் அவ்விடங்களில் குழுமியிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. மாலைநேரமானதும் காலநிலை போட்டிகளை நடாத்துவதற்கு ஒத்துழைக்கவில்லை. அடைமழை பெய்யத்தொடங்கியது. இருப்பினும் சிரமத்தின்



மத்தியில் அனைத்துப்போட்டிகளையும் நடாத்துனர்கள் சிறப்பாக நடாத்தி முடித்திருந்தார்கள்.

தமிழர்கள் விளையாட்டுப்போட்டிகளில் ஆயிரத்திற்கு மேல் ஒன்றுகூடியது நெதர்லாந்தில்



இதுவே முதல் தடவையாகும். அத்துடன் திருமதி. அடேல் பாலசிங்கம் எழுதி வெளியிட்ட சுதந்திர வேட்கை புத்தக விற்பனையும் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

விலகல் முறையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 8 கழகங்கள் பங்குபற்றியிருந்தன. அவற்றுள் 1ம் இடம்: Den Helder விளையாட்டுக்கழகம், 2ம் இடம்: Leiden விளையாட்டுக்கழகம், 3ம் இடம்: Msterdam விளையாட்டுக்கழகம் ஆகியன பெற்றுக்கொண்டன.

### பிரான்சில் மாவீரர் விளையாட்டு விழா-2002

மாவீரர்நினைவாக வருடாந்தம் இடம்பெறும் மாவீரர் நினைவுக் கிண்ணங்களுக்கான விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநிகழ்வு கடந்த 8ம் திகதி பாரிசில் சிறப்புற இடம்பெற்றது. பிரான்சில் வதியும் பலநூறு தமிழ் மாணவர்கள், இளைஞர்களின் ஆற்றலை வெளிக்காட்டும்



நிகழ்வாக வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் பல்வேறு விளையாட்டுக்கள் அடங்கிய மாவீரர்நினைவு விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநிகழ்வாக மெய்வல்லுனர் போட்டிகளும், உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டமும்



இடம்பெற்றது.

தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு போட்டிகள் ஆரம்பமாகின.

இவ்வாண்டு தமிழர் விளையாட்டுக்கழகம் 93





மெய்வல்லுனர் கிண்ணத்தை வெற்றிகொண்டது. ஈழவர் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தைப் பெற்றது. பாரிஸ் தமிழர் விளையாட்டுக்கழகம் மூன்றாம் இடத்தைப் பெற்றது. உதைபந்தாட்டச் சுற்றுக்கிண்ணத்தை நாவந்துறை ஐக்கிய



விளையாட்டுக்கழகம் வெற்றிகொண்டது. ஈழவர் விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தைப் பெற்றது.

சுமார் 750 வீரர்கள் பங்கேற்ற இப்போட்டிகளில் பல புதிய தடகள சாதனைகள் நிறைவேற்றப்பட்டதுடன் பல புதிய இளம் வீராங்கனைகளின் ஆற்றல் வெளிப்படுத்தப்பட்டமை சிறப்புக்குரிய அம்சமாக





இருந்தது. இவ்வாண்டு உதைபந்தாட்டத்துடன் கூடைப்பந்தாட்டப் போட்டிகள் மிகவிறுவிறுப்பாக இடம்பெற்றது. கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் பல பிராந்திய பெண்கள் அணிகள் போட்டியிட்டமையும் குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்திருந்தது.

Experienced Tamil Jeweller in London
western Jewellers
வெஸ்டன் ஜுவல்லர்ஸ்
230 Upper Tooting Road
London SW 17 7EW
Tel: 020 8767 3445
Opening hours,
Mon-Sat 10 a.m-6.30 p.m Sun 11 a.m-5.30 p.m
வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் வைபவங்களுக்கு

**Wedding and Birthday Invitations Printed in 48 hours**

**DESIGN AND PRINTING**
Posters Stationary etc..

Convert your VHS and DV to Video CDs
Digital Video Editing (NLE)
VideoTitling in Tamil
Phone: 0208 2038587
Mobile: 07780978027
BoseDesigns

---

SML

## Royal Jewellery



*287. High Street North East Ham.*
*Manor Park, London E12 6SL*
*Tel - 020 8472 5500*
*Fax - 020 8472 5687*

---

RESTAURANT

## Palm Beach

Finest South Indian & Sri Lankan Cuisine

10% OFF ALL TAKE AWAY ORDERS

P.Sivarupan
Proprietor

17 Ealing Road, Wembley Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

---

## சீலன்ஸ்

இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கம்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பல சரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளைம்ம் பெற்றுக்கொள்ள நாடவேம்டிய ஒரே இடம்.

**Seelans**
*332 & 334. High Street North*
*East Ham, London E 12-6Ph*
*Tp & Fax- 020 8471 5733*

---

## அறோ பிரசி றேட்

தரத்தின் உயர்வை நாடுவோர் நாடும் இடம்

**ARO PRASI TRADE**

*Tel -02339-6478 / Fax- 02339- 121855*
*glashütten platz-11c , 45549- Sprockhouel*

---

# Spices Express

## Indian Take Away

We urgently need a head chef for our restaurant. Hr should be qualified and experienced in Chettinadu Style cooking.

His main duty will perpare and cook various meals from a daily menu.

We offer £12000 per annum as wages and the working ours will be evening 4 p.m to 11 p.m

*Please forward your CV to*

**Spices express**
**163, Rye field Avenue**
**Hillington**
**Middx UB10 9DA**

---

## இலண்டன் மாநகரில்

## புதுமை! இனிமை! திறமை!

# ஸ்பெக்ட்ரம்

தமிழ் இசைக்குழு

We can entertain you with live Tamil songs as you have never heard before.
Over electronic orchestra produces real music

(தனித்துவ வடிவம்பெற்ற இசை)
உங்கள் மங்கலகரமான எவ்வகை இசை நிகழ்ச்சிகளுக்கும் தொடர்புகொள்ள

T.சுரேன்

**020 87642458/ 07879682121**

Pub.Lon-405

---

## பல் டாக்டர் வீ.பழனிவேல்



F.D.S.R.C.S (England)

0208-472-9429
127, Greengate Street,
Plaistow
London E 13

இலங்கையில் கொழும்பு, கல்முனை வைத்தியசாலைகளில் மூன்று வருடம் கடமை புரிந்த அனுபவமும், இலண்டனில் இருபத்து மூன்றுவருட அனுபவமும் உள்ள பல்டாக்டர்.

பல்முக அழகு சிகிச்சை (Cosmetic Dentistry) சிதைந்த பற்களை மீளமைப்பு (Restoration) கம்பிகள் மூலம் ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் (Orthodontics) முரசில் இரத்தம் வருதலைத் தடுக்கும் Periodontal சிகிச்சை மற்றும் பல், முரசு தாடை எலும்புகள் சம்பந்தமான சத்திர சிகிச்சைகள் உட்பட எல்லாவிதமான சிகிச்சைகளும் செய்ய வசதிகள் உண்டு.

**Underground: Plaistow (District Line)**
**Fellowship In Dental Surgery of The Royal College of Surgeons of England.**

Pub. Lon-401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சில் உள்ள சகல தமிழர்களின் வர்த்தக ஸ்தாபனங்களில் அமோக விற்பனையில்

ஒரே தொடர்பில் யாழ்ப்பாணத்திற்கு உடனடி இணைப்பு

# GALAXY 2002 7/7 24/24 Beta ONE


உத்தரவாதம் | நம்பிக்கை | சேமிப்பு

France இல் இருந்தபடியே USA, Canada, UK மற்றும் சகல ஐரோப்பிய நாடுகள் முழுவதற்கும் தொடர்பு கொள்ளக்கூடிய Galaxy, Beta One, Euro Gold Phone Card தற்போது சகல தமிழர் வர்த்தக ஸ்தாபனங்களில் அமோக விற்பனையிலுள்ளது.










CANADA QUICK TEL COMMUNICATION உடன் France QTC Network உம் இணைந்து உற்பத்தி செய்யும் தொலைபேசி அட்டைகளான GALAXY & BETA ONE


FRANCE முழுவதும் வாழும் இலங்கை இந்திய மக்களுக்கு ஒரு நற்செய்தி, அதிகரிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்து உற்பத்தி செய்யும் தொலைபேசி அட்டைகளான GALAXY & BETA ONE

FRANCE முழுவதும் வாழும் இலங்கை இந்திய மக்களுக்கு ஒரு நற்செய்தி, அதிகரிக்கப்பட்ட நிமிடங்களுடனும் உடனடி இணைப்புடனும் சகல வர்த்தக நிறுவனங்களிலும் விற்பனைக்கு வந்துள்ளது GALAXY BETA ONE தொலைபேசி அட்டைகள்.
அளவைகள் அனைத்தும் தமிழில் பெற இலக்கம் 3ஐ அழுத்தவும்.

## QUICK TEL COMMUNICATION + QTC Network
## நிறுவனங்களின் சேவைகள்

1. சர்வதேச தொலைபேசி அட்டைகளின் உற்பத்தி உங்கள் பெயர்களில்
2. வீடுகளுக்கு தொடர்புகள் (LINE) கொடுத்தல். (நீங்கள் உரையாடும் நிமிடங்களுக்கு மட்டுமே பணம் அறவிடப்படும்)
3. Call Box களுக்கான தொடர்புகள் (LINE) கொடுத்தல். சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த விலையில்
4. மொத்தமாக நிமிடங்கள் விற்பனை செய்தல். சகல நாடுகளுக்கும்

இலங்கை 80 நிமிடம் N° LOCAL

இப்போது இணையத்தளம் மூலமாகவும்
Galaxy + Beta One அட்டைகளை
பெற்றுக்கொள்ளலாம்.
**www.Qtc.fr**

இந்தியா 50 நிமிடம் N° LOCAL

மிக விரைவில் உலகம் முழுவதிலும் இருந்து வெவ்வேறான நாடுகளுக்கு தொடர்பு கொள்வதற்குரிய Travalling Card வெளிவர இருக்கின்றது.

**பிரான்சின் சகல பகுதிகளில் இருந்தும் விநியோகஸ்தர்கள் தேவை**

**எச்சரிக்கை!**
**போலி வியாபாரிகளுக்கு!!**

எங்களுடைய வரைபடங்களையோ அல்லது Logo வையோ, எமது அட்டைகள் போன்று பிரதி செய்பவர்களுக்கு எதிராக சர்வதேச வியாபாரச் சட்டத்தின் கீழ் உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

## புதிய நேரங்கள்

| DESTINATIONS | N° Local | N° Vert | DESTINATIONS | N° Local | N° Vert |
|---|---|---|---|---|---|
| ALGERIE | 90 | 80 | MALI MOBILE | 60 | 50 |
| ALLEMAGNE | 609 | 223 | MAROC | 76 | 60 |
| AUSTRALIE SYDNEY | 1088 | 266 | MAROC CASABLANCA | 78 | 63 |
| BANGALADESH | 50 | 45 | MAYOTTE | 76 | 60 |
| BANGALADESH CHITTA | 94 | 76 | NEWZEALAND | 476 | 202 |
| BANGALADESH DHAKKA | 96 | 75 | PAYS-BAS AMST. | 609 | 223 |
| BENIN | 58 | 50 | PAKISTAN | 50 | 45 |
| BOTSWANA | 86 | 69 | PAKISTAN MOBILE | 50 | 45 |
| BURUNDI | 58 | 49 | PEROU LIMA | 270 | 130 |
| CAMEROUN DOUALA | 97 | 76 | PHILIPPINES | 120 | 90 |
| CAMEROUN | 60 | 50 | PHILIPPINES MOBILE | 100 | 90 |
| CANADA | 626 | 300 | POLOGNE | 129 | 94 |
| CENTRE AFRIQUE | 46 | 40 | POLOGNE VARSOVIE | 234 | 140 |
| CHILI SANTIAGO | 357 | 130 | PORTUGAL LISBONNE | 371 | 180 |
| COLOMBIE BARRANQUILLA | 100 | 78 | RUSSIE MOSCOU | 331 | 170 |
| COMORES | 70 | 60 | SENEGAL DAKAR | 70 | 62 |
| COMORES MOBILE | 60 | 50 | SENEGAL MOBILE | 60 | 51 |
| CONGO | 70 | 60 | SINGAPORE | 476 | 202 |
| EGYPTE | 70 | 60 | SINGAPORE MOBILE | 448 | 197 |
| CÔTE D'IVOIRE | 72 | 54 | SOMALIE | 35 | 31 |
| CÔTE D'IVOIRE MOBILE | 72 | 54 | SRILANKA Colombo, Jaffna, Vavuniya Trincomalee, Batticaloa, Mannar | 60 | 50 |
| FRANCE MOBILE | 90 | 70 | SRILANKA MOBILE | 50 | 45 |
| GABON | 80 | 60 | SUISSE ZURICH | 609 | 223 |
| GAMBIE | 58 | 49 | TCHAD | 35 | 31 |
| GHANA | 70 | 60 | THAILAND BANGKOK | 100 | 80 |
| HONGKONG | 461 | 200 | TOGO | 58 | 50 |
| HONGKONG MOBILE | 381 | 183 | TUNISIE | 75 | 60 |
| INDE | 50 | 45 | UK LOCAL | 1020 | 262 |
| INDE MOBILE | 50 | 45 | UK MOBILE | 35 | 31 |
| KENYA NAIROBI | 46 | 40 | USA | 625 | 300 |
| LIBAN | 101 | 67 | VENEZUELA CARACAS | 140 | 82 |
| LIBAN MOBILE | 36 | 32 | VIETNAM | 33 | 30 |
| MADAGASCAR | 50 | 43 | ZAIRE | 60 | 50 |
| MALI | 60 | 50 | ZAIRE MOBILE | 48 | 42 |
| MALI BAMAKO | 70 | 60 | ZIMBABWE | 39 | 35 |

மேலதிகத் தொடர்புகளுக்கு:
**QTC NETWORK INTERNATIONAL**
**137, BD VOLTAIRE**
**75011 PARIS, FRANCE.**
**TEL: 01 43 72 77 77 FAX: 01 43 72 16 00**
**WWW.QTC.FR**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஜேர்மனிக்கிளை நடாத்தும்



விடுதலை கானம்பாடி
2002

சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி

தமிழீழம் இசைக்குழுவின் பின்னணி இசையில்
ஆண்குரல் - பெண்குரல் சிறுவர் குரல் - மழலையர் குரல்
நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும்
மாபெரும் பாடற் போட்டி!!!!

இடம்:
Wupperhalle
Hunefeld Str.63 b
42285 Wuppertal

காலம்:
14.09.2002
சனிக்கிழமை
15.00 மணி

இடையிடையே விடுதலை நடனங்கள் வழங்குபவர்கள்
கலைபண்பாட்டுக் கழகத்தினர்
விடுதலையை இசைப்பவரின் விவேகத்தைக் காண வாரீர்!!

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - ஜேர்மனிக்கிளை

International Calling Card
ICC




Direct Connection with Srilankan Telecom

* ➲ இலங்கை Telecom இன் நேரடி இணைப்பு!
* ➲ தொடர்ச்சியான நான்கு வருட சேவை!!
* ➲ மிக துள்ளியமான ஒலி நயம்!!!

உலகமெல்லாம் உள்ள உறவுகளோடு-மிக மலிவான
விலையில், நிறைவாக உரையாட

ICC International Calling Card

"Someone Somewhere is thinking abut you"

சகல வர்த்தக ஸ்தாபனங்களிலும் கிடைக்கும்.

For Details
Tel: 020 89 06 91 03 / 077 470 64 596
www-iccphonecard.com

U.K., France ஆகிய நாடுகளுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.

Pub.Lon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாதம்
Eelanatham வெள்ளிநாதம்

# முதற்கட்ட நம்பிக்கை தரும் எச்சரிக்கைகள்

இந்த வாரத்தில் சர்வதேச சமூகத்தின் கவனம் பெருமளவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையே தாய்லாந்தில் நடைபெற்ற முதலாம் கட்டப்பேச்சுவார்த்தையின் நகர்வு நோக்கி குவிமையப்படுத்தப் பட்டிருந்தது.

வெகுசனத் தொடர்பூடகவியலாளர்கள், ராஜதந்திரிகள் சமாதான ஆர்வலர்கள் என அனைவரது நோக்கமும் தாய்லாந்து பேச்சுவார்த்தையின் முதற்கட்ட நகர்வுகளின் பெறுபேறுகளை அறிந்து கொள்வதிலேயே லயித்திருந்தது.

எல்லாவற்றிலும் மேலாக சிறீலங்காவின் சமாதானத்திற்கு எதிரான அமைதித் தீர்வு நடவடிக்கைகளை நிராகரிக்கும் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் இந்த முதற்கட்டப் பேச்சுவார்த்தையே 'கோணலாக' மாறாதா என்ற ஆதங்கத்துடனும் வெற்றிகரமாக அமைந்தால் 'இரண்டாம்' கட்டத்தை எவ்வாறு குழப்பலாம் என விழிபிதுங்கி மனமெரியும் நச்செண்ணத்துடனும் தங்களது கவனஈர்ப்பினையும் நெடுமூச்சுடன் தாய்லாந்திலேயே நிலை கொள்ளச் செய்திருந்தனர்.

எதுவானாலும் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினையும் அவர்களது தியாக 'வீர' அர்ப்பணிப்புடன் கூடிய நியாயமான போராட்டமும் விடுதலையுணர்வு மிக்க அவர்களின் சுதந்திர தாகமும் சர்வதேச சமூகத்தாரை அக்கறையுடன் அவதானிக்கப்பட்டு வந்துள்ளது என்பதுடன் அவர்களது பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் நியாயமான அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் தீர்வொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கான அமைதிப் பேச்சுவார்த்தையில் தங்களின் பங்கினை மனமுவந்து ஆற்ற முன்வந்து தீவிரமாகச் செயற்படவும் வைத்துள்ளமையானது தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மைக்கும் அதனை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் கிடைத்த பகிரங்கமான அசைக்க முடியாத உலக அங்கீகாரம் என்பது இப்போது உறுதிசெய்யப்பட்டும் விட்டது.

'பயங்கரவாதம்' 'பயங்கரவாதிகள்' என விடுதலைப் போராட்டத்தையும் அதற்குத் தலைமை வகித்த விடுதலைப் புலிகளையும் வர்ணித்து அதன் செயற்பாட்டுக்குத் தடை விதித்து சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கால கதிர்காம மந்திரியின் பொய்ப் பிரச்சாரங்களுக்குசெவி சாய்த்துச் செயற்பட்ட நாடுகள் தான் இந்தப் பேச்சுவார்த்தையின் ஆதரவுச் சக்தியாக பின்னின்று உழைக்கின்றன என்ற விடயமே இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும்.

நியாயமான பிரச்சினைகள் குறித்துத்தான் சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்கும் நியாயமான கோரிக்கைகள் குறித்து நியாயமாகப் போராடுபவர்களுடன் தான் அது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என ஒரு உலகப் பொதுநோக்கு உள்ளதென்றால் அந்த வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டமும் நியாயமானதுதான் என தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பகட்டம் ஐயமற்ற அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

இதுவே இப்பேச்சுவார்த்தையின் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த முதல் பாரிய வெற்றியும் சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளுக்கு கிடைத்துள்ள மரண அடியுமாகும். பேச்சுவார்த்தைக்கான எமது முதல் 'அடி' அத்திவாரம் அழுத்தமானதாக பதிய வைக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தையின் முதற்கட்ட அமர்வுகள் பேசப்பட்ட விடயங்களில் சர்ச்சைக்குரிய விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் மிக நுட்பமாகத் தவிர்க்கப்பட்டு முரண்பாடின்றி உடன்பாடு காணப்பட வேண்டிய மக்களின் இயல்பு வாழ்வுக்கும் புனர்வாழ்வுக்கும் தேவையான அத்தியாவசிய விடயங்கள் குறித்து பரஸ்பர புரிந்துணர்வுடனும் சினேகபூர்வ அணுகுமுறையுடனும் கலந்துரையாடப்பட்டதாக இருதரப்பும் கூறியிருப்பது திருப்தியும் நம்பிக்கையும் தரும் விடயமாகும்.

இந்தப் பேச்சுக்களின் சாராம்ச மூலங்கள் குறித்து இதன் பின்னணி ஆதரவுச் சக்திகளாக இயங்கும் நாடுகளுடன் அனுசரணையாளர்கள் விபரித்து கலந்துரையாடவுள்ளதாகக் கூறப்படுகிறது. பேச்சுவார்த்தைகள் மிகவும் நல்லபடியாக அமையும், அதனைக் கட்டியெழுப்ப நாங்கள் சிறந்த அத்திவாரத்தை இட்டுள்ளோம் என சிறீலங்காவின் பிரதிநிதியாக பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியிருப்பது சமாதான ஆர்வலர்களுக்கும் அமைதியை விரும்பும் மக்களுக்கும் நம்பிக்கை தரும் விடயமாகும்.

முதற்கட்டப் பெறுபேறுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அடுத்த கட்டச் சந்திப்புக்கான நிகழ்ச்சிநிரல் வரைபுகள் தயாரிக்கப்படும் போது முக்கிய பிரச்சினைகள் தொடர்பான அம்சங்கள் உள்ளடக்கப்படலாம் என்றாலும் இவை கவனமாகவும் நிதானமாகவும் இதய

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

## பிரமுக அறிமுகம்

# 'துக்ளக்' பத்திரிகை ஆசிரியர் சோ

இராமசாமி என்ற மனிதனை பலர்அறியாமல் இருக்கலாம். இந்தியாவில்- அதுவும் தமிழகத்தில் இராமசாமி என்ற பெயருடைய பேர்வழிகள் பல்லாயிரம் இருக்கையில் எந்த இராமசாமியை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்ற கேள்வியும் எழலாம். அவருடைய பெயரின் முன்னெழுத்தை மட்டும், பேரைத் தவிர்த்துவிட்டுக் கூறினால் உடனே அவரின் பிறமுகம் அறிமுகமான முகமாகிவிடும்.

'சோ' அந்தளவுக்கு பல பரிமாணங்களில் பிரபலமான முகத்திற்குரியவர்தான். வழக்கறிஞர், சட்ட ஆலோசகர், நாடக ஆசிரியர், நாடக மற்றும் திரைப்பட நடிகர், இயக்குநர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், அரசியல் விமர்சகர், பிராமணியச் சிந்தனையாளர், விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பாளர் இப்படி அவருக்குப் பல அவதாரம் உண்டு.

ஏக காலத்தில் பல அவதாரங்களில் இயங்கும் திறனும் உண்டு. இதுவே அவரது பிரபல பிறமுகத் தன்மைக்கும் காரணமாகும். ஒரு வழக்கறிஞராக கல்வி கற்கும் காலத்திலேயே தமிழகத்தின் நாடகமேடைகளில் ஒரு நகைச்சுவை நாடகாசிரியர், இயக்குநர், நடிகர் என்ற பல முகங்களில் தன்னை அறிமுகம் செய்துகொண்ட சோவின் 'அரசியல் நையாண்டித்' தனமும் 'திருதிருவென' முழிக்கும் திருட்டு விழிகளைக் கொண்ட முகத்தின் அசட்டுக்கோமாளித்தன நடிப்பும் தமிழக மக்களே அதிலும் குறிப்பாக மத்தியதர மேல்தர வர்க்கத்தினர் மத்தியில் அவரைப் பிரபலமாக்கியது.

அரசியலை அதிலும் ஏற்கனவே கேலித்தனமான இந்திய-தமிழக அரசியலையும், கோமாளித்தனமான அரசியல்வாதிகளையும் மேலும் நையாண்டி செய்து விமர்சிக்கும் அவரது நாடகங்கள், எல்லாவற்றையும் பொழுது போக்காகவே பார்க்கும் தமிழகத்தின் தலைநகரத்தில் வாழும் மக்களிடையே பெரும்வரவேற்பை பெற்றதில் வியப்பில்லை.

நாடகத்தனமான இந்திய அரசியலில் கோமாளித்தனமான அரசியல்வாதிகளுக்கு குறைவேயில்லாததால் சோவின் அரசியல் நையாண்டி நாடகங்களுக்கான கருப்பொருளுக்கும் குறைவே இருக்கவில்லை. கிட்டத்தட்ட சகல அரசியல்வாதிகளையும்அவர் தனது நாடகங்களில் அசையும் கேலிச்சித்திரங்களாக்கினார். அரசியல்வாதியாகத் தன்னை மாற்றாமல் அரசியல் பேசியே, அரசியலுக்குள் தன்னை ஒரு முக்கியஸ்தராக மாற்றிக்கொள்ள அவர் எடுத்த திரைமறைவு முயற்சிகள் அனேகம்.

ஆனால், அவரை எல்லோரும் ஒரு கோமாளியாகவே அடையாளப் படுத்திக்கொண்டதால் அரசியலில் அந்தக் கட்டத்தை விட்டு அப்பால் செல்ல அவரால் முடியவில்லை. அது இன்னொரு கோமாளி அரசியல்வாதி நடிகர் தமிழக அரசியலில் உருவாகும் ஆபத்தைத்தவிர்த்தது.

இல்லாவிட்டால் ஒரு நவீன முகம்மது பின் 'துக்ளக்' தமிழகத்தில் முதல்வராகி தமிழகம் படாதபாடு பட்டிருக்கும். நாடகமேடை அவரை சினிமாவரை இட்டுச்சென்றது.

நடிகர், கதாசிரியர், தயாரிப்பாளர், இயக்குநர் என கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் திரையுலகில் கொடிகட்டிப்பறந்தார்.

துக்ளக் பத்திரிகையின் தோற்றம் அவரை ஒரு அரசியல் நையாண்டி விமர்சகர் என்ற பிரபலத்தை பெற்றுக்கொடுத்தது. அவரின் பிராமணிய சிந்தனையும், பற்றும், திராவிட கட்சிகளின் தீவிர எதிர்ப்பாளராக்கியது.

ஆத்தீகக் கொள்கை வெறி, நாத்தீக கோட்பாட்டாளர்களை கடுமையாக விமர்சித்தது.

தேசியக் கட்சி முதல் மாநிலக்கட்சி வரை சகலதையும் உக்கிப்போகும் அளவுக்கு நையாண்டி செய்து விமர்சித்தார். அவரது சட்ட அறிவை தனக்கான பாதுகாப்பு கவசமாக்கிக்கொண்டார் ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சியே தனது கட்சி என பிரகடனம் செய்தார். எல்லாவற்றையும் தமிழ்மக்கள் அவரைக் -கோமாளித்தனமாக- ரசித்து கைதட்டியதை மக்கள் தனது கருத்தை ஆதரிக்கிறார் என நினைத்துக் கொண்டது தான் அவரது பலவீனம்.

ஈழத்தமிழர் போராட்டத்தையும், விடுதலைப் புலிகள் அமைப்பையும் குறிப்பாக எமது தேசியத் தலைவரையும் கொச்சைப்படுத்துவதும் விமர்சிப்பதும் இவரது இலட்சிய பொழுது போக்கு.

இந்தியப்படை தமிழீழப் பிரதேசத்தில் நிலை கொண்டு ஆக்கிரமிப்பு யுத்தம் செய்தவேளை அதை நியாயப்படுத்தி ஊடகங்களூடாக உளறியவர்களில் இவர் முக்கியமானவர்.

இவரை சி.ஐ.ஏ.யின் முகவர் என ஒரு சாராரும் இந்திய 'றோ' அமைப்பின் முகவர் என வேறொரு சாராரும் விமர்சிப்பது வழக்கம்.

சில காலம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராமின் அரசியல் ஆலோசகராகவும் இவர் இருந்துள்ளார் என்றால் இவர் எப்படிப்பட்டவர் என்பதை நீங்களே ஊகிக்க முடியும். கோமாளி ராணிக்கு கோமாளி மந்திரி பொருத்தம்தான் என்கிறீர்களா?

எல்லோரையும் கிண்டல் செய்து ஏமாளிகளாக்கிய இவரை இன்னமும் தமிழ் மக்கள் ஒரு கோமாளி என்ற ஸ்தானத்தை விட்டு இறக்காமல் இருப்பதுதான் சோவின் சித்தாந்தங்களுக்கு கிடைத்த படுதோல்வியாகும்.

சோவின் சில கோமாளித்தனங்களை மறக்க மட்டுமல்ல மன்னிக்கவும் முடியாதுதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுக்கென...

## பாதுகாப்பு ஏற்பாடுகள்

ஒரு புறம் சமாதான நகர்வுகள் நடந்துகொண்டிருக்கும் அதே சமயம் அரசாங்கம் பாதுகாப்பு படையினருக்கு வளம் சேர்க்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதும் தெளிவான விடயமாகிவருகிறது.

அண்மைக்காலங்களில் பிரிட்டன், சீனா, பாகிஸ்தான், இந்தியா என சிறீலங்கா பிரதமரும், அமைச்சர்களும் தாம் விஜயம் மேற்கொள்ளும் நாடுகள் ஒவ்வொன்றுடனும் மேற்கொள்ளும் ஒப்பந்தங்களில் பாதுகாப்பு தொடர்புடைய ஏதோ ஒரு வகையிலான உடன்படிக்கைகளும் அடங்கியுள்ளது என்ற விடயம் இரகசியமான விடயமல்ல.



அமெரிக்கா நேரடியாக சிறீலங்காப் படைகளுக்கு பயிற்சிகளையும் ஏனைய பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைகளையும் தொடர்ச்சியாக வழங்கிவருவதும் தெரிந்த விடயம்தான். குறிப்பாக அமெரிக்க இலங்கைப் படையினர் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப்பயிற்சி நடவடிக்கைகள் ஆண்டுதோறும் வெவ்வேறு பெயர்களிலும், துறைகளிலும் நடைபெற்றே வருகின்றன.

அமெரிக்க படையினரும் இலங்கைப் படையினரும் இணைந்து கடந்த மூன்று வாரங்களாக நடாத்திய கூட்டு இராணுவப் பயிற்சி இப்போது முடிவடைந்துள்ளது.

சிறீலங்காவின் விசேட படையணியினரும் (Special Force) கடற்படையினரின் விசேட படக்குப்பிரிவினரும் இணைந்தே அமெரிக்கப் படையினருடன் இந்தப் பயிற்சி நெறியை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறீலங்காப்படையினரின் போர் வலு ஆற்றலை மேம்படுத்தவே இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட குறிப்பு என்று தெரிவித்துள்ளது.

போர்முனையில் கண்காணிப்புநடவடிக்கைகள் நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்திமேற்கொள்வது தொடர்பாக விசேட படையினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இது ஒரு புறமிருக்க அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையே பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்வது குறித்து அண்மையில் றிச்சர்ட் ஆர்மிரேஜின் சிறீலங்காவுக்கான விஜயத்தின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஆக: சமாதான முனைப்புக்களுடன் போர்த்தயாரிப்புக்களையும் சிறீலங்கா அரசு தீவிரமாக மேற்கொள்வதாகவே தெரிகிறது. சிறீலங்கா பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன அண்மையில் படையினர் எதற்கும் தயாரான நிலையில் எப்போதும் இருக்கவேண்டும் எனச் சொன்னது இப்போது நினைவுக்கு வரவே செய்கிறது.

சமாதானத்தை வரவேற்று பாராட்டும் நாடுகளே சிறீலங்காவுக்கு யுத்தத் தயாரிப்பிலும் உதவுவது தான் முரண்பாடான விடயம்.

## ஜே.வி.பி.யின் இன்றைய மூச்சு

சிறீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எல்லா வகையிலும் பணிந்து விட்டுக்கொடுக்கிறது. `சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகளின் கைப்பாவையாகி விட்டது. அவர்கள் சொல்படி எல்லாம் கேட்கிறது'



`விடுதலைப் புலிகளுடன் அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டதன் மூலம் சிங்கள பௌத்த மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டது. `ரணில் பிரபாகரனுக்கு நாட்டை தாரை வார்த்துக்கொடுக்கப் போகிறார்'

இவையெல்லாம் இன்றைய ஜே.வி.பியின் சிங்கள மக்களுக்கான எச்சரிக்கையுடன் கூடிய அச்சுறுத்தல்களாகும்.

குறிப்பாக விமல் வீரமன்ச என்ற ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளரின் இன்றைய கோஷம் மேற்சொல்லப்பட்ட கருத்துக்களைக் கொண்டதாகவே அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் ஜே.வி. பி யினரின் சந்தர்ப்பவாத சோசலிச சித்தாந்த கோஷம் படுதோல்வி கண்டுவிடும் வேளையில் வேறு எந்த வகையில் மாற்றுக் கருத்தையும் முன்வைக்கத் தெளிவற்ற நிலையில் இனவாதத்தைக் கையில் எடுத்துள்ள `வீரவன்ச விடுதலைப்புலிகளை எதிர்ப்பதன் மூலமும், சமாதான நடவடிக்கைகளை நிராகரிக்க முயல்வதன் மூலமும் ஒரு பரபரப்பு அரசியலை நடத்த முயல்கின்றார்.'

அநுராபண்டாரநாயக்கா ஜே.வி.பியுடன் அவர்களின் விடுதலைப் புலிகள் மற்றும் சமாதான எதிர்ப்புப் போராட்டங்களில் இணைந்து நிற்பதுவும் வீரவன்சவின் உளறல்களுக்கு ஒத்தூதுவதும் தான் இன்றைய சிறீலங்கா அரசியலின் நகைச்சுவை காட்சிகளாகி வருகின்றன.

`நீல, நிற பொதுசன ஐக்கிய முன்னணியும், சிவப்பு நிற ஜே.வி.பியும் தமது இணைந்த செயற்பாடுகளின் மூலம் தத்தம் சுயத்தன்மையை இழந்து போயுள்ளதுடன் `யாரால் யார் கெட்டார் எனப் புலம்பும் நிலை நோக்கி நகர்வதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எதுவானாலும் இன்றைய ஜே.வி.பியின் உயிர்வாழ்தலுக்கும் விடுதலைப்புலிகள் பற்றிய அவர்களின் பேச்சுத்தான் மூச்சாக உள்ளது...

## மேயரின் ஆதங்கம்

சமாதான நகர்வுகளின் ஓரம் சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் சிறீலங்காவின் ஆளும் ஐ.தே.க முன்னணி அரசின் அமைச்சர்கள் வடபகுதிக்குக் குறிப்பாக யாழ். குடாநாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்வதென்பது மிகவும் சர்வசாதாரணமாகிவிட்டது.

முன்னர்... அதாவது ஈழப்போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் இயல்பான அமைதிநிலை நிலவிய காலத்தில்கூட இந்த அளவுக்குச் சிங்கள அரசின் அமைச்சர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்தது கிடையாது.



ஒவ்வொரு அமைச்சரினதும் வடபகுதிக்கான விஜயம் என்பது எத்தனை எடுபிடிகளுடன் எவ்வளவு கெடுபிடிகளுடன் நடக்கும் என்பதை எவருக்கும் விளங்கப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. பல இலட்சங்களை விழுங்கிவிடும் சமாச்சாரம் இதுவாகும். அது மட்டுமல்ல எவ்வளவோ நேர விரயங்களும் இதனால் ஏற்படுகின்றன.

அமைச்சர்களது விஜயம் எதனைக் குறிக்கோளாகக் கொண்டதாக இருந்தாலும்கூட அதனால் ஏற்படும் பொருள் விரயமும் நேரவிரயமும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது.

எனினும் இதுபற்றி எவரும் அலட்டிக்கொள்வதும் கிடையாது அக்கறை கொள்வதும் கிடையாது.

அரசுப் பணம்தானே என நினைக்கும் பலரும் அதனை மக்களின் வரிப்பணம்தான் என எண்ணத் துணிவதில்லை.

அண்மையில் மாத்தளை சமாதானக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் யாழ். மாநகர பிதா கந்தையா கூறிய சில வார்த்தைகளை நினைவில் கொள்வது இந்தச் சமயத்தில் நல்லது.

`அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதற்கு ஏற்படும் செலவுத் தொகையையும் ஏனைய அதனுடன் தொடர்பான நிகழ்ச்சிகளுக்குச் செலவாகும் பணத்தையும் மாநகரசபைக்குத் தந்தால் மக்களின் தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்ய முடியும்' என அவர் தெரிவித்துள்ளார்.

மாநகர பிதா கந்தையன் பல விடயங்களை இதன்மூலம் நறுக்கென உரைக்கும்படி சொல்லியுள்ளார் என்றே கூறவேண்டும்.

யாழ் மாநகரசபைக்கு அதன் நிர்வாகத்திற்கு மாநகருக்கான அபிவிருத்திப் பணிகளுக்கென அரசு போதியளவு நிதியை ஒதுக்கீடு செய்யவில்லை என்ற செய்தியை அவர் இதன் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஏன் அவரின் அலுவலகப் பாவனைக்குக் கூட ஒரு வாகனம் கிடையாது அவஸ்தைப்பட்ட அவருக்கு அண்மையில் ஒரு நிறுவனம் `ஓட்டோ வாகனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.'

இந்த நிலையில் யாழ்.மாநகரசபை நிர்வாகம் எந்த வகையில் அமைந்துள்ளது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தேர்தலுக்குக் கோடிக்கணக்கில் செலவு செய்து தெரிவாகும் நிர்வாகத்திற்கு உரிய நிதி ஒதுக்கப்படாவிடில் அந்தச் சபையால் என்ன பயன்?

மேயர் கந்தையன் தனது மன ஆதங்கத்தை இதன் மூலம் வெளிக்காட்டியுள்ளார்.

அரசு ஏனைய மாநகர சபைகளை எவ்வாறு கவனிக்கிறது என்பதற்கு அந்த மாநகரங்களின் வளர்ச்சிகளே சான்றாகும். வடக்குக் கிழக்கு நிர்வாக அலகுகள் எப்போதுமே மாநகரத்தையே பாதித்ததுடன் அரசால் பார்க்கப்பட்டு வருகின்றன.

## தாய்லாந்தினை குவிமையப்படுத்த முனையும் சிறுபான்மைத் தலைமைகள்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தை தொடர்பாக பலரும் பலவிதமான கருத்துக்களைக் கொண்டு இயங்க முற்படுபவர்களாகவே உள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கும் இதனைப் பயன்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள நினைக்கிறது ரவூப் ஹக்கீம். இது விடயத்தில் முன்னுக்குப் பின் முரணாகவும், அரசுக்கு சார்பாகவும், சில வேளைகளில் அரசுக்கு எதிராகவும் கருத்துக்களை முன்வைத்து, இன்றைய அரசியல் நெருக்கடிக்குள் அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார்.



இதேவேளை மலையக மக்களின் பிரச்சினைகளையும் இந்தப் பேச்சுவார்த்தை வட்டத்திற்குள் கொண்டு வந்து தனது அரசியல் இருப்பை உறுதி செய்யும் போக்கில் இப்போது பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் இறங்கியுள்ளார்.

தாய்லாந்து பேச்சுவார்த்தையைத் தவறவிட்டால் மலையக மக்களின் உரிமைகளை வெல்வது என்பது சாத்தியமற்றதாகிவிடும் என்று மனோ கணேசன் தெரிவித்திருப்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஒரு காலத்தில் மலையகம் ஆங்கிலேயருக்கு அடிமையாக இருந்தது. இப்போது சிங்களவருக்கும் மலையகத் தலைமைகளுக்கும் அடிமையாகவுள்ளது. இந்த நிலை மாறவேண்டும். இதற்கு நாம் தொடர்ந்து போராட வேண்டும். இடையறாது போராடியதால்தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இன்று தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடைபெறப்போகின்றது எனத் தெரிவித்துள்ள மனோ கணேசன் இந்தப் பேச்சுவார்த்தைகளில் மலையக மக்களின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் அனைத்து சிறுபான்மை இனத்தவரின் அபிலாசைகளையும் ஒன்றிணைக்கும் சக்தியாக உருவெடுத்துள்ளதையே இது காட்டுகிறது. முஸ்லிம்கள் வேறு மலையகத்தவர் வேறு எனப் பிரிவுகாட்டி நின்ற தலைமைகள் தாய்லாந்துப் பேச்சுவார்த்தையைத் தங்களது பிரச்சினைகளாயும் முன்வைக்கும் களமாகத் பயன்படுத்த நினைப்பது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைத்த மற்றொரு மகத்தான வெற்றியென்றே கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

# இன்னொரு போர் முகம்



-போராளி தூயவன்-

இவர்கள் அறுவரும் வெளிக்கிடும்போதுதான் அவர்களில் ஒருவன் சொல்கின்றான் `அண்ணே, என்.... னால... ஏலாது... காலில் வெடி பிடிச்சிட்டுது' `ஏன்ரா இவ்வளவு நேரமும் சொல்லேல்ல...' கபிலப்பாவின் குரலில் கோபம் பிரதிபலிக்கின்றது. அவனிடம் சென்று காயத்தைத் தடவிப் பார்த்து பாதம் ரவையினால் ஊடுருவப்பட்டிருப்பதை உறுதி செய்தது. பீல்ட் கொம்பிறஸ் வைத்துக்கட்டுகின்றார். பின்னர் அவனை ஒருவன் தோளில் தூக்க எல்லோரும் விரைவாக அவ்விடத்தைவிட்டு விலகுகின்றார்கள். இப்போது இவர்கள் முழங்காலளவு சேறுபுதைக்கும் கண்ணாக்காலடொன்றினை காயமடைந்த தமது தோழனுடன் வந்தடைகின்றனர்.


முழங்காலிற்கு மேல் புதைவதும் ஒவ்வொரு காலாகத் தூக்கும் போதும் மற்றக்கால் புதைவதுமாக இருக்கின்றது. சாதாரண மனநிலையில் இதனூடு நடப்பதைக் கற்பனை செய்வதே கடினம். ஆனால் இதனைக் கடந்தே ஆகவேண்டும். விடிந்தால் எப்படியும் இவர்களைச் சுற்றிவளைக்கப்பட்டுவிடுவார்கள். காயமடைந்தவனை

## -பயணத் தொடர்-

இப்போது கிடையாகக் கிடத்தி நீரில் மரக்கட்டையை இறுக்கி முடிவது போல் இழுக்கிறார்கள். எம் தோழனைக் காக்க இதுவே இப்போது வழி. அவன் `என்ர அம்மா, அம்மா' என வலியால் கத்துகின்றான். `டேய் சத்தம் போடாத..` கபிலப்பா அதட்டுகிறார். அவன் கேட்டபாடில்லை. தொடர்ந்தும் கத்துகின்றான். `டே அவனைக் கத்தவிடாமப் பார். வாயைப் பொத்து. கத்தினால் கண்டுபிடிச்சுருவாங்கள்' சற்று இரைந்தே கூறுகின்றார். தனது எம்.16 உடன் முன்னால் சென்று திசை பிடித்து சுற்றும் முற்றும் பார்த்த வண்ணம் `கெதியா... கெதியா' எனக் கூறுகின்றார். அருண் காயப்பட்டவனின் கொலரிலும் இன்னொருவன் தனது கையை அவனது தோள்மூட்டினுள்ளும் போட்டு கொழுவிய வண்ணம் இழுத்துச் செல்கின்றனர். அவர்களில் `லீச்' அட்டைகள் பற்றிக் கொண்டுவிட்டன. அதனைத் தட்டிவிட்டபடியே நடக்கின்றார்கள். ஒவ்வொரு அட்டையும் ஒருசுண்டு இரத்தம் குடிக்கும். பிடிச்சு இழுத்துக் கழட்ட இயலாது. அப்படிச் செய்தால் தோல் பிய்ந்துபின் புண்வரும். அது இரத்தம் குடிக்கேக்க ஒண்டும் தெரியாது. உப்புத் தண்ணீர் ஒத்தி அல்லது புகையிலைச்சாறு போட்டுத்தான் அதனைக் கழட்ட வேண்டும். எப்பவோ கேள்விப்பட்டது இப்போது ஞாபகம்வர அவனுக்குள் குலப்பன் எடுக்கின்றது. கடவுளே போகேக்கிள்ள இப்படியென்றால் அவனுள் தன்னம்பிக்கைக் குறைவு ஏற்படுகின்றது. `சரி அதற்குப் பிறகு பார்ப்பம்.... இப்ப உயிர்தப்ப வேணும்' தன்னுள் கூறிக்கொள்கின்றார்.

அவர்கள் மிகவும் களைத்துவிட்டனர். சாதாரணமாக 1 கிலோ மீற்றர் தூரம் நடக்கும் உணர்வை 100 மீற்றர் நடக்கும் போதே உணர்கின்றனர். எனினும் உயிர்தப்ப வேண்டும் எனும் வெறி அவர்களை இயக்கிக் கொண்டிருக்கின்றது. இரண்டரை மணித்தியாலயத்தின் பின்னர் அச்சதுப்பு நிலக்காட்டினைத் தாண்டி இன்னுமொரு காட்டினுள் ஏறுகின்றனர். சற்று ஓய்வு எடுத்தபடியே தாங்கள் பாதணிகளைக் கழற்றி அவற்றின் குதியால் தங்களில் ஒட்டியிருக்கும் அட்டைகைள உரஞ்சி விழுத்துகின்றனர். ஒவ்வொரு அட்டையாக விழுந்த போதும் வலிதாங்காமல் `சனியன்... சனியன்` எனத் திட்டுகின்றார்கள். காயமடைந்தவனும் தன்னில் இருக்கும் அட்டைகளை அகற்றுகின்றான். அப்போது கபிலப்பா சொல்கிறார் `நாங்கள் எப்படியும் விடியுறதுக்குள்ள சிவத்தப்பால றோட்டைக் கடக்க வேண்டும். நாங்கள் கட்டாயம் அதக் கடக்க வேண்டுமென்று அவனுக்குத் தெரியும். நிச்சயம் பொசிசன் போடுவான்' என்று கூறிய வண்ணம் வந்த களைப்பு முறியமுன்னர் புறப்பட ஆயத்தமாகின்றனர். கபிலப்பாவும் அவனும் சேர்ந்து தங்களிடம் இருக்கும் `சுவிஸ்நைவ்'ல் உள்ள சிறுவாளினால் இரண்டு நீள நீளமான தடிகளை அறுத்து சாறமொண்டினுள் அவற்றைப் புகுத்தி `ஸ்ரெச்சர்' ஒன்று செய்கின்றனர். அதில் காயக்காரனை இருவர் தூக்க, முன்னால் கபிலப்பாவும் பின்னால் அருணுமாக அறுவரும் மீண்டும் பயணத்தைத் தொடர்கின்றனர்.

மிகவும் அவதானமாகக் குறிக்கப்பட்ட வீதியினை அவதானிக்கின்றனர். எவ்வளவுதான் உன்னிப்பாக அவதானித்தாலும் 2 மீற்றருக்கு மேல் ஒன்றும் தெரியவில்லை. இப்பொழுது வீதியைக் கடக்கின்றனர். எதிர்பார்த்த மாதிரியே இவர்களை நோக்கி `சட்.... சட' எனத் துப்பாக்கிக் குண்டுகள் சீறிவருகின்றன. `ஸ்ரெச்சர்' தூக்கிய ஒருவனைக் குண்டு துளைக்க அவன் `அம்மா' எனக் கத்தவும் `ஸ்ரெச்சர்' கீழே விழவும் அதில் இருந்தவன் எழுந்து திசை தெரியாமல் எதிரிப்பக்கம் ஓடவும் அவனைத் தொடரான ரவைகள் சல்லடை போடவும்... இவர்கள் அனைவரும் தங்கள் துப்பாக்கிகளை இயக்கிய வண்ணம் வீதியைக் கடக்கவும் என எல்லாம் சில கணங்களில் முடிந்துவிட்டது. எஞ்சியவர்கள் காப்புச்சூடு நிகழ்த்திய வண்ணம் தாங்கள் போக வேண்டிய திசையில் பறக்கின்றனர். நின்றால் அறுவர் கதியும் அதோகதிதான். வேறு பிரதேசத்தில் பிறந்து இங்கு வந்து இடமும் தெரியாமல் வலமும் புரியாமல் ஓடிக் கொண்டிருக்கும் அருணின் காதில் காயமடைந்தவனின் அவலக்குரலும் சிங்களத்தில் கத்தியபடியே இவர்களைத் தேடித்தேடி ரவைகளைப் பொழியும் இராணுவத்தினரின் குரல்களும் ரீங்காரம் இட்டுக் கொண்டிருந்தது.



தூரத்தில் இயங்கும் எம்.16ஐ இனங்கண்ட அருண் அது கபிலப்பாதான் என்பதனை இனங்கண்டு அவருடன் இணைந்து கொள்கின்றான். மற்ற இருவரும் இணைந்துகொள்ள ஒருவன் கேட்கிறான் `அவங்கள் இரண்டு பேரும் என்ன மாதிரி?' `அவங்கடை கதை சரி, நாங்கள் நிக்கிறதிலேயும் பிரயோசனமில்லை' சொல்லும் குரலின் தொனியிலும் தப்பி ஓடுவதைத் தவிர செய்வதற்கு வேறுவழியில்லை என்பதும் வெளிப்படுகின்றது. `சரி நாங்கள் போவோம்' கபிலப்பா சொல்லவும்.... வில்லிலிருந்து புறப்பட்ட அம்பென அவர்கள் வேகம் எடுக்கின்றனர். 26 பேருடன் புறப்பட்டு அறுவராகப் பிரிந்து பின் இருவரைப் பிரிந்து அதாவது இழந்து இப்பொழுது நால்வராக இவர்கள் போகும் வேகம்.... போராட்ட வாழ்க்கையில் சாதாரணமானவை என வகைப்படுத்தப்பட்டவைகளில் ஒன்றுதான்.

தொடர்ந்து அவர்கள் நடந்தவண்ணமே உள்ளனர். மாற்று உடைகள் இல்லை. சேறும் சுரியும் புகுந்து உள்ளாடைகள் சொல்லமுடியாத அமைப்புக்கு மாற்றியிருக்கின்றன. வேர்வைகளில் நனைவதும் பின் ஓய்வின்போது உடல்வெப்ப நிலையில் காய்வதும் மீண்டும் நனைவதுமாக கதை தொடர்கிறது. இருக்கும் உலர் உணர்வுகளை உண்டவண்ணமும் குட்டைகளில் குடியிருக்கும் அமீபாக்களை அலட்சியம் செய்தவாறு நீரை அருந்தியுமே பயணம் தொடர்கின்றது. தம்முடன் வந்தவர்களை இழந்த மனப்பாரமும், களைப்பு என்பனவற்றுடன் ஒவ்வொரு அடி வைக்கையிலும் குதிக்காலிலும் பெருவிரல் நுனியிலும் உருவாகி உச்சந்தலைவரை வந்து தாக்கும் வலி என பலகாரணிகள் அவர்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. நடக்கும் போதே சிறிது சிறிது நேரம் மரங்களில் சாயந்து நின்று நித்திரை செய்வது பின் நடப்பது எனத் தொடர்ந்தவண்ணம் உள்ளனர். தொடர்ந்தவர்கள் சூராங்கல் எனப்படும் வீதியை வந்தடைகின்றனர். மீண்டும் கபிலப்பா சொல்கிறார் `இதிலையும் அடி விழலாம்... கவனம்.' `என்ர ஐயோ..... இனி ஏலாது அடிவிழுந்தா தாங்கேலாது. அதிலும் பார்க்க சாகலாம்.' அருணின் உள்ளிருந்த ஒரு மனம் அரற்றுகின்றது. `இல்லை... இல்லை... எப்படியும் போய்ச்சேர வேண்டும்' இன்னொரு மனம் சொல்கிறது. எது நடந்தாலும் பரவாயில்லை என அவர்கள் அந்த வீதியைக் கடக்கின்றார்கள்.

பிரச்சினையில்லை. தொடர்ந்து உப்பாறு எனும் இவர்களின் முகாமுள்ள பிரதேசத்தை வந்தடைகின்றனர். அங்கு நித்திரை செய்துவிட்டு அடுத்த நாள் அவ்வாற்றைக் கடக்கின்றனர்.

75 மீற்றர் அகலமான அவ்வாற்றினைக் கடப்பதற்கு மக்களின் கட்டுமரம் ஒன்றை எடுத்து வந்து துடுப்பு வலிக்கின்றனர். இப்பொழுது திட்டித் திட்டித் தான் எடுத்த கட்டுமரம் வலிக்கும் பயிற்சி கைகொடுக்கின்றது. ஆற்றைக் கடக்கும் போது அரையடி உயரப்புல் முளைத்த ஈச்சமரக்கட்டையொன்று மெல்ல மிதந்து வருகின்றது. மரக்கட்டையில் சேறுசேர்ந்து புல் முளைக்கும்வரை உக்காமல் இது இருக்கின்றதா? என ஆச்சரியத்துடன் பார்க்கின்றான். கபிலப்பா சொல்கின்றர் `அதுதான் புல் முளைத்த முதலை' இவனுக்கு கண் அகல விரிகின்றன. தொடர்ந்தும் அவர் சொல்கின்றார் `பல வருடமா இது இங்க கிடக்குது. 16 அடி நீளம் வரும் சிலவேளை கட்டுமரத்தை வாலால் அடித்துப் பிரட்டிப்போடும்... கவனமாக இருங்கோ. தேவைப்பட்டால் ஓட்டோவில சுட்டுத்தள்ளுங்கோ' கூறியபடி துடுப்பை வலிக்கின்றார்.

அக்கரை வந்து சேர்ந்ததும் 15 நிமிட நடையில் இவர்கள் வனமுகாமொன்றை வந்தடைகின்றனர். அங்கு கஜன் என்பவர் பொறுப்பாக இருக்கின்றார். இவர்கள் நடந்தவற்றைச் சொல்கின்றார்கள். இவர் இவர்களை ஓய்வெடுக்கும்படியும் தான்போய் கிளியர் பண்ணிற்று வாறன் எனவும் கூறிப் புறப்படுகின்றார். இவர்கள் குளித்து உணவருந்தி ஓய்வெடுக்கின்றனர். அடுத்த நாள் கஜன் மிகுதி 20 பேருடனும் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் வந்து சேருகின்றனர்.

மறுநாள் கபிலப்பா, அருண் மற்றும் இருவராக நால்வரும் மூதூர் நோக்கி பயணமாகின்றனர். ஏனையவர்களின் ஆலோசனைப்படி துணியொன்றினால் பொதி செய்யப்பட்ட சிறியளவு உப்பையும் தன்னுடன் அருண் எடுத்துக் கொள்கின்றார். பின்னேரம் 4.30 மணியளவில் மகாவலி கங்கையைக் கடக்கின்றார்கள். கயிறு கட்டி நீரோட்டத்தில் அடித்துச் செல்லாமல் கடக்கின்றனர். தொடர்ந்து நடந்தவர்கள் பூமாலை எனும் வெட்டையை வந்தடைகின்றனர்.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து இடைக்கால நிர்வாகத்தை நோக்கி

– நிலாந்தன் –

செப்ரெம்பர் 11 தாக்குதலின் ஓராண்டு நினைவைக்குறித்து இலண்டனில் இருந்து வெளிவரும் 'இன்ரியென்ரன்' பத்திரிகையில் புரூஸ் அன்டெசன் ஒரு பத்தி எழுதியிருந்தார்.

அதிலவர் செப்ரெம்பர் 11-ற்கு பின்னரான [Post-september 11] அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அதன்படி-தோல்வியுற்ற அரசுகள் முரட்டு அரசுகள் எனப்படும் இருவகை அரசுகளை இனியும் அமெரிக்கா சகித்துக்கொள்ளாது என்று அவர் கூறுகிறார். தோல்வியுற்ற [Failed State] எனப்படுவது உள்நாட்டுப்போரால் சிதைந்த உருக்குலைந்த அரசு ஆகும். அது 'அராஜகம் தீவிரவாதம் பயங்கரவாதம்' போன்றவை அடைகாக்கப்படும் இடமாயிருக்கும் என்று அமெரிக்கர்கள் கூறுகிறார்கள்.

சமாதான முயற்சிகளுக்கு முன்பு இலங்கைத்தீவு இந்தவகைக்குள்ளேயே அடங்கியது. மற்றது முரட்டு அரசு [rough State]. இது சர்வதேச விழுமியங்களுடன் ஒத்தோட மறுக்கின்ற யாருக்கும் கட்டுப்பட மறுக்கின்ற அரசு. பயங்கரவாதம் போதைப்பொருள் வர்த்தகம் ஆயுதக்கடத்தல் போன்றவற்றின் புகலிடமாயிருப்பது இது. அமெரிக்காவின் இந்தப்பட்டியலில் ஈராக் முதலாவதாகக் காணப்படுகின்றது. இவ்விருவகை அரசுகளும் உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தலாயிருப்பதாக அமெரிக்கா கூறுகிறது. எனவே இவற்றைத் துடைத்தழித்து பூமியைத் துப்புரவாக்குவது என்பது இப்பொழுது அமெரிக்காவின் நிகழ்ச்சிநிரலில் முதலாவதாகக் காணப்படுகிறது.

இதன்படி 'தோற்ற' அரசுகளின் விசயத்தில் அங்குள்ள அரசாங்கத்தை அதன் கையாலாகாத்தனத்தைப் பயன்படுத்தி தம்வசப்படுத்தி அதை எல்லாவிதத்திலும் பாதுகாத்து பலப்படுத்தி அதன் மூலம் அங்கே சிதைவுக்கு காரணமாயிருக்கும் சக்திகளை முற்றாகத் தோற்கடித்து விடுவது.

முரட்டு அரசுகளைப் பொறுத்தவரை அங்கே நேரடியாகப் படையை இறக்கி அரசாங்கத்தை யுத்தத்தின் மூலம் அகற்றியபின் தமக்கு சேவகம் செய்யவல்ல ஒரு அரசாங்கத்தை அங்கே ஸ்தாபிப்பது. இதுதான் இப்பொழுது ஆப்கானிஸ்தானில் நடந்துகொண்டிருப்பது. இதைத்தான் அமெரிக்கா ஈராக்கில் செய்ய முயல்கிறது. ஆனால் கொழும்பிலிருந்து வெளிவரும் 'நோத், ஈஸ்ற், ஹெரல்ட்' எனப்படும் தமிழருக்குச் சொந்தமான ஒரு பத்திரிகை சிறீலங்கா இப்பொழுது தோல்வியுற்ற அரசுகளின் பட்டியலில் இல்லை என்று கூறுகிறது. புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கைத்தீவை தோல்வியுறும் அரசு என்ற நிலையிலிருந்து காப்பாற்றிவிட்டது என்று மேலும் அந்தப் பத்திரிகை கூறுகிறது.

கோட்பாட்டளவில் இக்கூற்று சரியானதே. அதாவது இலங்கைத்தீவு சிதைவதைப் புரிந்துணர்வு உடன்படிக்கை தற்காலிகமாகவேனும் தடுத்து நிறுத்தியுள்ளது. ஆனால் யதார்த்தத்தில் 'முழு அளவு இயல்பு நிலையை உருவாக்குவதில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குள்ள போதாமைகள் அல்லது இயலாமைகள் என்பவற்றின் அடிப்படையில் கூறுமிடத்து இலங்கைத்தீவு ஒரு தோல்வியுறும் அரசாக மாறுவதைத் தடுப்பதற்கு இன்னும் நீண்டதூரம் போகவேண்டியிருக்கும் என்றே தோன்றுகிறது.

கொழும்பில் படைத்துறை உயர்மட்டத்தில் ஒரு பகுதியினர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கம் யுத்த நிறுத்தத்தைப் பாதுகாப்பதே தவிர முழு அளவு இயல்பு நிலையை ஸ்தாபிப்பது அல்ல என்று விளக்கமளிப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. அப்படியென்றால் 'இயல்பு நிலையை உருவாக்குவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் அப்பால் ஒரு ஏற்பாடு வேண்டியிருக்கிறதா?'

இது உத்தேச இடைக்கால நிர்வாக அமைப்பிற்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் இடையில் நிரப்பப்படவேண்டிய ஒரு பாரதூரமான இடைவெளி இருப்பதையே காட்டுகிறது. தற்சமயம் தாய்லாந்தில் ஆரம்பித்திருக்கும் பேச்சுக்களின் ஆரம்ப கட்டங்களில் ஏதோவொரு இடைக்கால நிர்வாக அமைப்பைப் பற்றிய உரையாடல்களே அதிகம் முதன்மை பெறலாம் என்றொரு எதிர்பார்ப்பு பரவலாக உள்ள ஒரு பின்னணியில் அந்த உத்தேச இடைக்கால நிர்வாக அமைப்பிற்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் இடையில் காணப்படும் இடைவெளி மிகவும் ஆபத்தானது. எல்லாவற்றையுமே குழப்பிவிடக்கூடியது. சமீபத்தில் பருத்தித்துறையில் நடந்த சம்பவங்களும் அதன்பின் பாதுகாப்பு அமைச்சு எடுத்த நடவடிக்கைகளும் இதைத்தான் காட்டுகின்றன.

பருத்தித்துறையில் சம்பந்தப்பட்ட இடங்களில் இப்பொழுது இராணுவத்திற்குப் பதிலாக பொலிஸ் நிறுத்தப்பட்டுள்ளது. இது பிரச்சினைக்குத் தீர்வாகாது. ஏனெனில் இராணுவமோ, பொலிசோ, நேவியோ எதுவோ அதைத் தமிழர்கள் 'எங்களுடையது' என்று கருதவில்லை. சீருடையில் ஆயுதத்தோடு நிற்கும் அவர்களை தமிழர்கள் அந்நியர்களாகவே பார்க்கிறார்கள். அச்சுறுத்தலாகவே பார்க்கிறார்கள். 'எங்கட பொலிஸ்' என்று பார்க்கவில்லை.

இதுதான் பிரச்சினை எங்கட பொலிஸ், எங்கட ஆமி, எங்கட நேவி, எங்கட நிர்வாகம், எங்கட ஆட்சி என்று சனங்கள் அவர்களைப் பார்க்க முடியாத அவர்களோடு பழக முடியாத ஒரு இடைவெளி காணப்படுகிறது. இந்த இடைவெளி உள்ளவரை இயல்புநிலை தோன்றாது. பருத்தித்துறைச் சம்பவத்தைப் பற்றி எழுதும்போது கூடவே இன்னுமொன்றை இங்கே கூறவேண்டியுள்ளது. இம்மாதம் முற்பகுதியில் வட அயர்லாந்தின் பொலிஸ்மா அதிபர் இராணுவத்தின் பிடியில் உள்ள தமிழ்ப்பகுதிகளுக்கு ஒரு சுற்றுப்பயணம் செய்திருந்தார். இதன் போது அவர் அரச உயர் அதிகாரிகளிடம் புலிகளின் அரசியல் வேலைகளைத் தொடர்ச்சியாக கண்காணிக்கும்படி ஆலோசனை கூறியுள்ளார்.

முக்கியமாக 'அரசியல் வேலை' என்றால் என்ன என்பதைத் திட்டவட்டமாக வரையறை செய்ய வேண்டும் என்றும் இல்லையென்றால் புலிகள் மக்களுக்கும், படையினருக்கும் இடையில் மோதல்களைத் தூண்டிவிட முடியும் என்றும் இது அயர்லாந்திலும் நடந்தது என்றும் அவர் சிறீலங்காவின் பொலிஸ் உயர் அதிகாரிகளை எச்சரித்துள்ளார். மேலும் சிறீலங்காப் பொலிசை ராஜதந்திரம் மிக்க மெருகான ஒரு அமைப்பாக மாற்றி மக்களோடு நெருங்கிப் பழக விடவேண்டும் என்றுமவர் ஆலோசனை கூறியுள்ளார்.


அந்தப் பொலிஸ்மா அதிபர் வட அயர்லாந்தின் குருதிசொரியும் அநுபவங்களிலிருந்து எதையும் கற்றதாகத் தெரியவில்லை. இங்கே தனது சிங்களச் சிநேகிதர்களையும் அவர் கற்கவிடுவதாகத் தெரியவில்லை. ஆனால் பொலிசாருக்கும் மக்களுக்கும் இடையில் இடைவெளி உள்ளது அவருக்குத் தெரிகிறது. அவர் நினைப்பது போல பொலிசை நவீனமயப்படுத்தி உளவியல் பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் இந்த இடைவெளியை நிரப்பிவிட முடியாது. நிரவப்பட முடியாத இடைவெளி இது என்பதால்தான் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையும் அதற்குப்பிறகு பேச்சுவார்த்தைகளும் முடிவில் ஒரு இறுதித் தீர்வும் தேவைப்படுகிறது.

எனவே நிரவப்பட முடியாத இந்த இடைவெளியைக் கையாளும் மிக நவீன வழிவகைகள் பற்றிச் சிந்திப்பதைக் கைவிட்டு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் இடைக்கால நிர்வாகத்திற்கும் இடையில் உள்ள நிரவப்படக்கூடிய ஒரு இடைவெளியை எப்படிக் கையாள்வது என்று சிந்திப்பதே சமயோசிதமானது பயன் பொருத்தமானது.

யுத்தத்திலிருந்து ஒரு சிவில் சமூகத்தை நோக்கிப் போகும் ஒரு இடைமாறு காலகட்டத்திற்குரிய தற்காலிக ஏற்பாடே இடைக்கால நிர்வாகசபை. இடைமாறு காலகட்டத்திற்குரியது என்பதால் அந்த அமைப்பு இராணுவ அம்சங்களிலிருந்து முற்றிலும் விடுபடாததாகவும் அதே சமயம் சிவில் விழுமியங்களை இயலுமானவரை தன் வசப்படுத்த முயல்வதாகவும் காணப்படுவதே வழமை. இதில் இராணுவ நோக்கு நிலைக்கா அல்லது சிவில் நோக்கு நிலைக்கா அதிகம் முக்கியத்துவம் கொடுப்பது என்பது அரசாங்கத்தின் முடிவுகளிலேயே தங்கியுள்ளது.

எவ்வளவுக்கெவ்வளவு இராணுவ நோக்கு நிலைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு யுத்தத்திற்குத் திரும்பிப் போகும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். எவ்வளவுக்கெவ்வளவு சிவில் விழுமியங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு விட்டுக் கொடுக்கும் மனோநிலையும் பிரச்சினைகளைப் பேசித்தீர்க்கும் மனோநிலையும் வளரும். நாட்டை இராணுவ மயநீக்கம் செய்யும் வாய்ப்புக்களும் அதிகரிக்கும். இலங்கைத்தீவு ஒரு தோல்வியுறும் அரசாகிச் சிதைவதும் தடுக்கப்படும். அதாவது இச்சிறிய அழகியதீவு பேரரசுகளின் குத்துச் சண்டைக்களமாக மாறுவது தடுக்கப்டும்.

(இப்பத்தி முதற்சுற்றுப் பேச்சுக்களின் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளிவர முன்பு எழுதப்பட்டது.)




Restaurant Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet,
75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

★ இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
★ உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

தர்ஷனா & பிரஷா
உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc,
75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தைகளின் ஆயுள் முன்னரை விடப் பலம்

— மு. திருநாவுக்கரசு —

'உரிமை என்பது எமக்கு யாராலும் தரப்படுமொன்றல்ல அது எம்முடன் கூடவே பிறப்பது. ஆனால் தம்பதீபக் கோட்பாட்டின்படி தமிழர் பிறப்பால் உரிமையற்றவர்கள். எனவே இலங்கைத் தீவின் உள்நாட்டு வரலாற்றுப் போக்கின்படி சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற முடியாது.'

ஆனால் உள்நாட்டை மேவி வெள்ளம் பாய்ந்துவிட்டது. இலங்கை சர்வதேசக் கடலில் கரைந்துள்ளது. சர்வதேச சக்திகளும் அவற்றின் தலையான அமெரிக்காவும் இலங்கை விவகாரத்தில் ஒரு தீர்க்கமான பாத்திரம் வகிக்க தலைப்பட்டுள்ளன. ஆதலால் புதிய சக்தியின் வருகையுடன் இலங்கை வரலாறு தொடர்ந்தும் பழைய போக்கிற்போக முடியாமல் புதிய இரசாயன மாற்றத்திற்கு உள்ளாகிவிட்டது. எனவே இம்முறை பேச்சுவார்த்தை பகிடிக்கல்ல. வெற்றிக்கு நிகழ்கின்றது.

வரலாறானது எல்லா விருப்பு வெறுப்புக்களையும் கடந்து பேச்சுவார்த்தையை முன்தள்ளியுள்ளது. வரலாற்றில் முன்புருவான ஒப்பந்தங்களெல்லாம் சிங்களத் தரப்பிலிருந்து காலங் கடத்தும் நோக்கில் எழுந்தன. அல்லது பொறிகளால் வடிவமைக்கப்பட்டன.

1983-இன் பின் நிகழ்ந்த பேச்சு வார்த்தைகள் அனைத்துமே இருதரப்பிலும் மனமின்றி நிகழ்ந்தன. அல்லது சாக்குப்போக்கால் நிகழ்ந்தன. 1925-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதிற் தொடங்கி இப்போது 2002-ம் ஆண்டு தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் வரை நீண்டு செல்கின்றது. வடக்கு கிழக்கை ஓர் அலகாக வரையறுத்து அதனடிப்படையில் எழுந்த முதலாவது பிரதான ஒப்பந்தமாக 1925-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கைச்சாத்தான மகேந்திரா ஒப்பந்தம் அமைகின்றது. ஒருபுறம் சி.ஈ.விக்டர் எஸ். கொறியா தலைமையிலான குழுவினரும், மறுபுறம் டபிள்யூ. துரைசுவாமி தலைமையிலான குழுவினரும் இதில் கைச்சாத்திட்டனர். இதன்பின் முறையே 1957-ம் ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தமும், 1965ம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தமும், 1987-ம் ஆண்டு ஜே.ஆர்-ராஜீவ் ஒப்பந்தமும் எழுந்தன. ஆனால் இவை எல்லாம் 'பொய்யாய் பழங்கதையாய்' போயின.

ஆனால் 2002-ம் ஆண்டு கைச்சாத்தாகியுள்ள ரணில் - பிரபாகரன் புரிந்துணர்வு ஒப்பந்தம், பிரபாகரன் - ஹக்கீம் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவும் அதன் தொடர்ச்சியான தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளும் பொய்யாய் பழங்கதையாய் போய்விடமுடியாத சர்வதேச சூழலும், சர்வதேச அழுத்தமும் எழுந்துள்ளன. யாழ்ப்பாணத்திற் கைச்சாத்திடுவதில் தொடங்கி கொழும்பில் கைச்சாத்துகள் பல நிகழ்ந்து பின்பு பிரச்சினை தீர்வுக்கு வெளியே சென்னை, தென்மானிலங்களென பரவி விரிந்து புதுடெல்லியை அடைந்து, அதன்பின் இந்திய எல்லையையும் தாண்டி திம்பு பேச்சுவார்த்தை என அகன்றது. இறுதியில் தென்னாசியாவின் மிகப்பெரிய நாடான இந்தியப் பிரதமரும், இலங்கை ஜனாதிபதியும் தமிழரின் பெயரால் ஒப்பந்தம் செய்து தோல்வியில் முடிந்தது. இவ்வொப்பந்தம் பிரச்சினையைத் தீர்க்க தவறியது மட்டுமன்றி எதிர்விளைவானதாயும் அமைந்தது.

பிரச்சினையை உள்நாட்டில் தீர்க்கத்தவறியமையானது பின்பு தென்னாசியாவரை பிரச்சினையை பெருப்பித்தது. தென்னாசியாவுக்குள் தீர்க்கத் தவறியமையானது மேற்குலகுக்கூடாக தென்கிழக்காசியா வரை பெருத்துள்ளது. நோர்வேயின் வரவுடன் பிரச்சினை நேரடியாக ஐரோப்பா வரை நீண்டதுடன் கடந்த மாதம் இலண்டனில் அரச தரப்பு, புலிகள்தரப்பு உயர்மட்டச் சந்திப்புக்களும் நிகழ்ந்துவிட்டன. இப்போது பேச்சுவார்த்தை தாய்லாந்தில் களம்கொண்டு விட்டது.

இப்பின்னணியில் பேச்சுவார்த்தைகள் அதிகம் சீரிய தன்மை கொண்டவையாய் இருக்க வேண்டியுள்ளது. தாய்லாந்தில் பேச்சுவார்த்தை அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அதேதினத்தில் ஐரோப்பிய சமூகம் உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தைகளை வரவேற்றும் பாராட்டியும் அறிக்கைவிட்டதுடன், நிதியுதவி பற்றிய முன் அறிவித்தலையும் விட்டுள்ளது. இதைத்தொடர்ந்து ஆஸ்திரேலியா போராளிகளின் நலன்காப்பிற்கான நிதியுதவி முன்னறிவித்தல் ஒன்றை விட்டுள்ளது. பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடையும் இடத்து புலிகள் மீதான அமெரிக்கத் தடை நீக்கப்படுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று அமெரிக்க அதிகாரியொருவர் கோடி காட்டியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இது புலிகளை பேச்சுவார்த்தையில் ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டதாகும்.

சுமாராக ஓராண்டு காலமாக இலங்கை அரசை அமெரிக்காவும் மற்றும் மேற்குலக நாடுகளும் சமாதானத் தீர்வின்பால் விடாப்பிடியாக வற்புறுத்தி வருகின்றன. இதில் மேற்குலகம் சமாதானத்தீர்வின்பால் இரு தரப்பினர் மீதும் அழுத்தம், ஊக்குவிப்பு எனும் இரு அலகு ராஜதந்திரத்தை பிரயோகித்து வருகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்த கால வரலாற்றுப் போக்குக்கு புறம்பாக மேற்குலகு எனும் ஒரு புதிய சக்தியின் வருகை இணைந்துள்ளது. அப்படியென்றால் மேற்குலகின் வருகையை புரிந்து கொள்வது என்பது இப்பேச்சுவார்த்தைகளை புரிந்து கொள்வதற்கான ஒரு புதிய நிபந்தனையாகின்றது.

இவ்விவகாரத்தில் மேற்குலகினது வருகையினதும், தேவையினதும், நிலைப்பாட்டினதும் பொருள் என்ன? இதனைப் புரிந்து கொண்டால் பேச்சுவார்த்தைகளினது ஆயுட் பலத்திற்கான ஒரு முக்கிய கூற்றினை கண்டு கொள்ளலாம். கிளின்டன் நிர்வாகத்தின் பிற்காலப் பகுதியில் அமெரிக்கா ஒரு தெளிவான கொள்கையை வகுத்துக்கொண்டது. அதாவது அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு இருபெரும் அச்சுறுத்தல்கள் இருப்பதாக தேசிய பாதுகாப்பிற்கான கிளின்டனின் உதவியாளர்களும், ஆலோசகர்களும் அடையாளம் கண்டனர். (இவ்வாறானவர்களுள் காமுவெல் ஆர். பெகெரும் ஒருவர்) அத்தகைய அச்சுறுத்தல்களாவன.

01. மிருதேசிய அச்சுறுத்தல் (supernational threat)
02. உபதேசிய அச்சுறுத்தல் (subnational threat)

என்பனவாகும்.

**இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்தகால வரலாற்றுப் போக்குக்கு புறம்பாக மேற்குலகு எனும் ஒரு புதிய சக்தியின் வருகை இணைந்துள்ளது.**

தத்தமது தேசிய எல்லைகளைக் கடந்த இராணுவ-அரசியல் அபிலாசைகளைக் கொண்டிருக்கும் தலிபான், அல்கொய்தா என்பன முதலாவது வகையைச் சார்ந்தவை. தென்னாசியா, மத்தியாசியா என்பன தொட்டு தென் ரஷ்யா, மத்திய கிழக்கு, கிழக்கு ஆபிரிக்கா என்பனவரை இத்தகைய 'பயங்கரவாத' குழுக்களின் தொடர்பும் படர்ச்சியும் இருப்பதாக அமெரிக்கா அடையாளம் கண்டது. இத்தகைய 'பயங்கரவாத' சக்திகளின் 'நாசகார' தாக்குதல்களிலிருந்து அமெரிக்காவின் கம்பியூட்டர் முறைமையையும், நுணுக்கம் நிறைந்ததும் உயிரோட்டம் மிக்கதுமான அமெரிக்க உள்கட்டுமானங்களைப்பாதுகாக்க வேண்டும் என்றும் அடையாளம் காணப்பட்டது. இது செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு முன் அடையாளம் கண்டு வகுக்கப்பட்ட திட்டமாகும். அத்துடன் 'திறந்த, நாகரீகமிக்க, சகிப்புத் தன்மை நிறைந்த' மேற்குலக சமூகமைப்பை பாதுகாத்தல் என்பதும் இதனுடன் கூடவே அமைந்ததில் மேற்கூறிய வகையான 'பயங்கரவாதக் குழுக்கள்' ஒன்றுடன் ஒன்று இணைந்தும், தொடர்புற்றும் உலகமயமாகி ஓர் ஆபத்தான சக்தியாக தலையெடுப்பதாகவும் அமெரிக்கா அஞ்சத்தொடங்கியுள்ளது.

இந்தவகையில்தனக்கு எதிரான ஓர் அரசை வீழ்த்த, அல்லது தனக்கு எதிரான ஓர் ஆயுதம் தாங்கிய அமைப்பை வீழ்த்த இன்னொரு குழுவை ஆயுதபாணியாக்கி வளர்த்துவிடும். முன்னாள் ஜனாதிபதி றீகனின் கோட்பாடு இறுதியில் அமெரிக்காவுக்கே பாதகமாய் திரும்பிவிடக்கூடியதாய் உள்ளதாக அனுபவபூர்வமாக அமெரிக்கா உணர்ந்துள்ள நிலையில் ஆயுதம் தாங்கிய அமைப்புக்களை இனிமேல் வளர்த்துவிடக் கூடாது என்ற முடிவுக்கு அமெரிக்கா பெருமளவு வந்துள்ளது. அடுத்து உபதேசியவாத அச்சுறுத்தலென்பது அதாவது ஓர் அரசிலிருந்து பிரிந்து செல்வதற்காக ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவை தமிழீழப் போராட்டம் இந்த வகையைச் சார்ந்தது இதனை விளக்கமாகப் பார்ப்போம்.

ஓர் அரசுடன் அமெரிக்கா அரசியற் பொருளாதார உறவை வலுவாக வைத்திருக்குமிடத்து அந்த அரசின் கீழ் உள்ள உபதேசிய இனம் அரசுக்கு எதிராகப் போராடுமிடத்து அந்தப்போராடும் இனத்தின் தேவையும், கோபமும் அந்த நாட்டில் உள்ள அமெரிக்காவின் நலன்களுக்கு எதிரானதாக அமைந்து அங்குள்ள அமெரிக்க பொருளாதார, அரசியல் இலக்குகள் மீது தாக்குதல் அமையும். இங்கு அமெரிக்கா உள்நாட்டில் அல்ல, வெளிநாடுகளில் உள்ள தனது நலன்களை பாதுகாக்க வேண்டியுள்ளது. மேலும் உள்நாட்டில் அமெரிக்கா மீது ஆத்திரமடையும் ஓர் உபதேசியவாதக் 'குழு' மிகு தேசியவாதக் 'குழுக்களுடனோ' அல்லது சர்வதேச கும்பல்களுடனோ (மாபியா, போதைவஸ்துக் கடத்தல் கும்பல்கள் போன்றவை) தொடர்புகொண்டு அமெரிக்காவிற்கு எதிராகச் செயற்பட்டிட முடியும். போன்ற அச்சங்களை இப்போது கொண்டுள்ளது. இதனால் உலகளாவிய ரீதியில் ஆயுதப்போராட்டங்கள் எழாமற் பார்த்துக்கொள்ளுதல் அவசியமென அது கருதுகின்றது. இதனால் தேசிய இனப் பிரச்சினைகளுக்குள்ளாகி மோதுண்ணும் சமூகங்கள் மத்தியில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க பால்கன் ஸ்த்திர ஒப்பந்தத்தின் (Balkan Stability pact) அனுபவத்தை கருத்திற் கொண்டு சர்வதேச ரீதியிலான பரிகாரங்களை விரைவில் காணவேண்டுமென அமெரிக்கத் தரப்பிற் சிந்திக்கலாயினர். அமெரிக்காவின் சிந்தனையின் படியான 'சர்வதேச ரீதியிலான பரிகாரங்கள்' (International tools) என்பது இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. பிராந்திய நிலைமைகளுக்கேற்ப ஒரு வகைச் சமஸ்டித் தீர்வையே அதில் சிந்திக்கிறார்கள்.

இந்த வகையில் இலங்கை அரசை அமெரிக்கா மேற்குறித்த ஒருவகைத் தீர்வுக்கும் சமாதானத்திற்கும் வற்புறுத்துகின்றது. அதேவேளை ஆயுத மோதலைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் சமாதான ரீதியிலான தீர்வொன்றைக் காணுமாறும் புலிகளைக் கேட்கின்றது. தீர்வு காணாவிட்டால் நியூயோர்க் நகரைப்போல கொழும்பு நகரைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற ரணிலின் கனவு நிறைவேற முடியாது போய்விடும். ஆதலால் ரணில் அமெரிக்காவின் திட்டங்களுக்குப் பணிவாக இவ்விவகாரத்தில் நடந்து கொள்கிறார் என்பதால் இம்முறை தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளை சிங்கள அரசால் முன்போல் ஓர் ஏமாற்று நாடகமாக்க முடியாது.

அதேவேளை புலிகள் தரப்பை எடுத்துக்கொண்டால் அவர்களும் பேச்சுவார்த்தையில் தமது ஈடுபாட்டையும் விசுவாசத்தையும் தெரிவித்து வருகின்றனர். திம்புப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் மறுப்புத் தெரிவித்திருந்தனர். இறுதியில் மனமின்றிக் கலந்துகொண்டனர். அதேவேளை திம்புப் பேச்சுவார்த்தைகளுக்குத் தமிழர் தரப்பில் இருந்த பல்வேறு சக்திகளிடையேயும் எதிர்ப்புகள் இருந்தன. ஆனால் ரணில் - பிரபாகரன் ஒப்பந்தத்திற்கும், பிரபாகரன் - ஹக்கீம் ஒப்பந்தத்திற்கும், தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளுக்கும் தமிழர் தரப்பில் எம்மட்டத்திலும் எதிர்ப்பில்லை. மேலும் திம்புப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் மறுத்தது போலன்றி தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளுக்கு முதலில் புலிகளே அழைப்பு விடுத்திருந்தனர். விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளுக்கான அங்குரார்ப்பண உரையில் பின்வருமாறு கூறியுள்ளதைக் கவனிப்போம்.


'கடந்த வருடக்கடைசியில் நாம் ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தம்செய்த போது புதிய அரசும் அதனை சாதகமாக ஏற்று போர் ஓய்வை அறிவித்தது. இந்தச் சூழ்நிலையிற்தான் நோர்வே அரசாங்கம் ஆக்கபூர்வமான வழிகளைக் கடைப்பிடித்தது... சமாதானமே எமது மக்களின் ஆழமான அபிலாசையாக இருக்கிறது.' இவ்வாறு பேச்சுவார்த்தை, சமாதானத்தீர்வு என்பவற்றிற்கான கதவை முதலிற் புலிகளே தட்டினர் என்பதால் அவர்கள் பேச்சுவார்த்தையில் மனதார ஈடுபடுகின்றனர். ஆதலால் புலிகள் தரப்பில் பேச்சுவார்த்தை முறிய இடமில்லை.

மேலும் கிழக்கு, தென்கிழக்கு ஆகிய நாடுகள் சிலவற்றிற் காணப்படுகின்ற பொருளாதார முறைமையை இலங்கையிற் கட்டியெழுப்ப சிறீலங்காவின் அரச தலைவர்கள் ஆவலுறுவதாகவும் அதற்கு அவர்களது அபிலாசைகளை நாம்ஆதரிக்கிறோம் என்றும் மேற்படி அங்குரார்ப்பண உரையில் புலிகள் தெரிவித்துள்ளனர். இது அமெரிக்காவிற்கு ஓர் இனிப்பான செய்தி. எனவே அமெரிக்கா புலிகளைச் சற்று அனுசரித்து இலங்கை அரசை பேச்சுவார்த்தையின்பால் மேலும் அழுத்தும். எனவே இம்முறை பேச்சுவார்த்தையின் ஆயுள் சற்றுப்பலமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகக் கண்ணோட்டம்

# அக்கினிச் சிறகுகள்




(சுயசரிதம்)

**எழுதியவர்:-** ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

**ஆங்கிலத்தில்:-** அருண் திவாரி

**தமிழில்:-** மு.சிவலிங்கம்

தற்போது இந்தியாவின் சனாதிபதியாகவும், முன்னாள் இந்திய தலைமை விஞ்ஞானியாகவும் இருந்த, இருக்கின்ற அப்துல்கலாம் அவர்களின் சுயசரிதம்தான் 'அக்கினிச் சிறகுகள்' சுயசரிதங்கள் எப்போதுமே சுவையானவைமட்டும் அல்ல. சிலரின் வாழ்க்கையில் பெரும் திருப்பு முனையாகவும் அமைந்து விடுவதும் மறுப்பதற்கில்லை.

அவ்வாறெல்லாம் அக்கினிச் சிறகுகள் மற்றவர்களுக்கு உபயோகப்படுத்துவதற்கு அப்பால், இந்தச் சிறகுகள் மூலம் தன்னையொரு முஸ்லிம் தமிழனாக மட்டுமல்லாமல் தன்னையொரு தமிழனாகவும் காட்டிக்கொள்ள முற்படுகின்றார். அது மட்டுமல்லாமல் அவர் தமிழ்மீது மிகுந்த பற்றுக் கொண்டவரும்கூட. (அவருக்குத் தமிழ்பேசத் தெரியாது என்பது வேறுவிடயம்) அவருக்குப் பிடித்த நூல் திருக்குறள், அவருக்குப் பிடித்த பெரியார் திருவள்ளுவர் என்பதில் இருந்து இது தெளிவு. எனினும், அவர் தான் தமிழ்நாட்டின் மிகவும் பின்தங்கிய ஒரு பகுதியில் பிறந்த முஸ்லிம் தமிழன் என்பதை இன்னும் மனதில் கொண்டிருக்கிறாரா அல்லது, தான் ஒரு இந்தியத் தமிழன் என்று மட்டும் நினைத்துக் கொண்டிருக்கிறாரா என்பது புரிய முடியாத வினா என்பதோடு நிறுத்திக்கொண்டு சிறகுகளுக்குள் நுழைவோம்.

சராசரி மனிதர்கள் தங்களின் தாழ்வு மனப்பாண்மையை போக்கி தங்களுக்குள் ஓர் இலட்சியத் தீயை என்றும், அணையாத சுடர் தீபமாய் ஏற்றி வைப்பவர்களாயின் அவர்கள் தங்கள் முன்னுள்ள மலை போன்ற தடைகளையெல்லாம் தாண்டி விண்மீன்கள் மத்தியில் பிரகாசிக்கும் வெண்ணிலாப் போல தங்களை ஆக்கிக்கொள்ளலாம் என்பதைத் தான் அப்துல் கலாம் அவர்களின் 'அக்கினிச் சிறகுகள்' மிகவும் தத்ருபமாக சமூகத்திற்கு எடுத்துச் சொல்லும் செய்தியாகும்.

'உடல் ரீதியான உணர்வு பூர்வமான தளைகளில் இருந்து ஒருவர் தம்மை விடுவித்துக் கொள்ளும்போது அவருடைய விடுதலை யாத்திரை ஆரம்பமாகிறது' என்ற சொல்வீச்சுடன் கலாமின் வாழ்க்கைப் பரிமாணங்களை விபரிக்க ஆரம்பிக்கும் இந்நூலானது எமது சமூகத்திற்கு தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமானது மட்டுமல்ல அவசியமானதும்கூட. ஏனெனில், எம் சமூகங்களிடையே இந்த உணர்ச்சித் தளைகளானது மிகவும் வருத்தப்படவேண்டிய அளவில் பரந்து பட்டுக் காணப்படுகின்றது. ஒவ்வொரு தனி மனிதனதும் இலட்சியங்கள் மிகவும் குறுகிய வட்டத்தில் சுயநலநோக்குடன் காணப்படுவதுடன் தவறானதும் நேர்த்தியற்றதும் ஆளுமை அற்றதுமான சமூகமொன்று உருவாகிவருவதை நாம் காண்கின்றோம்.

இந்நூலானது திறமைமிக்க மனிதனாக ஒருவன் தன்னை கட்டியெழுப்பிக்கொள்ள அல்லது அவ்வாறு தன்னை மாற்றி அமைத்துக்கொள்ள பேருதவி புரிகிறது. சாதாரண பத்திரிகை வியாபாரியின் உதவியாளனாக தனது தொழிலை ஆரம்பித்த அப்துல் கலாம் இந்திய ஏவுகணைத் திட்டத்தின் தலைமை விஞ்ஞானியாகி பின்னர் அத்திட்டத்தின் தந்தையாகத் தன்னை ஆக்கிக்கொள்ளும் வரை சந்தித்த சவால்கள் என்பது எண்ணிலடங்காதவை. எனினும், அவர் தன்னை நோக்கி காலதேவனால் ஏவி விடப்பட்ட சவால்களிற்கு எதிராக எதிர் நீச்சல் போட்டார். இறுதியில் அவர் காலத்திடம் வெற்றி பெற்றார். வழமையாக தனது காலடியில் மனிதர்களை கரைக்கும் காலம் கலாமின் காலடியில் தன்னை சிறைப்படுத்திக் கொண்டு விட்டது.

இந்நூலை கற்பதன் மூலம் ஒருதனி மனிதனானவன் சமூகத்தின் உயர்ந்தநிலை அடைய வேண்டுமாயின் எவ்வாறான தொரு மனப்பக்குவத்தைப் பெறவேண்டும். எப்படிப்பட்ட பிரச்சினைகளையும் மனிதர்களால் எதிர் கொள்ள முடியும் என்பவற்றைப் புரிந்துகொள்ளமுடியும். அப்துல் கலாம் இந்திய ஏவுகணைத்திட்டத்தின் தந்தையாகுவதற்கு அவரிடம் காணப்பட்ட தொழில்நுட்ப ஆற்றல் மட்டும் காரணமல்ல. அவரிடம் அளவுக்கதிகமான பொறுமை காணப்பட்டது. அனைவரையும் அணைத்துச் செல்லும் திறமை மிகுந்திருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால் பலதரப்பட்ட திறமைகளையும், முற்றிலும் வேறுபட்ட குண இயல்புகளையும் கொண்டிருந்த விஞ்ஞானிகள் குடும்பத்தை ஒரே புள்ளியை நோக்கி அழைத்துச் செல்லும் திறமை அபரிதமாய் இருந்தது.

முயற்சி உள்ளவனின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாய் இருக்கக் கூடிய இந்நூலை எம் ஒரே சமூகம் கற்றறிவதன் மூலம் எதிர்காலத்தில் தமது குறிக்கேளை பயனுள்ளதாக்கிக் கொள்ளலாம். தமது வாழ்க்கையையும் அவ்வாறு மாற்றி அமைத்துக்கொண்டு நம்பிக்கையான எதிர்காலத்தை நோக்கி தங்களை நகர்த்திச் செல்லலாம். ஏனெனில், இந்நூலானது 'அப்துல் கலாம்' என்ற தனியொரு மனிதனின் சுயசரிதத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதனைக் கற்பவர்களுக்கு ஓர் உன்னத வழிகாட்டியாக, உற்ற நண்பனாக அமைந்துள்ளதால் சிறுமைத் தனங்களால் சிதறுண்டு போயுள்ள எமது இளைய தலைமுறையானது ஆற்றலும், ஆளுமையும் நிரம்பப்பெற்ற தலைமுறையாய் சிறந்த சிற்பிகளாய் ஓர் தலைமையின் கீழ் கற்பனா சிந்தனையுடன் பணியாற்றக் கூடியவர்களாய் உயர்த்திக் கொள்ள உறுதுணை புரியும்.

தனது இளைய பராயத்தில் அறிவுப் பசியால் துடித்துக் கொண்டிருந்த அப்துல்கலாம் அந்தப் பசியை இந்நூலைக் கற்பவர்களுக்கு ஏற்படுத்த முற்பட்டுள்ளார். 'எல்லா நல்ல மனிதர்களும் உலகிற்கு தகுந்த படியாகத் தங்களை மாற்றி அமைத்துக்கொள்கிறார்கள். ஒருசிலர் முரண்பட்ட மனிதர்கள் மட்டுமே தங்களுக்கு ஏற்றபடி உலகை மாற்றி அமைத்துக் கொள்வதில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். உலகின் எல்லாவித முன்னேற்றங்களும் இப்படிப்பட்ட முரண்பட்ட நபர்களையும் அவர்களின் புதுமைக் கண்ணோட்டத்தையும் நம்பியிருக்கின்றன. என்ற கலாமின் உணர்வின் வரிகள் மூலம் இது புலனாகிறது. இதன்மூலம் அவர் தொழில் நுட்பத்துறையில் மட்டுமல்ல, ஆன்மீக ரீதியிலும் ஓர் உன்னதத்தை உலகிற்கு காட்டியுள்ளார் என்பது தெளிவாகிறது.

சற்று அளவுக்கதிகமாக மதங்களின் பெருமை பேசப்பட்டிருப்பதுடன் ஏனோ தெரியவில்லை சில இறுக்கமான இடங்களில் கலாம் ஒளித்து விளையாடியிருப்பது உண்மைதான். உதாரணமாக கலாம் தான் தலைமை விஞ்ஞானி ஆவதற்கு முன்னர், தான் தன்னைச் சூழ இருந்தோரிடம் பல எதிர்ப்புக்களை சந்தித்ததாக கூறியுள்ளதுடன் தனது தாய் நாட்டில் குறிப்பாக தனது பிறந்த ஊரில்கூட பல இலட்சக்கணக்கான மக்கள் ஒரு வேளை உணவுக்குக்கூட பரிதவிக்கும் நிலையில் இந்தியாவை ஒரு இராணுவ ரீதியிலான வல்லமைக்கு கட்டியெழுப்ப முற்பட்டமை இந்தியாவின் ஒரு பக்கச்சார்புத்தன்மை போன்றவற்றில் அவருடைய நோக்கங்கள் புதிராகவே உள்ளன.

எது எப்படியிருப்பினும் கலாம் கூறியதுபோல 'காலத்தின் மணற்பரப்பில் காலடிச் சுவடுகளை பதிக்க விரும்பினால்' ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுள் ஓர் இலட்சியத்தை அக்கினிச்சுவாலையாக அணையாமல் சுடர்விட்டு பிரகாசிக்கச் செய்ய வேண்டும். இந்நூலை கற்பதன் மூலம் இதனைநாம் புரிந்துகொள்ளலாம். அத்துடன் தமிழகத்தின் தமிழ்கொழிக்கும் தென்பகுதியில் பிறந்த அப்துல் கலாமாய் இந்நூலைத் தமிழில் எழுத முடியாமல் போனது வேதனையே. அந்தவகையில் இந்நூலைத்தமிழில் மொழிபெயர்த்த திரு மு. சிவலிங்கம் அவர்கள் தமிழ் இளைய சந்ததிக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.

*குறிப்பு: இந்நூல் அப்துல் கலாமின்நெருங்கிய நண்பர்களில் ஒருவரான அருண்திவாதி என்ற இந்திக்காரரால் ஆங்கிலத்தில் முதலில் எழுதப்பட்டது.* - குணாளன்

(21ம் பக்கத் தொடர்ச்சி)

## முதற்கட்ட நம்பிக்கை தரும் எச்சரிக்கைகள்

சுத்தியுடனும் அணுகப்பட வேண்டும் என்பதே மிக முக்கியமானதாகும்.

ஓர் இராஜதந்திரி கூறியதைப் போன்று இந்தப் பேச்சுவார்த்தை பல கௌரவப் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதான ஓர் இராஜதந்திர யுத்தம் என்றே கருத வேண்டியிருந்தாலும் மனித இருப்பு, மனித உரிமை, மனித இயக்கம் தொடர்பான அழுத்தமான சிந்தனைகளை பரஸ்பரம் மதிப்பளித்து பகிர்ந்தும் புரிந்தும் கொள்வதன் மூலம் இந்த ராஜதந்திர யுத்தத்தை அமைதிக்கான சமாதானத்திற்கான மூலோபாயமாக மாற்றவும் முடியும்.

இதில் அதிகம் பங்காற்ற வேண்டியவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டிய பக்கத்தினரும் அவர்களை அதற்கு ஊக்குவிக்க வேண்டியவர்களுமே ஆவர். வெளிப்படையாகச் சொல்வதானால் சிறீலங்கா அரசும் சர்வதேச சமாதான ஆர்வலர்களான நாடுகளும் இப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்கி தளராது செயற்பட்டுவரும் நோர்வே அரசும் ஆற்ற வேண்டிய பங்கே இதில் மிக அதிகமாகும்.

எல்லாவற்றையும் விடவும் இவர்களுக்கு இன்னொரு மிக முக்கியமான பொறுப்புமுண்டு. இந்தச் சமாதான முயற்சிகளை முளையிலேயே கருகச் செய்ய மேற்கொண்ட சிறீலங்காவின் பேரினவாத சக்திகள் இன்னமும் அதனை நிர்மூலமாக்கவும் இன்றைய சிறீலங்காவின் அரசை அதிகாரபலத்தைக் கொண்டு கலைக்கவும், மீண்டும் இன வன்முறையைத் தூண்டி விட்டு விடுதலைப் புலிகளைச் சீண்டி போரைத் தொடரவும் முனைப்புக் கொண்டு செயற்பட்டே வருகிறார்கள்.

இனங்காணப்பட்ட இவர்களின் செயற்பாடுகளை, சமாதான விரோத நடவடிக்கைகளைக் கவனத்தில் கொண்டு இயங்க வேண்டியதே அதுவாகும். அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு முன்னர் இந்த சக்திகள் எப்படியெல்லாம் செயற்படப் போகிறார்கள் என்பதைச் சர்வதேச சமூகம் அவதானிக்க வேண்டிய கட்டம் இதுவாகும்.

முதற்கட்டப் பேச்சுக்களில் எட்டப்பட்டதாகக் கூறப்படும் முடிவுகள் நடைமுறைப் படுத்தப்படுவதில் கடும் எதிர்ப்பை பேரினவாதிகளிடமிருந்து எதிர்கொள்ள வேண்டிய நிலை அரசுக்கு இருக்கவே செய்யும். தடைகளைத் தகர்த்து முன்னேறுவதில் தான் யுத்தத்தினது மட்டுமல்லாது சமாதானத்தினது வெற்றியும் தங்கியுள்ளது.

## உள்ளத்தை உருக்குபவை

வீதிகளில் வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்துக் கொண்டே போகிறது. இதற்கு பிரதான காரணங்கள் பல. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வாகனங்கள் பல்வேறு நோக்கங்களோடு வந்து போகின்றன. இதே நேரத்தில் துவிச்சக்கர வண்டிகள் மூலம் நீண்ட தூர பிரயாணங்களை மேற்கொள்ளும் மனிதர்களும் அதிகம். அதிகரித்துள்ள வாகனங்களின் எண்ணிக்கையோடு சேர்த்து செப்பனிடப்படாத வீதிகளில் கிளம்பும் புழுதிப் படலமும் அதிகம்.

துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றை பிரயாணம் மேற்கொள்ளும் வேளைகளில் எதிரில் வருகின்ற வாகன சாரதிகள் தங்களது வாகனங்களின் கெற் லைட்டுக்களை 'டிம்' செய்யாது (எமது மக்களின் பேச்சு வழக்கு) அசமந்தமாக வாகனங்களை ஓட்டுகின்றனர்.

வாகனங்களின் வேகம் காரணமாக கிளம்பும் புழுதிப் படலம் ஒரு பக்கம் நிமிர்ந்து பார்க்க முடியாத அளவிற்கு கண்களைக் குத்தும் லைட் வெளிச்சம் இன்னொரு பக்கம் என பெரும் கஸ்டங்களையும் விபத்துக்களையும் சந்தித்து வருகின்றனர். அவலப்பட்டுப் போய் நிற்கும் பாதசாரிகளின் துன்பங்களைப் போக்க சாரதிகளால் மட்டுமே முடியும்.

வாகனச் சாரதிகள் இதனைக் கவனத்தில் கொண்டால் எத்தனை பேரின் துன்பங்களை போக்க முடியும். விபத்துக்களை தவிர்க்க முடியும்.

- வேழினி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாய்லாந்தில் கடந்த 18ம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், சிறீலங்கா அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக உலகின் பல்வேறு தொடர்பு ஊடகங்களும் தொடுத்த கேள்விகளுக்கு தமது கருத்துக்களை வழங்கியிருந்தனர். அதில் இருந்து சிலவற்றை இங்கு தொகுத்து தருகின்றோம்.**

# இடைக்கால நிர்வாகம் யார் தலைமையில் அமையப்போகின்றது?

**(மாவன் மார்க் மார்க்கம் செய்திச் சேவை)**

*கேள்வி:– தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து விமர்சகர்கள் எப்போதும் கேட்டு வருகின்ற கேள்வி என்னவென்றால், உங்களது கடப்பாடும் நம்பிக்கையும்– கடந்த கால சமாதானப் பேச்சுக்களைக் கொண்டு பார்க்கிறபோது இந்தமுறை மட்டும் நீங்கள் ஏன் சிறீலங்கா அரசின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் – அரசியல் தீர்வொன்றை எட்டமுடியும் என நம்புகிறீர்கள்? இதற்கு நீங்கள் மூன்று காரணங்கள் சொல்வீர்களா?*

**அன்ரன் பாலசிங்கம்:–** தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தையில் அக்கறைப்படவில்லை என்றோ அதில் ஈடுபாடு காட்டவில்லை என்றோ சொல்கிற விமர்சகர்களோடு நான் உடன்படவில்லை. பல சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானப் பேச்சவார்த்தைகளில் பங்கு பெற்றிருக்கிறது. 1985 திம்புவிலிருந்து இன்று வரை பல சந்தர்ப்பங்களில் சிறீலங்கா அரசோடு தீர்வை எட்டுவதற்கான எங்களது விருப்பத்தை நாங்கள் தெரிவித்து வந்திருக்கிறோம். இப்போது நாங்கள் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னோக்கிச் சென்றிருப்பதாக கருதுகின்றோம்.

இதில் மிகப்பிரதான காரணங்களில் ஒன்று, இந்த முறைதான் ஒரு மூன்றாவது தரப்பு அரங்குக்கு வந்து பிரச்சினைக்குள்ளாகிய இரண்டு தரப்புகளுக்கிடையிலான பேச்சவார்த்தையை நெறிப்படுத்துகிறது.

இரண்டாவதாக, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. போர் நிறுத்தம் என்பது கடந்த ஏழு மாதங்களாக நிலைபெற்றிருக்கிறது. ஸ்திரமான போர்நிறுத்தம் என்பது மிக முக்கியமானது. சமாதன செயல் போக்குக்காக ஸ்திரமான அடிப்படை என இதை நாங்கள் கருதுகின்றோம்.

மூன்றாவதாக, ஒரு சர்வதேசிய அளவிலான கண்காணிப்பு முறை இருக்கிறது. ஸ்கண்டிநேவிய, நோர்டிக் நாடுகள் யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்து வருகின்றன. நான்காவதாக, முதன்முறையாக சர்வதேசிய சமூகம் விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் கவனம் கொண்டுள்ளது. ஐந்தாவதாக, இந்தமுறை சிறீலங்கா அரசு முன்வைத்த பேச்சுவார்த்தைக் குழு பிரச்சினை பற்றிய புரிதல் கொண்ட ஒரு குழுவாக அமைந்திருக்கிறது என்பதனையும் நாம் பாராட்ட வேண்டும். நாங்கள் அவர்களோடு விவாதிக்கிறோம். கடந்த மூன்று நாள் விவாதங்கள் மகிழ்ச்சியாகவிருக்கிறது. சிக்கலான பல பிரச்சினைகள் குறித்து அவர்களோடு நாங்கள் விவாதித்தோம். முக்கிய பிரச்சினைகள் ஆனாலும் சரி, விளிம்பு நிலைப் பிரச்சினைகள் ஆயினும் சரி அவைகளை விவாதிக்கிறோம். ஆக்கபூர்வமாக அதனை எடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கிறது. இந்த சமதானச் செயல்போக்கு வெற்றி பெறும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**(ரோமன் போஸ் சரன் நியூஸ் ஏசியா)**

*கேள்வி:– இந்த மூன்று நாட்களிலும் நடந்த பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களை களைவதைக் குறித்து நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்பட்டதா?*

**அன்ரன் பாலசிங்கம்:–** இந்தச் சந்தர்ப்பத்தில் இதுபற்றி பேசப்படவில்லை. இலங்கையில் இரண்டு இராணுவங்கள் இருக்கின்றன. இரண்டு கடற்படைகள் இருக்கின்றன. முதன் முறையாக ஸ்திரமான போர் நிறுத்தம் என்பது நிலை நாட்டப்பட்டிருக்கின்றது. ஆயுதம் களைவது எனும் பிரச்சினையில், தமிழ் மக்களுடைய அபிலாசைகள் நிலைநாட்டப்படக்கூடிய ஒரு நிரந்தரமான ஒரு தீர்வை எட்டுவதற்கு முன்னால், இது பற்றி பேசுவது என்பது சாத்தியமில்லை. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் ஆயுதங்கள் களைவது குறித்துப் பேசுவது பொருத்தமற்றது.

*கேள்வி:– மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு நீங்கள் முன்னுரிமை கொடுக்கிறீர்களா? வடகிழக்கில் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் முன்னுரிமை கொடுப்பீர்களா?*

**அன்ரன் பாலசிங்கம்:–** இதுவரையிலும் எத்தனை மக்கள் இடம் பெயர்ந்தார்கள் என்பது குறித்த விபரங்களை நாங்கள் சேகரித்து வருகின்றோம். ஆனாலும், புனரமைப்புக்கும், புனர்நிர்மாணத்திற்குமான நிதி ஆதாரங்களைப் பற்றி நாங்கள் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றோம், அதற்கு எவ்வளவு நிதி தேவைப்படும் என்பது குறித்தும் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றோம்.

**(மீடியா கார்பொரேஸன் ஒஃப் சிங்கப்பூர்)**

*கேள்வி:– தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாடு குறித்துப் பேசிக்கொண்டு வந்திருக்கின்றீர்கள். அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இந்தப் பேச்சுவார்த்தை மூலம் அந்தக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் கைவிட்டுவிட்டதாகக் கொள்ளலாமா?*

**அன்ரன் பாலசிங்கம்:–** தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாடு (Separate State) என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் செயல்படவில்லை. நீங்கள் கருதிக்கொண்டிருக்கிற தனிநாடு என்ற வகையினத்திலிருந்தும், வரையறைகளிலிருந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டிருக்கும் கருத்தாக்கம் முற்றிலும் வித்தியாசமானது. நாங்கள் தாயகம், சுயநிர்ணய உரிமை என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில்தான் செயல்படுகின்றோம். அந்தத் தாயகம் என்பது தனிநாடு என்பதல்ல. அந்தத் தாயகம் என்பது தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் வாழுகின்ற ஒரு பிராந்தியம் (Territory). தமிழ் பேசும் மக்கள் வாழுகிற ஒரு பிராந்தியம். நாங்கள் சுயநிர்ணய உரிமை என்ற கருத்தாக்கத்தை உபயோகிக்கும்போது அதன் அர்த்தம், வரலாற்று ரீதியில் நாங்கள் வாழுகிற பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க சுய அதிகாரம் அல்லது சுயாட்சி என்று நாங்கள் அர்த்தப்படுத்துகின்றோம். இரண்டு பிரிவினரும் அவ்வகையான ஒரு அரசியல் அரசமைப்பையோ அல்லது கட்டமைப்பையோ ஒப்புக்கொள்வோமென்றால், அந்தத் தீர்வு ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருக்கும்.

ஆனால், சுயாட்சிக்கும் பிராந்திய சுய அதிகாரத்திற்குமான எங்களது கோரிக்கை நிராகரிக்கப்படுமானால், ஒடுக்குமுறைக்கான புறச்சூழல்கள் தொடருமானால், அப்போது வேறு எந்த வழியும் விட்டு வைக்கப்படாமல், ஒரு கடைசி நிலைப்பாடாக அரசியல் சுதந்திரத்திற்காகவும், அரசு அமைப்பதற்காகவும் போராடுவது தவிர வேறு வழியில்லை. சுயநிர்ணய உரிமை என்பதன் கீழ் அதுதான் கடைசி வழியாக எமக்கு இருக்கும்.


நீங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் சமகால ஆவணங்களின் அடிப்படையில புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் அந்தக் கருத்தாக்கங்களின் வழியல் செயல்படுகிறோம். தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தனிநாட்டுக்காகப் போராடுகிறார்கள் என்பது பொருத்தமில்லை. நாங்கள் வித்தியாசமான வகையினங்களின் அடிப்படையில் கருத்தாக்கங்களின் அடிப்படையில் செயல்படுகிறோம்.

*கேள்வி:– என்னுடைய கேள்வி இரண்டு பேருக்கும் இடையிலான கேள்வி. பிராந்திய அம்சங்களின் பிரதான அம்சங்கள் பற்றி பாலசிங்கம் அவர்கள் கூறினார். புனர்நிர்மாணம், புனரமைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு அப்பாலும் நீங்கள் சென்றீர்கள் என்றால் அதுபற்றி நீங்கள் என்ன விவாதித்தீர்கள் என்று சொல்வீர்களா?*

**ஜீ-எல்-பீரீஸ்:–** நாங்கள் அரசியல் பிரச்சினைகளையும், சட்டப் பிரச்சினைகளையும் குறித்துப் பேசினோம். இந்தப் பிரச்சினைகளை எந்தக் காலகட்டத்தில் எடுத்துப் பேசலாம் என்கிற விடயங்களை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். உடனடியான எங்கள் நாட்டு மக்களுக்கு முக்கியத்துவமுள்ள பிரச்சினைகளை நாங்கள் எடுத்துக் கொண்டோம். மனிதர்கள் சார்ந்த பிரச்சினைகள், கண்ணிவெடிகள் அகற்றுதல், மீளக்குடியமர்த்தல், புனர்நிர்மாணம் போன்ற விடயங்கள் குறித்துப் பேசினோம். பொருளாதார அபிவிருத்திக்கான நிதி ஆதாரங்களை எப்படித் திரட்டுவது என்கிற பிரச்சினைகள் குறித்துப் பேசினோம்.

வடகிழக்குக்கு மட்டுமல்ல நாடெங்கிலும் இதை எவ்வாறு செய்வது என்பது குறித்துப் பேசினோம். சமாதனப் போக்கின் மிகமுக்கியமான அம்சங்களில் ஒன்று பொருளாதார அபிவிருத்தி என்பது. இதைச் செயல்படுத்தவதற்கு எவ்வாறான அமைப்பு உருவாக்க வேண்டும் என்பது குறித்துப் பேசினோம். நாங்கள் சில குறிப்பிட்ட விடயங்கள் குறித்தப் பேசினோம் என்பது சரியல்ல. நாங்கள் வேறுபட்ட பல பிரச்சினைகள் பற்றிப் பேசினோம். நாங்கள் எங்களுடைய முன்னுரிமைகளைத் தீர்மானிக்க வேண்டும். எங்கு தொடங்குவது, எந்தெந்தப் பிரச்சினைகளைக் கவனம் குவிப்பது எனப் பேசினோம். எங்களது தொடர்ந்த பேச்சுக்கான விடயங்களையும், திகதிகளையும் நாங்கள் அங்கீகரித்திருக்கிறோம். எவ்வாறு இந்த சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மேற்கொள்கிறோம் என்பதற்கு எங்களது அடுத்த கட்டப் பேச்சுக்கு சில வரைமுறைகள் அமைப்புகள் வேண்டும்.

**அன்ரன் பாலசிங்கம்:–** நான் பேராசிரியர் திரு. பீரிஸ் அவர்களோடு இந்த விடயத்தில் உடன்படுகிறேன். தமிழ் தேசியப் பிரச்சினை என்பது மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை. அது நீண்ட வரலாறு கொண்ட ஒரு பிரச்சினை. அதை குறுகிய காலத்தில் தீர்க்க முடியும் என நீங்கள் நினைக்கக்கூடாது. காலம் வேண்டும். கட்டம், கட்டமாக நாங்கள் போகவேண்டும். நாங்கள் தொடங்கியிருக்கிறோம். இப்போது நாங்கள் மீள்குடியமைப்பு, புனர்நிர்மாணம் போன்றவற்றோடு ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்கவது தொடர்பாகப் பேசினோம். அதற்கு அடுத்தபடியாக இடைக்கால நிர்வாக அமைப்புக்கு அடுத்தபடியான நிர்வாக அமைப்பை உருவாக்குவது தொடர்பாகவும் நாங்கள் பேசினோம். ஒன்றன் பின்



ஒன்றாக பிரச்சினைகளை எடுத்துக் கொள்வதன் மூலமே இந்தச் செயல்போக்கு வெற்றி பெறும் என நாங்கள் நம்புகிறோம்.

**(ராஜ்பாலா விநாயக்-சண்டே ரைம்ஸ் கொழும்பு)**

*கேள்வி:– வடகிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பாகவும் இரண்டு தரப்பிலுமான பதட்டத்தை நீக்கும் வகையிலும் பேச்சுவார்த்தை தொடங்கியதாகச் சொன்னீர்கள். கொழும்பில் நிலவும் ஒரு விதமான சந்தேகத்தை நான் உங்களிடம் கேட்கிறேன். இடைக்கால நிர்வாகம் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் அமையப் போவதாகச் செய்திகள் வருகிறது. இது சம்பந்தமாக உங்கள் பேச்சுவார்தையில் விவாதிக்கப்பட்டதா?*

**ஜீ-எல்-பீரீஸ்:–** இது ஒரு சிக்கலான பிரச்சினை. ஆகவேதான் நாங்கள் கட்டம் கட்டமாகப் போக நினைக்கிறோம். இடைக்கால நிர்வாகத்தில் எவரெவர் இடம் பெறுவர் என்பது பற்றியோ, அதனது அமைப்பு பற்றியோ விவரங்களுக்குள் நாங்கள் இப்போது போகவில்லை. அதற்கான தளத்தை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். அதை உருவாக்குவதற்கான பூர்வாங்க முன்னெடுப்புகளை நாங்கள் செய்திருக்கிறோம். இந்தப் பாதையில் நாங்கள் கட்டம் கட்டமாக என்னென்ன செய்யப்போகிறோம் என்பதை எதிர்காலத்தில் உருவாக்குவோம். உடனடியாக அல்ல. எடுத்தவுடன் இவைகளை உருவாக்கிவிட முடியாது. இதனோடு சம்பந்தமான பூர்வாங்கமான விடயங்கள் குறித்து நாங்கள் விவாதித்திருக்கிறோம். அடுத்த கட்டத்துக்கு இதனை எப்படி எடுத்துச் செல்வது என்பதில் நாங்கள் புரிந்துணர்வுக்கு வந்திருக்கிறோம்.


**அன்ரன் பாலசிங்கம்:–** இடைக்கால நிர்வாகம் என்பது தன்னளவில் இறுதியானது என்கிற மாதிரியான ஒரு தவறான புரிந்துணர்வு கொழும்பில் நிலவுகிறது. இடைக்கால நிர்வாகம் குறித்து விரிவாகவோ ஆழமாகவோ எதையும் நாங்கள் விவாதிக்கவில்லை. இறுதித் தீர்வுக்கான ஒரு பாதையாக இது இருக்கும். அல்லது செயல்படக்கூடிய ஒரு தீர்வின் பகுதியாக இது இருக்கும். விடுதலைப் புலிகள்தான் இடைக்கால நிர்வாகத்தை நடத்தப் போகிறார்கள் என்று இன்றைய சந்தர்ப்பத்தில் சொல்வது முழுக்கவும் தவறான புரிதலாகும். ஆனால் ஒரு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுதல் தவறல்ல. அதில் விடுதலைப் புலிகளுக்கு முக்கியமான இடம் தரப்படுதலும் தவறில்லை. அவர்கள் அதற்காகப் பல்லாண்டுகள் போராடி வருகிறார்கள். நாங்கள் ஒரு வன்மையான கொடூரமான யுத்தத்தில் ஈடுட்டிருக்கிறோம். எங்களது போராளிகளுக்கு எங்களது தொண்டர்களுக்கு ஒரு வாய்ப்புத் தரப்படவேண்டும். எங்கள் சொந்தத் தாயகத்தில் நிர்வாகத்தை நடத்த எங்களுக்கு வாய்ப்பு தரப்பட வேண்டும். அதில் என்ன தவறு இருக்கமுடியும். தேவையில்லாத அபிப்பிராயங்கள் கொழும்பில் இருக்கிறது. ஆகவே இவ்வகையில் ஒரு இடைக்கால நிர்வாகம் அமைவதில் தவறில்லை.

*(மிகுதி அடுத்தவாரம்)*

*தமிழில்: ஐ.பி.சி. (இலண்டன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு. தம்பையா இராசரத்தினம்

**தோற்றம்: 22.09.38** **மறைவு: 18.09.02**

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தம்பையா இராசரத்தினம் அவர்கள் 18.09.02 புதனன்று யாழ்ப்பாணத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

இவர் திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பையா-முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதி களின் அன்பு மருமகனும் சத்திய சீலன் (சதீஸ், பிரான்ஸ்) சபேசன் ஆகி யோரின் அன்புத் தந்தையும் சுபாஜினி (பிரான்ஸ்) நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுராவின் பேரனும், காலஞ்சென்ற சண்முகம், மாணிக்கம் காலஞ்சென்ற நாகரத்தினம் ஆகியோரின் சகோதரரும், நாகம்மா, நவரத்தினம், இராசரத்தினம் காஞ்சென்ற சிவயோகம், அரசரத் தினம் (இந்தியா) இராசரத்தினம், சீவரத்தினம் (பிரான்ஸ்), தனலட்சுமி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பரமசாமி, ஜெயா (இந்தியா) ரத்தினாம்பாள் மணி (பிரான்ஸ்) லோகநாதன் ஆகியோரின் சகலரும், காலஞ்சென்ற ஜெயம், ஜெயகௌரி (பிரான்ஸ்), ஜெயராணி, ஜெயந்தினி, ரதி, நாதன் (கனடா), சிறீ, லோகன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், தர்சிகாவின் பெரியப்பாவும், ஜெயமங்களம் (ஜேர்மனி), லீலாவதி (கனடா) லலிதா (ஜேர்மனி), லதா (ஜேர்மனி), ஜெயபாலன் (ஹொலண்ட்) ஜெயச்சந்திரன் (சுவிஸ்), ரஜிகலா (சுவிஸ்), விஜிகலா ரஜீவன், தீபன் (U.K) செந்தூரன் (இந்தியா) தீபா, பிரசாந், மதுரா, யோகா, செல்வி (கனடா), கௌரி, சுஜி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 20.09.02 வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*தொடர்புகளுக்கு: மகன் - சதீஸ் - 0663973651 (பிரான்ஸ்)*
*மைத்துனன் - ஜீவன் - 01 44 930216 (பிரான்ஸ்)*

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி


*புண்ணிய பூமி எனும் புங்கைநகர் மாதாவின்*
*உத்தம புத்திரனே உயர்வான தத்துவமே.*
*திருவுக்கு உருவாகி நாவுக்கு அரசான திருநாவுக்கரசே,*
*கடமை எனும் வழிநின்ற கண்ணியத்தின் மறு உருவே,*
*தொண்டு என்ற சொல்லுக்கு இலக்கணமாய் இருந்தவரே,*
*சொந்த மண்ணின் விடிவுக்காய் உறங்காது உழைத்தவரே,*
*சேவைகளின் வரிசையிலே ஒன்றல்ல இரண்டல்ல*
*விடிவெள்ளி என நின்று மறையாது ஒளிர்ந்தவரே...*

*சுய நலம் பாராது பொது நலம் பெரிதென்று வாழ்ந்தாயே*
*மானிடர் யாவரையும் வர்க்க பேதமின்றி பார்த்தாயே.*
*பசித்து நின்றோர்க்கு மன மகிழ்ந்து பசி தீர்த்து*
*பார்த்து மகிழ்ந்தாயே – ஊரார்க்கு எல்லாம் மெழுகுவர்த்தியாய்*
*இருந்தாயே...*
*நா வன்மை நிரம்பப் பெற்ற உத்தமரே*
*உன் சிந்தனை யாவும் செயல் வடிவே*
*நின் முயற்சியால் உருவான இடங்கள் எத்தனை*
*நீ இன்றிப் போனாலும் அவை உன் பெயரையே செப்பி நிற்கும்,*
*தாய் மண்ணிற்குச் செய்த சேவை தனை–ஊரார்*
*என்றும் உரைத்திடுவர் தம் சந்ததியினர்க்கு*
*உன் வழியில் செல்லப் பலர் வந்திடவேண்டும் – அதற்கு நீரே கூர்ந்திட*
*வேண்டும் கருணை!*

* என் கடன் பணிசெய்து கிடப்பதே.
* மக்கள் சேவையே மகேசன் சேவை.
* யாதும் ஊரே யாவருங் கேளிர்.
* சிவதொண்டு செய்வதே எமது தொழில் அதற்காகவே நாம் பூமியில் வாழ்கின்றோம்.
* நன்றும் தீதும் பிறர் தர வாரா!

என்ற மூல மந்திரங்களை முரசாகக்கொண்டு 40 வருட சேவைகளையும், கடமைகளையும் நெறிப்படுத்திய தொண்டர் - திரு அவர்களின் ஆத்ம சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தகவல்: திரு. திருமதி ம. கனகரட்ணம் குடும்பம்
Tel: 01 69 52 84 65 / 01 69 40 59 45



**தொண்டர்-திரு. கந்தையா திருநாவுக்கரசு**
வட இலங்கை சர்வோதயம் அமைப்பாளர்
புங்குடுதீவு–3

**உதிர்வு: 01.03.1939** **மறைவு: 03.10.2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமுரசின் இசைமுரசு 2002 டென்மார்க்

டென்மார்க்கில் இரண்டாவது தடவையாக ஈழமுரசு நடாத்திய இசை முரசு 2002 இற்கான சிறந்த பாடகர் தேர்வுப்போட்டி கடந்த 07.09.2002 சனிக்கிழமை அன்று வைல (Vejle) நகரில் மிகவும் சிறப்புற நடந்தேறி இருந்தது குறிப்பிடத்தக்கது.



நிகழ்வுகளானது எம் தாயக மீட்புக்காய் தம் இனிய இளைய உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களுக்காகவும் மக்களுக்காகவும் அமைதி வணக்கம் செலுத்திக்கொண்டு ஈழமுரசின் வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட ஈழமுரசின் ஆசிரியரான கப்டன் கஜனின் திருவுருவப்படத்திற்கு விளக்கினை தமிழீழ விடுதலைப் புலிகளின் வைல பிரதேச பணியாளர் திரு. ஜெயபாலன் அவர்கள் ஏற்றிக்கொண்டதோடு சிறந்த பாடகர்களுக்கான போட்டி நிகழ்வுகள் தொடக்கத்திற்கு வந்தன. இதில் போட்டிளாயர்கள் மூன்று பிரிவுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என்பவையே அவை. இவற்றுடன் இணைகுரல் போட்டியும் இடம் பெற்றுக்கொண்டது. இந் நிகழ்வில் 30இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றிச் சிறப்பித்துக்கொண்டனர். இதற்கு நடுவர்களாகக் கடமையாற்ற ஜேர்மனிலிருந்து வருகை தந்திருந்தார்கள் திருமதி பரராஜசிங்கம்(இவர் வட இலங்கை சங்கீதசபையினரின் Music Diploma இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில் பெற்றதோடு பயிற்றப்பட்ட ஆசிரியருமாவார்), சங்கீத கலா வித்தகர் திருமதி விஜயலட்சுமி போஜராஜசர்மா (இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் இசை விரிவுரையாளராகக் கடமையாற்றியதோடு தாயக பாடல்கள் சிலவற்றையும் பாடியுள்ளார்) இருவரும் தமிழாலயத்தில் கல்வி கற்பிப்பவர்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இவ்விரு ஆசிரியர்களும் மேடையில் சிறப்பாக ஒவ்வொரு பாடல்களும் தந்ததோடு இவர்களை மலர்ச்செண்டு கொடுத்து கௌரவித்துக்கொண்டார் டென்மார்க் தமிழீழ இசைக்குழுவைச் சேர்ந்த செல்வி தர்சினி ஜெயரட்ணம் அவர்கள்.

அரங்கில் 'பித்தலாட்டம்' எனும் நாடகமும் விரிந்திருந்தது. இதனை வழங்கி இருந்தார்கள் வைல மாலதி தமிழ்க் கலைக்கூட மாணவர்கள். நாடகமானது தாயகம், புலம்பெயர் சூழல் என விரிந்திருந்தது. இதே அரங்கில் திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களினால் எழுதி ஆக்கம் பெற்ற சுதந்திர வேட்கை நூலும் வெளியிடப்பட்டது. இறுதியாக போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதனை வழங்கிக்கொண்டார் தமிழீழ விடுதலைப் புலிகள் வைல பிரதிநிதி திரு. ஜெயபாலன் அவர்கள்.

**கீழ்ப்பிரிவில்:**

முதலாமிடம் -செல்வி. பிரியங்கா கோபாலசிங்கம்.
இரண்டாமிடம் - செல்வி. கீர்த்தனா சிவசுப்ரமணியம்.
மூன்றாமிடம் - செல்வி. டர்னிசா யுவராஜ்

**மத்தியபிரிவு:**

முதலாமிடம் - செல்வி. அபர்ணா குகதாசன்.
இரண்டாமிடம் - செல்வி. நிசாந்தினி ரவீந்திரன்.
மூன்றாமிடம் - செல்வி. வேணி ஜெயலிங்கம்.

**மேற்பிரிவு:**

முதலாமிடம் - செல்வன். பிரசாந் கந்தசாமி.
இரண்டாமிடம் - திரு. கெவின்.
மூன்றாமிடம் - திரு. தர்மலிங்கம்.

**இணைகுரல்:**

முதலாமிடம் - திரு. தர்மலிங்கம், திரு. ஜெயலிங்கம்.
இரண்டாமிடம் - செல்விகள் ஜனார்தனி குகதாசன், அபர்ணா குகதாசன்.
மூன்றாமிடம் - செல்விகள் கலைவாணி ஜெயலிங்கம், வேணி ஜெயலிங்கம்

இந்நிகழ்வுகள் யாவும் T.T.N. டென்மார்க் கலையகத்தினரால் படப்பிடிப்புச் செய்யப்பட்டதோடு நிகழ்வுகள் திருமதி காயத்திரி சுபாசங்கர் அவர்களால் தொகுத்து வழங்கப்பட்டிருந்தது.

இறுதியாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்ற பாடலுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவு பெற்றன.

– செ. ஆனந்தன்





### கீழ்ப்பிரிவு



செல்வி பிரியங்கா கோபாலசிங்கம்



செல்வி கீர்த்தனா சிவசுப்ரமணியம்



செல்வி டர்னிசா யுவராஜ்

### மத்தியபிரிவு



செல்வி அபர்ணா குகதாசன்



செல்வி நிசாந்தினி ரவீந்திரன்



செல்வி வேணி ஜெயலிங்கம்


### மேற்பிரிவு



செல்வன் பிரசாந் கந்தசாமி



திரு.கெவின்



திரு. தர்மலிங்கம்

### இணை குரல்



திரு. தர்மலிங்கம், திரு. ஜெயலிங்கம்.



செல்வி ஜனார்த்தனி குகதாசன், செல்வி அபர்ணா குகதாசன்.



செல்வி கலைவாணி ஜெயலிங்கம், செல்வி வேணி ஜெயலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் போராட்டத்தை அவமதித்த அரட்டை அடிக்கும் விசுக்கு எதிராக
# கனடியத் தமிழர் போராட்டம்

தென்னிந்திய நடிகர் விசு ஈழத்தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்தி அரட்டை அரங்குகளில் பேசி வந்தார் என்பதற்காக கனடா நாட்டில் வாழும் தமிழர்கள் அவரின் நிகழ்ச்சியைப் புறக்கணித்தனர். இதனால் விசுவின் அரட்டை அரங்கம் படுதோல்வியில் முடிந்துள்ளது.

கடந்த மாதம் 14, 15ம் திகதிகளில் விசுவின் அரட்டை அரங்கம், கனடாவின் குட்டி யாழ்ப்பாணம் என்று சொல்லுமளவுக்குத் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதியான ஸ்காபுரோ நகரில் உள்ள வின்சண்ட் சேர்ச்சில் கல்லூரி கலையரங்கில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இந்நிலையில், விசு தமிழர்களுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிராகச் சொல்லி வந்த கருத்துக்களை முழக்கம் பட்டியலிட்டு பகிரங்கக் கடிதம் ஒன்றை எழுதியது. அக்கடிதத்தில் ஈழத்தமிழர்களின் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரிக்கும் விசு அவர்களே ஈழத்தமிழர்கள் கொடுக்கும் பணம் மட்டும் பயங்கரமானது இல்லையா? சரி ஒரு பேச்சுக்கு உங்கள் மொழியில் ஈழத்தமிழர்கள் எல்லாம் பயங்கரவாதிகள், களவாண்டி பசங்கள் என்று வைத்துக் கொள்வோம். அரட்டை அரங்கம் என்னும் கலை நிகழ்வை பயங்கரவாதிகளுக்கு விற்றுப் பணம் பெறுவது இந்திய நாட்டுச் சட்டப்படி குற்றம் இல்லையா' எனக் குறிப்பிட்டிருந்தது.

இதேவேளை, விசுவின் அரட்டை அரங்கை புறக்கணிப்போம். இனமானம் தன்மானம் காப்போம் என உலகத்தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்து பத்திரிகை அறிக்கை கொடுத்தது. முழக்கம், ஈழமுரசு, உலகத்தமிழர் ஆகிய பத்திரிகைகள் இதனை விளம்பரப்படுத்தின. தொடர்ந்து உலகத்தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தின் தலைவர் திரு. வே. தங்கவேலு அவர்கள் தலைமையில், அரட்டை அரங்கம் நடைபெறும் மண்டபத்திற்கு முன் மக்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராக பேசி வருபவர் விசு என்று அறிந்ததும் மக்கள் அரட்டை அரங்கைப் புறக்கணித்தனர். ஒரு நாள் மட்டும் நிகழ்ச்சி வைத்தால் மக்கள் இருப்பதற்கு போதிய இருக்கைகள் மண்டபத்தில் இல்லை என்பதற்காக இரண்டுநாள் நிகழ்ச்சி நடப்பதாக ஏற்பாடாகியிருந்தது. ஆனால் முதல்நாள் நிகழ்ச்சிக்கு 1600 இருக்கைகளைக் கொண்ட அரங்கில் வெறும் 52 பேர் மட்டுமே கூடினர். அவர்களிலும் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் விழா ஏற்பாட்டுக் குழுவினரின் குடும்பத்தினரையும் விலக்கிப் பார்த்தால் 20க்கும் குறைவானவர்களே இருந்தனர். இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு நுழைவுச்சீட்டின் கட்டணம் 25 டொலரில் இருந்து 5 டொலராகக் குறைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. வானொலி நிலையம் ஒன்று ஒருபடி மேலே போய் இலவசமாக ரிக்கட் வழங்கியும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு 71 பேரே அரங்கில் இருந்தனர். இவர்களில் கனடாவில் இருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த தமிழர்கள், கனடா, அமெரிக்காவில் வாழும் விசுவின் உறவினர்கள், செய்தியாளர்கள், விழா ஏற்பாட்டாளர்கள் அடங்குவர்.





இரண்டாம் நாள், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற புறக்கணிப்புப் போராட்டத்திற்கும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் உணர்வு மேலீட்டோடு பங்குபற்றினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விசுவுக்கு எதிரான சுலோக அட்டைகளை ஏந்தியிருந்த மக்கள் எதிராக குரலும் எழுப்பினர். முடிவில் கண்டனக்கூட்டம் நடைபெற்றது. அங்கு பலர் உரையாற்றியிருந்தனர். உலகத்தமிழ்ப் படைப்பாளிகள் சங்கத் தலைவர் திரு. தங்கவேலு அவர்கள் பேசுகையில், இது தனிப்பட்ட விசுவுக்கு எதிரான போராட்டம் அல்ல. தமிழ்த்தேசிய உணர்வுகளை மதிக்காத அல்லது அதற்கு மரியாதை கொடுக்காத யாருக்கும் நாங்கள் மதிப்போ மரியாதையோ கொடுக்கமாட்டோம். திரு. விசுவைப் பொறுத்தவரை தமிழ்த் தேசிய உணர்வுகளுக்கு எதிரான போக்கையே கடைப்பிடித்து வந்திருக்கின்றார். பொடாச் சட்டத்தின் கீழ் மறுமலர்ச்சி முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், செயலர் சுப. வீரபாண்டியன், புதுக்கோட்டைப் பாவாணன் மற்றும் தமிழின உணர்வாளர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதற்கு நேரடியாக இல்லாவிட்டாலும் விசு போன்றவர்கள் மறைமுகமாகக் காரணமாக இருந்திருக்கின்றார்கள். வைகோ, நெடுமாறன், பாவாணன் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டிருக்கும் இந்தவேளையில், பொழுதுபோக்குவதற்கு அரட்டை அடிக்கும் விசு இங்கு நிகழ்ச்சி நடத்துவது இழவு வீட்டில் கச்சேரி நடத்துவதற்கு ஒப்பாகும் என்றார்.

❄❄❄

**விசு தமிழினத்திற்கு எதிராக கூறிய கருத்துக்களில் சில**

- கரும்புலிகள் காசுக்காக மாரடிக்கும் கூட்டம்.
- புலிகள் கொலைவெறிபிடித்த பயங்கரவாதிகள்.
- ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேரையும் தூக்கிலிடவேண்டும்.
- தமிழீழத்திற்கு ஆதரவாகப் பேசக்கூடாது.
- சந்திரிகா பயங்கரவாதத்திற்கு எதிராக தனித்துநின்று துணிச்சலாகப் போராடும் பெண்.
- நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் கழுத்துகளில் தூக்குக்கயிறு இறுகும் சத்தத்தை நான் காது குளிரக் கேட்கவேண்டும்.
- சிறீலங்கா அரசு கொடுக்கும் தீர்வையே தமிழர்கள் ஏற்கவேண்டும்.

**விசுவுக்கு எதிரான முழக்க அட்டைகளில்...**

- தாய்த் தமிழக உறவுகளை ஒழித்திருந்து தாக்கும் குள்ளநரி.
- ஈழத்தமிழர் போரட்டம் கசக்கிறது. அவர்கள் பணம் மட்டும் இனிக்கிறதா?
- அரட்டை அடிப்பதற்கு கனடா களம் அல்ல. கொறட்டை விடும் தமிழர்களிடம் அதை வைத்துக்கொள்.
- வேங்கையின் குகையில் குள்ளநரிக்கு என்னவேலை.
- மனிதநேயம்பேசும் விசு 26 தமிழர்களுக்கும் தூக்கு போடவேண்டும் என்றது ஏன்?
- தமிழினத்தின் பகைவன் விசு, சந்திரிகாவின் துதிபாடும் கொசு




பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
Centre Parisien d'Education pour les Tamouls
பிரெஞ்சு அரசால் அங்கீகரிக்கப்பட்டது No d'Ordre 86-3394
புதிய வகுப்புக்கள்
பிரெஞ்சு வகுப்பு
பிரெஞ்சு பேச நீங்கள் அனைத்து முயற்சிகளும் செய்துவிட்டீர்களா?
- உச்சரிப்பு (La phonétique)
- அடிப்படை இலக்கணம் (La grammaire niveau débutant)
- உயர் இலக்கணம் (La grammaire niveau avancé)
- உரையாடல் (Les conversations)
- கடிதம் எழுதுதல் (Les correspondances)
ஆசிரியர் கஜன்
ஆரம்பம் 28/09/2002 நேரம் 16:00 - 17:30
கணனி வகுப்பு
- அனைவருக்கும் கம்பியூட்டர் கல்வி
- இணையவலை (Internet)
- தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் கற்பிக்கப்படுகிறது
ஆசிரியர் சேரமன்
உங்களையும் கணனியுகத்திற்குள் இணைத்துக்கொள்ள அடிப்படை வகுப்பு
ஆரம்பம் 28/09/2002 நேரம் 14:00 - 16:00
(சனி, ஞாயிறு 13:00-21:00) 165, rue de Charonne, 75011 Paris.
Tél : 01.43.56.17.91 E-Mail: ptec@online.fr
M° : Charonne ou Alexandre Dumas



உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்
கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியூமராலஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கெள்ள வேண்டிய முகவரி
Pega Star -Co Verléger
Mr. A. Thevaraj
Böblinger str. 87
70199 Stuttgart/ Germany
Tel: 0049+711 - 6157028 / Fax: 0049+711-6157030
E-Mail: theva@t-online.de
ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 60 DM, 60 Swiss FR, 170FF மட்டுமே!
படிவத்தை நிரப்பி அனுப்பவும்!
Fullname: ...
Date of Birth: ... Time of Birth: ...
Place of Birth: ...
Address: ...
City/ Date: ...
Signature
Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj
Pub.Gr



Asha Video Movies
உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தரப்படும். மற்றும் அறுசுவை மிக்க சைவ/அசைவ உணவு வகைகளையும் செய்து தருகின்றோம்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்திசிகாமணி பதில்கள்

* கனடாவுக்கு அரட்டை அரங்கம் நடாத்தச் சென்ற விசு குழுவினருக்கு எதிராக ஈழத் தமிழர்கள் எதிர்ப்பார்ப்பாட்டம் நடத்தியுள்ளார்களாமே...?

*ம்ா. தவபாலன் - பாரிஸ்-19, பிரான்ஸ்.*

➲ சினிமாவில் இருந்து ஓரங்கட்டப்பட்டு தற்போது அரட்டையே வாழ்வாகிப்போன விசு, போராட்டமே வாழ்வாகிப் போன ஈழத்தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தையும், அதனை வழிநடாத்தும் விடுதலைப் புலிகளையும் அவ்வப் போது மிக மோசமாக கொச்சைப்படுத்தி வந்துள்ளார். ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில் மிக உன்னதமான வீரவரலாறுகளைப் படைத்துவரும் கரும்புலி வீரர்களைக் கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் என வசைமாரி பொழிந்துள்ளார். ஈழத் தமிழர் பால் இத்தகைய வன்மம் நிறைந்த பார்ப்பானிய பாதுகாவலரான விசுவை ஈழத்தமிழர்களே வளர்த்து வருவதுதான் வேடிக்கை. இந்த வகையிலேதான் அண்மையில் கனடாவில் விசுவுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டம் ஒவ்வொரு புலம்பெயர்ந்த நாட்டு ஈழத் தமிழர்களுக்கும் விழிப்பை ஏற்படுத்தவேண்டும். ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டத்திற்கு எதிரான அனைத்து தமிழகத்து பிரமுகர்களையும் நாம் நிராகரிக்க முன்வரவேண்டும்.

* பேச்சுவார்த்தை சரிவராது என எனது நண்பன் அடம்பிடிக்கிறான். இதுபற்றி உமது அபிப்பிராயம் என்ன?

*ச. குருநாதன் - சூரிச், சுவிஸ்.*

➲ உனது நண்பன், இரண்டு அடிப்படையில் இந்தக் கருத்து வலியுறுத்த வாய்ப்புண்டு. முதலாவதாக சிறீலங்கா அரசுடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட சமாதானப் பேச்சு முறிவுகளும் கசப்பான அனுபவங்களும் ஆழ்ந்த அரசியல் அனுபவப் பார்வையும் பேச்சுக்கள் சரிவராது என்ற எண்ண வெளிப்பாட்டை உனது நண்பனின் மனதில் ஏற்படுத்த வாய்ப்புண்டு. இந்நிலையில் உமது நண்பனுடன் ஒரு ஆரோக்கியமான விவாதக்களத்தை ஏற்படுத்தி பரஸ்பர தெளிவு நிலையை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். மறுபுறத்தே வெறும் மேம்போக்கான தன்னல நிலையிலும் இப்படியான கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்புண்டு. பிரச்சினை தீர்ந்தால் இந்த மேலைநாடுகள் தம்மைத் திருப்பி அனுப்பி விடுவார்களோ என்கின்ற மன ஆதங்கத்தின் வெளிப்பாடாக இவ்வாறான குறுகிய மனோபாவ வெளிப்பாடுகளும் ஏற்படவாய்ப்புண்டு. அப்படியாயின் உங்கள் நண்பனைத் தெளிவாக்குங்கள்.

* தாய்லாந்தில் நடைபெற்றிருக்கும் முதல்கட்ட அரசுக்கும் புலிகளுக்குமிடையேயான சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும் என்கின்ற நம்பிக்கையைப் பரவலாக ஏற்படுத்தியிருக்கிறது. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

*காந்தரூபன் - பேர்ன், சுவிஸ்.*

➲ தாய்லாந்தில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைத்துப் பேசிய நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்கெய்ம், 'கடவுள் ஒரு வாயைப் படைத்துள்ளார். ஆனால் இரண்டு காதுகளைப் படைத்துள்ளார். கேளுங்கள், மற்றவர்களுடைய கருத்தை மிக நன்றாகக் கேளுங்கள்' என்று குறிப்பிட்டிருந்தார். ஈழத்தமிழர்களின் நியாயமான உரிமைக் குரலை அரசு தரப்பு எப்படி செவிமடுக்கப் போகிறது என்பதைப் பொறுத்துத்தான் சமாதானப் பயணத்தின் முடிவு தீர்மானிக்கப் படும். தமிழர் சார்பாக பேச்சு மேசையில் அமர்ந்திருப்பவர்கள் மிக உறுதியானவர்களாக, பலம் பொருந்தியவர்களாக, தமிழரின் வாழ்வுரிமை சார்ந்து எத்தகைய விட்டுக்கொடுப்புகளுக்கும் சமரசங்களுக்கும் இடம்கொடுக்க முடியாதவர்களாக இருப்பதால் சமாதானப் பயணத்தின் இறுதிப் பகுதிகள் மிகக் கடினமாக இருக்க வாய்ப்புண்டு. நாம் அவசரப்படாது மிக அவதானத்துடனும், நிதானத்துடனும் விழிப்புடனும் எமது இலக்கு நோக்கி தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டேயிருக்க வேண்டும்.

**வடக்கு– கிழக்கு அபிவிருத்திக்கு சர்வதேச சமூகத்திடம் 50 கோடி கேட்கும் புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன அதனை ரத்வத்தையிடம் கேட்கலாமே?**

* தாய்லாந்தில் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து ஆலோசிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

*தமிழ்வேந்தன் - செனரனீஸ், பிரான்ஸ்.*

➲ தாய்லாந்தில் நடைபெற்று முடிந்துள்ள அரசு-புலிகளுக்கிடையேயான முதல்கட்ட பேச்சுவார்த்தை அரசியல், இராஜதந்திர ரீதியில் விடுதலைப்புலிகள் சாதித்திருக்கும் மிகப் பெரிய வெற்றி என்றே நான் நினைக்கிறேன். உலகத்தின் மூலை முடுக்கெல்லாம், பரவலான ஊடகங்களில் எல்லாம் இந்தச் சமாதான பேச்சுவார்த்தை பற்றிய செய்திகள் வெளியாகி ஈழத்தமிழர்களுக்கு தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் உண்டு என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் அனைத்து சர்வதேச நாடுகளும், அமைப்புகள் நிறுவனங்கள் என்பனவும் இந்த நிகழ்வைப் போற்றி வரவேற்றிருக்கின்றன. இந்நிலையில் புலிகள் மீதான சில சர்வதேச நாடுகளின் தடைகள் நீங்குவதுடன் பல அனுகூலங்கள் ஈழத் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவே செய்யும்.

* வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கு சர்வதேச சமூகத்திடம் 50 கோடி கேட்கும் புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன அதனை ரத்வத்தையிடம் கேட்கலாமே?

*ப. சிவநாதன் - துலூஸ், பிரான்ஸ்.*

➲ உங்கள் மன ஆதங்கம் எமக்குப் புரிகிறது. முன்னைய ஆட்சியில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரத்வத்தையும் வட கிழக்குப் பகுதியின் பேரழிவுகளுக்குக் காரணமாக இருந்தார் என்பது உண்மைதான். ஆனால் இன்று பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக கூனிக்குறுகி குடும்ப சகிதம் சிறையும் நீதிமன்றமுமாக அலைகிறார் ரத்வத்தை.

* கடந்த காலங்களில் ஏராளமான ஆயுதங்களை சிறீலங்கா அரசுக்கு வழங்கி தமிழின அழிப்புக்குத் துணைபோன சோசலிச நாடான சீனாவின் தூதுவரும் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேசியுள்ளாரே?

*தனபாலசிங்கம் - பாரிஸ் 11, பிரான்ஸ்.*

➲ ஆயுத உதவி என்பது வியாபாரம் சார்ந்த விடயமாக இருந்த போதிலும் சோசலிச நாடான சீனாவின் கடந்த கால செயற்பாடுகள் ஒவ்வொரு ஈழத் தமிழர்களுக்கும் வேதனையளிப்பதாகவே இருந்தது. கடந்த காலங்களில் தமிழீழப் பகுதி சர்வதேச நாடுகளின் பார்வையில் இருந்து முற்றாக மூடி மறைக்கப்பட்டு அங்கு நடைபெற்றுக்கொண்டிருப்பது ஒரு அநாவசியமான கலகம் எனவும் போராளிகளை பயங்கரவாதிகளெனவும் தனது அரச சாதக பொய்பிரச்சாரங்களால் சர்வதேசங்களை ஏமாற்றியதில் சிறீலங்கா அரசு ஓரளவுக்கு வெற்றி பெற்றதெனவே கூறலாம். இந்நிலையில் தற்போதுதான் வன்னியின் நிதர்சனத்தைத் தரிசிக்கும் வாய்ப்பு சர்வதேச நாடுகளுக்குக் கிட்டியுள்ளது. இனிமேல் சீனா உள்ளிட்ட பல நாடுகளில் சிறீலங்கா சார்ந்த கொள்கையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

* அண்மையில் பருத்தித்துறைப் பகுதியில் நடைபெற்ற மாணவர் போராட்டம் அநாவசியமானதென்றும் குழவிக்கூட்டின் மேல் கல்லெறியக்கூடாது எனவும் டக்ளஸ் தேவானந்தா கூறியிருப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

*அராலியூர் கலைமகள் -பாரிஸ், பிரான்ஸ்.*

➲ ஆக்கிரமிப்புக் குழவிகளான சாம்ராஜ்சியத்துக்குள் இருந்துகொண்டு கூனிக்குறுகி அவர்களுக்குச் சேவகம் செய்து வந்த டக்ளசின் வாயிலிருந்து இவ்வாறான வாந்தியெடுப்புக்கள் வெளிவருவது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. ஆக்கிரமிப்பு இராணுவத்தின் எத்தகைய கொடூரங்களுக்கு முகம் கொடுத்தாயினும் அவர்களை எமது மண்ணிலிருந்து வெளியகற்ற நினைக்கும் எமது மக்களின் பேரெழுச்சியுணர்வைக் கொச்சைப்படுத்த நினைக்கும் டக்ளஸ் எமது போராட்ட வரலாற்றின் கறைபடிந்த துரோகப் பக்கங்களில் எப்போதோ பதியப் பட்டுவிட்டார்.


# 31ம் நாள் நினைவஞ்சலி

## சுந்தரமூர்த்தி இராசவேல்

**கக்கனுக்காய் கண்ணீர் அஞ்சலிகள்**

(கக்கன்)

- வல்வெட்டித்துறை -



ஈழத்து வல்வைத் தமிழ் பெற்றெடுத்த இளையவனே!
இசைபாடும் கடலோரம் கதைபேசி வளர்ந்தவனே!!
இனிய உறவுகள், இளைய நண்பர்கள் வல்வையின் வசந்தகாலம் அன்று
காலத்தின் கட்டாயம் ஊர்விட்டு உறவுவிட்டு நாடுவிட்டு தேசம்விட்டு வந்தாய்
வந்தாரை வரவேற்கும் பிரான்ஸ் மண்ணில் தஞ்சமானாய்
தங்க இடம் தந்து வேலை தந்த நாட்டுக்கு நன்றியுடையவன் ஆனாய்
உன்கடமை உனக்காக மட்டுமல்ல ஊருக்காய் உறவுக்காயென வாழ்ந்தாய்
பாசம் நேசம் கொண்டு உன் உறவுக்காய் மட்டுமல்ல ஊர் உறவும் வாழ உழைத்தாய்
உன் அன்பால் இனிய நண்பர்களைத் தேர்ந்தெடுத்தாய்
உனக்காய் உன் நண்பர்கள் அவர்களுக்காய் நீயென வாழ்ந்தாய்
வசந்தகால வாழ்விலே இனிய துணைதனைத் தேடிக்கொண்டாய்
இரண்டு மூன்றானது; ஆம் அழகு மகன் வந்தான்
வசந்தகாலம் அது இனிய காலம்
குடும்பத்துக்காய் உன் பணி தொடர்ந்தாலும் ஏழை இளைஞர்களுக்கு வழிகாட்டி ஆனாய்
உன்னால் வந்து வாழ்வோர் எத்தனை?
இன்று அத்தனை பேர் மனங்களிலும் ஆறாத வேதனை
ஆம் கக்கனே! இன்று நீ இவ்வுலகில் இல்லை
விடியலைத் தேடிப் புறப்பட்டாய் விடியாமலே இருளோடு இருளானாய் கக்கனே
கார் பவனி செய்வதில் நீயோ வல்லவன்
காலனோ உன்னை மீறி உன் உயிர் பறித்ததில் வல்லவனானான்
நினைக்க மறந்தான் காலன் உன்னை நம்பி எத்தனை பேர் வாழ்கிறார் என்று
விம்முகின்றது நெஞ்சம் விடைகிடைக்க முடியாது தவிக்கின்றது உள்ளம்
கக்கனே காலத்தின் கோலம் தென்னிந்தியாவில் உனை இழந்தோம்
காண்போமா இனி?

- நண்பர்கள்.

**அன்னை மடியில்:** 31.08.1968

**காலனின் பிடியில்:** 23.08.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ம் ஆண்டு வீரவணக்கம்

**25.09.1992 அன்று பூநகரியில்
எதிரியின் பாசறை தகர்த்து
புறநானூறு படைத்த
புலிமறவர் இவர்கள்**



**லெப். தமிழேஸ்வரன்**
கார்த்திகேசு யோகேஸ்வரன்
துன்னாலை தெற்கு,
கரவெட்டி, யாழ்ப்பாணம்



**லெப். அறிவுடையான்**
செல்லையா உதயகுமார்
பல்லவராஜன்கட்டு, முழங்காவில், மன்னார்



மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி
## லெப். கேணல் சுபன்
விநாசித்தம்பி சுந்தரலிங்கம்
கள்ளியடி இலுப்பைக்கடவை - மன்னார்



**2ம் லெப். பன்னீர் செல்வன்**
சந்தயாப்பிள்ளை அல்போன்ஸ்
டானியல்
கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்



**2ம் லெப். சுருளி**
நவரத்தினம் ரவி
அப்துல் காசிம் வீதி, 1ம் வட்டாரம்,
மூதூர், திருமலை

எமது போராளிகளிடத்தில் குடும்ப உறவின் பாசத்தைவிட வைராக்கியமும்; வீரமும்தான் அதிகமாக உள்ளது. அதனால்தான் அவர்கள் சிறந்த எம் தலைவரின் வழிகாட்டலில் பல சாதனைகள் புரிகின்றனர்.

– லெப். கேணல் சுபன்

தியாகத்தின் அடிவேரில் திரும்பவொரு
பூமலரும் பூமலர்ந்து காயாகும் புதிய
யுகம் கனிந்துவரும்

– மன்னார் மக்கள் –



**வீரவேங்கை வெடியரசன்**
இராமப்பிள்ளை, மகாலிங்கம்
ஞானிமடம், பூநகரி, மன்னார்



**வீரவேங்கை இயல்வாணன்**
முருகேசு வரதராஜன்
தென்னியன்குளம், துணுக்காய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்கெல்லாம் உபதேசம் உள்வீட்டில்..!

அமெரிக்காவின் மறுபக்கங்களுக்கு இரண்டு விதமான எதிர்வினைகள். (response என்பதற்கு எதிர் வினை முழுக்கப் பொருத்தம் தானா? எல்லா response களும் எதிரான வினைகள் இல்லையே. மறுவினை, பதில்வினை, இன்னும் வேறு ஏதாவது யோசிக்கலாமே) சிலர் அமெரிக்காவை இவ்வளவு கடுமையாக விமர்சிக்க வேண்டுமா என்றார்கள். சிலர் அப்பாடா. இதுவரை பெரிய பெரிய பத்திரிகைகள் எல்லாம் செய்யாததை நீங்கள் செய்திருக்கிறீர்களே என்று -ஓ- போட்டார்கள்.

அமெரிக்காவை பூலோக சொர்க்கம் என்றும் அமெரிக்கா எது செய்தாலும் சரிதான் என்றும் ஒரு பிரமை நமது மத்தியதர இளைஞர்கள் மத்தியில் வலுவாக இருப்பதினாலேதான் மறுபக்கங்களைக் காட்ட வேண்டியதாகிறது. ஏழை என்றும் அடிமை என்றும் அமெரிக்காவில் யாரும் இல்லை என்று எல்லாம் நினைப்பது அசட்டுத்தனம்.

வழக்கறிஞரும் மனித உரிமைக்கழகத் தலைவருமான பொ.வெ. பத்தவத்சலம் எழுதிய கடிதத்தில் -இரண்டாம் அறுவடை- என்ற அமெரிக்க சேவை அமைப்பைப் பற்றி தெரிவித்திருக்கிறார். இது ஒரு அன்னதான அமைப்பு. அமெரிக்காவில் சோறு (றொட்டி) இல்லாமல் பட்டினியில் அவதிப்படும் அமெரிக்கர்களுக்கு உணவு வழங்கி வருகிறது. பெரும் நிறுவனங்கள், தனிநபர்களிடமிருந்து நன்கொடை பெற்று உபரியாக இருக்கும் உணவைப் பசியால் வாடுபவர்களுக்கு கண்ணியம் குறையாமல், விளம்பரம் இல்லாமல் வழங்குகிறது.

அமெரிக்காவில் பட்டினியா? சோற்றுக்கு வழியில்லையா? என்று ஆச்சரியப்படுகிறவர்கள் www secondharvest.org என்ற இணையதளத்திற்கு சென்று விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

அமெரிக்க அரசாங்கத்தின் விவசாயத்துறையின் கணக்குப் படியே சுமார் மூன்று கோடி முப்பது இலட்சம். அமெரிக்கர்கள் தங்கள் அடுத்தவேளை உணவு எங்கிருந்து கிடைக்கும் என்று தெரியாத சிரம நிலையில் இருக்கிறார்கள். கடந்த ஆண்டு மொத்தம் இரண்டு கோடி 33 லட்சம் அமெரிக்கர்களுக்கு -இரண்டாம் அறுவடை- சோறு போட்டிருக்கிறது. இப்படி அவர்களிடம் அன்னதானம் பெறுவோரின் எண்ணிக்கை ஐந்து ஆண்டுகளில் 9 சதவீதமாக அதிகரித்திருக்கிறது.

இப்படி பட்டினியில் தவிப்போரில் நூற்றுக்கு 39 பேர் குழந்தைகள். 11 பேர் 65 வயதைக் கடந்தவர்கள். நூற்றுக்கு 62 பேர் பெண்கள். நூற்றுக்கு 45 பேர் வெள்ளையர்கள். 35 பேர் கறுப்பினத்தவர்.

அன்னதானத்தை நம்பி இருப்பவர்களில் 37 சதவிகிதம் பேருக்கு வேலை வாய்ப்பே இல்லை. அவர்களுக்கு உயர் நிலை பள்ளிப்படிப்புக்கூட இல்லை என்பது ஒரு காரணம். தங்கள், வறுமை, பசி அனுபவங்களை, 32000 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். உலகில் மற்ற நாடுகள் எல்லாம் அமெரிக்காவிடம் கையேந்தி நிற்கவேண்டிய நிலையில் இருப்பதாக அமெரிக்கா பிரச்சாரம் செய்கிறது. அமெரிக்காவிலோ அமெரிக்கர்கள் தங்களுக்கு தாங்களே கையேந்தும் நிலை இருப்பதை செகண்ட் ஹார்வெஸ்ட் இணையம் தெளிவுபடுத்துகிறது. அமெரிக்காவிற்கு போய்விட்டால் வசதியாக வாழ்ந்துவிடலாம் என்று வெளிநாட்டில் பலரும் நம்புகிறார்கள். ஆனால் அமெரிக்காவில் இருந்துகொண்டே வசதியாக வாழ முடியாத அமெரிக்கர்கள் சுமார் 30 சதவிகிதம் என்று வாசுஷிங்டனில் இருக்கும் எகனாமிக் பாலிசி இன்ஸ்ரியூட்டின் ஆய்வு சொல்கிறது.

அமெரிக்காவில் ஒரு கடைக்குமாஸ்தா, ஒரு வீட்டு வேலைக்காரி, ஒரு நர்ஸிங் கோம் உதவியாளர், ஒரு ஹோட்டல் எடுபிடி, போன்ற அடிமட்ட வேலைகளில் இருப்பர்களின் வாழ்க்கை எப்படி இருக்கிறது? வீட்டில் வீடியோ, இன்டர்நெட், யாலியாக சொகுசுக்கார் பயணம் என்பதெல்லாம் இவர்களுக்கு கிடையாது. இன்னும் சொல்லப் போனால் இவர்களுக்கு வீடே கிடையாது, கிடைக்காது.

இவர்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று அறிவதற்காக பத்திரிகையாளர் பார்பரா ஹெரென்ரிக் சென்றார். நம்ம ஊர் மாதிரி சித்தாள். பூக்காரிகளிடம் பத்துக் கேள்விகள் கேட்டு பேட்டி எடுக்கவில்லை பார்பரா. தானே வீட்டு வேலைக்காறியாக, ஹோட்டல் எடுபிடியாக, கடை குமாஸ்தாவாக வேலை பார்த்தார். மூன்று

## அமெரிக்காவில் பட்டினி கிடப்பது யார்?

மாதங்கள், மூன்று வெவ்வேறு அமெரிக்க நகரங்களில் இப்படி வேலை செய்தார். கையில் வேறு பணமோ, 'கிரடிக்காட்டோ' வைத்துக் கொள்ளவில்லை. வாரக்கூலியாக கிடைக்கும் பணத்தில் தான் வாழ்வது என்ற முடிவுடன் இப்படி மூன்று மாதங்கள் வாழ்ந்தார். ஒரு மணி நேர வேலைக்கு 7 டொலர் கூலி என்ற அளவுக்கு மேல் அவருக்கு எங்கேயும் சம்பளம் கிடைக்கவில்லை. இந்தக் காசில் தினசரி சமைத்துச் சாப்பிடப் பொருட்கள், எரிவாயு எதுவும் வாங்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக வீட்டு வாடகை தரமுடியவில்லை.

இவர்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று அறிவதற்காக பத்திரிகையாளர் பார்பரா ஹெரென்ரிக் சென்றார். நம்ம ஊர் மாதிரி சித்தாள். பூக்காரிகளிடம் பத்துக் கேள்விகள் கேட்டு பேட்டி எடுக்கவில்லை பார்பரா. தானே வீட்டு வேலைக்காறியாக, ஹோட்டல் எடுபிடியாக, கடை குமாஸ்தாவாக வேலை பார்த்தார்.

நடமாடும் உணவு விடுதியாக இருக்கக்கூடிய வாகனங்களில் வாரத்திற்கு 250 டொலர் வாடகை என்ற அடிப்படையில் காரில் குடியிருந்தார். டிரெயிலர் வண்டிகள் (வாகனங்கள்) வீடுகளாக வாடகைக்கு விடப்படுகின்றன. வாடகை மாதத்திற்கு 625 டொலர்.

பார்பரா கூட வேலை பார்த்தவர்கள் எப்படி சமாளிக்கிறார்கள்? தினசரி முதலில் எட்டு மணி நேரம் ஒரு வேலை. அடுத்து ஆறு மணி நேரம் வேறு வேலை. குடும்ப வாழ்க்கை, குழந்தைகளுடன் கொஞ்சுவது என்பதற்கெல்லாம் வழியே கிடையாது. தங்களுக்கு குடியிருக்க வீடு இல்லையே என்று கவலைப்படுவதில்லை. இரவு படுத்துத்தூங்க ஒரு காரோ, வானோ கிடைத்தால் திருப்திதான். மருத்துவ இன்சுரன்சுக்கு மாதம் 100 டொலர் கட்ட முடியாததால் பலருக்கு மருத்துவ வசதியும் கிடையாது.

அமெரிக்க அரசு வறுமைக்கோடு என்பது எப்படி நிர்ணயித்திருக்கிறது தெரியுமா? நான்கு பேர் உள்ள குடும்பத்திற்கு தேவையான குறைந்தபட்ச உணவின் விலையைப்போல மூன்று மடங்கு தொகைக்கு குறைவாக ஆண்டு வருவாய் இருந்தால் அதுதான் வறுமை. அதாவது 17,643 டொலர்கள் சம்பாதித்தால் வறுமைக் கோட்டுக்கு மேலே வந்து விடுவார்கள். ஆனால் பார்பராவும் எகனாமிக் பாலிசி நிலைய ஆய்வும் கண்டுபிடித்த விசயம் என்னவென்றால் நான்கு பேர் கொண்ட குடும்பம் ஆண்டு வருமானமாக 33511 டொலர்கள் சம்பாதித்தாலும் அதற்கு அடிப் படையான விசயங்கள் எல்லாம் கிடைப்பதில்லை என்பது தான்.

பார்பரா மூன்று மாதம் ஒரு சாதாரண தொழிலாளியாக வாழ்ந்து தான் சந்தித்த அனுபவங்களை நிக்கலரைன்ட் ரைம் (Nickel and dimed) என்ற தலைப்பில் புத்தகமாக எழுதியிருக்கிறார். (ஹென்றி கோல்ட் வெளியீடு) -விலை மதிப்பற்ற தன் உழைப்பை விற்கும் ஒருவரை மிகவும் கீழ்த்தரமானவராக இழிவானவராக உணர வைப்பதாகத்தான் நிலைமை இருக்கிறது, என்கிறார் பார்பரா. இது தான் மக்களின் அமெரிக்கா. அரசாங்கத்தின் அமெரிக்கா வேறு, அமெரிக்கா அரசாங்கம் என்பது வேறு. அது தன்னுடைய இராணுவ மேலாதிக்கத்திலும் பெரும் வர்த்தகர்களின் நலனையும் வளர்ப்பதிலேயே அக்கறையுடன் இருக்கிறது.

உலக நாடுகளின் பொது முடிவுகளுக்கு கூட கட்டுப்படுவதில்லை. அண்மையில் உலக குற்றவியல் நீதிமன்றத்தின் உடன்படிக்கையை ஏற்க மறுத்து விட்டது. இந்த உடன்படிக்கைப்படி ஐ.நா.சபை குறிப்பிடும் தனிநபர்களைக் கூட கிரிமினல் குற்றவாளிகளாக விசாரிக்கலாம். கிளிங்டன் செனட்டுக்கு அனுப்பிய இந்த சம்மத மசோதாவை புஷ் அரசு வாபஸ் வாங்கிவிட்டது. இந்திய பகுதியில் தன் இராணுவ நடவடிக்கைகளை விரிவு படுத்துவதில் தான் இப்போது அமெரிகாவின் அக்கறை. இந்திய இராணுவத்துடன் கூட்டு நடவடிக்கை, பயிற்சி என்ற பெயரில் இந்தியாவில் அமெரிக்க இராணுவத்தின் நடமாட்டம் அதிகரிக்கிறது. சென்னைத் துறைமுகத்தில் அமெரிக்க கப்பல் வந்திருந்தபோது அனுமதியின்றி கல்பாக்கம் மீது அதன் விமானங்கள் பறந்து வேவு பார்த்தன.

விசோராமில் உள்ள இந்திய இராணுவத்தின் வன யுத்தப் பயிற்சிப் பள்ளிக்குள் இதுவரை அந்நிய நாட்டினரை அனுமதித்ததில்லை. இப்போது அமெரிக்கர்களுக்கு அனுமதி அளிக்க பி.ஜே.பி. அரசும் பரிசீலனை செய்கிறது. அந்தமானில் அமெரிக்க கடற்படைத் தளம் அமைப்பது பற்றி இந்திய அரசுடன் பேச்சு நடத்துகிறது. காஸ்மீரின் எல்லைக்கோட்டுப் பகுதியில் மின்னணு சாதனங்கள் செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தி உளவு பார்ப்பதற்கான சாதனங்களைத் தரும்படி அமெரிக்க இராணுவத்தின் கண்ட்ராக்டரைக் கேட்பதற்காக நமது இராணுவ மந்திரி ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அமெரிக்காவிற்கே போய் வந்தார். தன்னுடைய இராணுவ பொருளாதார ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதற்காக மற்ற அரசுகளுடன் அமெரிக்கா கூட்டு வேலை செய்கிறது. தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்காக அமெரிக்காவின் ஏழைகளுடன் உலகத்தின் ஏழைகள் கூட்டுச்சேர வேண்டும்.

*நன்றி: தீம்தரிகிட*

'எப்பொழுதுமே மலிவு விலை'



ரதி ஜுவெலர்ஸ்

OPEN: Mon - Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
7 Days a Week Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.


28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL
Tel: 020-2903 3063
Fax: 020-2903 9711

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெனிஸ்

# ஐக்கிய அமெரிக்கக்கிண்ணம்

கடந்தவாரம் நடைபெற்ற ஐக்கிய அமெரிக்கக்கிண்ண ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் பெற்சம்றாஸ் தனது நாட்டைச் சேர்ந்த அதிரடி ஆட்டக்காரரான



ஆண்திறே அகசியை 6:3, 6:4, 5:7, 6:4 எனும் நிலையில் வெற்றி பெற்றார். இது இவரிற்கு ஐந்தாவது அமெரிக்க வெற்றிக்கிண்ணமாகும் என்பதுடன் பெரிய சுற்றுக்களின் (Grand chelem) தொடரில் பதின்நான்காவது வெற்றியும் ஆகும். முதல் இரண்டு செற்றிலும் இலகுவான வெற்றியைப் பெற்ற சம்றாஸ் மூன்றாவது செற்றில் அகசியிடமிருந்து பலத்த எதிர்ப்பினைப் பெற்றதுடன் 5:7 எனும் நிலையில் தோல்வியும் அடைந்தார். இருந்தாலும் நான்காவது செற்றில் தன்னைச் சுதாகரித்துக்கொண்ட சம்றாஸ் 6:4 எனும் நிலையில் வெற்றிபெற்றதுடன் சுற்றினையும் வென்றார்.

இதுவரை சம்றாஸ் வெற்றிகொண்ட பதின்நான்கு பெரிய சுற்றுக்களின் (Grand Chelem) விபரம்

**விம்பிள்டன் - இங்கிலாந்து**

1993 - எதிர் ஜிம் குறியேர் 7:6, 7:6, 3:6, 6:3
1994 - எதிர் இவனெசெவிக் 7:6, 7:6, 6:0
1995 - எதிர் வொறிஸ் வெக்கர் 6:7, 6:2, 6:4, 6:2
1997 - எதிர் பியோலின் 6:4, 6:2, 6:4
1998 - எதிர் இவனெசெவிக் 6:7, 7:6, 6:4, 3:6, 6:2
1999 - எதிர் அகசி 6:3, 6:4, 7:5
2000 - எதிர் ரப்ரர் 6:7, 7:6, 6:4, 6:2

**அமெரிக்கக்கிண்ணம்**

1990 - எதிர் அகசி 6:4, 6:3, 6:2
1993 - எதிர் பியோலின் 6:4, 6:4, 6:3
1995 - எதிர் அகசி 6:4, 6:3, 4:6, 7:5
1996 - எதிர் சங் 6:1, 6:4,7:6
2002 - எதிர் அகசி 6:3, 6:4, 5:7, 6:4

**அவுஸ்திரேலியக் கிண்ணம்**

1994 - எதிர் மாற்றின் 7:6, 6:4, 6:4
1997 - எதிர் மொயா 6:2, 6:3, 6:3

இத்தனை பெரு வெற்றியையும் தன்னகத்தே கொண்ட சம்றாஸ் நான்காவது பெரிய சுற்றான (Grand Chelem) பிரான்சின் றோலண்ட் கறோசை இதுவரை வெற்றி கொள்ளவில்லை என்பது கோடிட்டுக் காட்டக்கூடியது ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் எந்த வெற்றியையும் பெறாது துவண்டு போயிருந்த சம்றாசிற்கு இவ் வெற்றியானது புதுத் தெம்பையும், உத்வேகத்தையும் அளித்துள்ளது.

- ஜே. ஜே

# நடுவர் இடைநிறுத்தம்

ஈகுவற்றோரின் முன்னணி நடுவரும், கடந்த உலகக்கிண்ண இறுதிச்சுற்றின்போது பெரும்பாலான ஊடகங்களின் விமர்சனத்திற்கும் உள்ளான வைறோன் மொறெனோ (Byron Moreno) ஈகுவற்றோர் உதைபந்தாட்ட நடுவர் சங்கத்தினால் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். கடந்த 08.09.2002 அன்று ஈகுவற்றோர் சம்பியன் தொடரில் பார்சலோனா குயாகில் - லீக் குயிற்றோ அணிகளிடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஆறு நிமிடங்கள் மேலதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலையில் பன்னிரண்டு நிமிடங்கள் கொடுத்ததன் மூலம் குயிற்றோ அணியினர் 4:3 எனும் நிலையில் வெற்றி பெற்றனர். ஆட்டத்தின் 90வது நிமிடம் 3:2 எனும் நிலையில் முன்னணி வகித்த குயாகில் அணியினர் ஆறு நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டதனாலேயே 3:4 எனும் நிலையில் தோல்வி அடைந்தனர். இச் செய்கை தமது நாட்டின் உதைபந்தாட்டத்தின் மேன்மைக்கு களங்கம் விளைவித்துவிட்டதாக ஈகுவற்றோர் உதைபந்தாட்டக் குழுத் தலைவர் பற்றிசியோ விற்றேறி (Patricio viteri) கூறியுள்ளார்.

இவர் கடந்த உலகக்கிண்ணப் போட்டியில் தென்கொரியா-இத்தாலியிடையே நடைபெற்ற ஆட்டத்தில் இத்தாலியின் அணித் தலைவர் ரொற்றி வெளியேற்றத்துடன் வியாறி அடித்த கோலையும் இரத்துச் செய்ததோடு தென்கொரியாவின் 2:1 எனும் வெற்றிக்குக் காரணமானவர் என ஊடகங்களின் வன்மையான விமர்சனத்திற்கு உள்ளானவர் ஆவார். இந் நடுவர் ஒக்டோபர் மாதம் நடைபெறும் உள்ளூராட்சி தேர்தலில் வெற்றிபெற்ற அணியின் இடமான குயிற்றோவின் வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.



# றொனால்டோ - லூயிஸ்வன் கல் சொற்போர்

ஸ்பெயினின் பார்சலோனா அணியின் பயிற்றுனரான நெதர்லாந்தைச் சேர்ந்த லூயிஸ் வன் கல் `றொனால்டோ இன்ரர்மிலான் அணியில் பற்றற்றவராக இருந்தமயினாலேயே றியல் மட்றிட் அணிக்கு மாறுவதற்கு அனுமதிக்கப்பட்டார்' என்று கூறியதை அடுத்து ஸ்பெயினின் வானொலி ஒன்றிற்கு பேட்டி அளித்த றொனால்டோ' லூயிஸ்வன் கல் இதற்கான பதிலை மைதானத்தில் பெற்றுக்கொள்வார்.

இன்ரமிலானில் நான் பெற்ற பணத்தைவிட இங்கு (றியல் மட்றிட்) குறைவாகக் கிடைத்தாலும் நான் கவலைப்படமாட்டேன். இங்கு நான் சந்தோசமாக இருக்கின்றேன். எனது பிரகாசமான எதிர்காலத்தை மீண்டும் இங்கு நான் காண்கின்றேன். ஆதலால் மீண்டும் கூறுகின்றேன் றொனால்டோ யார் என்பதை வன்கல் இற்கு எதிர்காலத்தில் விரிவாகப் புகட்டுவேன்' என்று கடந்த உலகக் கிண்ண நாயகன் றொனால்டோ கூறியுள்ளார்.




# பெண்கள் ஒற்றையர் ஆட்டம்

பெண்கள் ஒற்றையர் ஆட்டமும் நூறு விகிதம் அமெரிக்கனின் ஆதிக்கமாகவே இருந்தது என்பதுடன் இவ் இறுதியாட்டம் குடும்ப ஆட்டமாகவே இருந்தது. அதாவது அக்கா, தங்கையிடையே நடைபெற்றது.



இவ்விறுதி ஆட்டத்தை தங்கை செறினா வில்லியம்ஸ் 6:3, 6:4 எனும் நிலையில் அக்கா வீனுஸ் வில்லியம்ஸ் ஐ வெற்றிகொண்டார். இவ்வாண்டு பிரான்சின் றோலண்ட் கரோஸ், இங்கிலாந்தின் விம்பிள்டன் கிண்ணங்களைத் தனது அக்காவுடனான இறுதி ஆட்டங்களிலேயே வெற்றி கொண்டதோடு அமெரிக்கக் கிண்ணத்தையும் இவ்வாண்டு அதே முறையிலேயே வெற்றி கொண்டார். ஒரு ஆண்டில் பெண்கள் பெரிய சுற்றில் (Grand Chelem) இதுவரை மூன்று கிண்ணங்களை வெற்றிகொண்டவர்கள் ஜேர்மனியின் ஸ்ரெபிகிராபும், அமெரிக்காவின் மாற்றினா நவரத்திலோவாவும் ஆவார்கள். அந்த வரிசையில் இவ்வாண்டிற்காக அமெரிக்க கிண்ணத்தை வெற்றிகொண்டு செறினா வில்லியம்ஸ்சும் இணைந்து கொண்டார். இவ்வாண்டு ஆரம்பத்தில் ஆஸ்திரேலியக் கிண்ணத்தையும் வெற்றி கொண்டதன் மூலமே இச்சாதனையாளர் வரிசையில் இணைந்துகொண்டார். 1999ம் ஆண்டு தனது பதினேழாவது வயதில் முதன் முதலாக அமெரிக்கக் கிண்ணத்தை வெற்றிகொண்ட செறினா உலக தரத்தில் இன்று முதலிடத்தில் உள்ளார்.

வோல்த்தம்ஸ் ரோவில் இரண்டாவது வருடத்துக்குள்
எட்ட நின்றாலும்
கிட்ட வந்தாலும்
அதே மாறா
அழகு தரும் நகைகள்
தங்க நகைகளுக்கான
தனியான ஓர் மாளிகை
ATN Jewellery
ATN Jewellery
37, Palmerston Road, E17 6PR
Tel: 020 8521 9767
Fax: 020 8521 1281
வாரம் [illegible] காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்

Pub.Lon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் பொதுத் தேர்தலில் இடதுசாரிக் கூட்டணி வெற்றி

ஜேர்மன் பொதுத் தேர்தலில் ஆளும் S.P.D. குருணன் கட்சிகளின் இடதுசாரிக் கூட்டணி வெற்றியடைந்துள்ளது. இருப்பினும் கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற பெரும்பான்மையையும் விட மிகக் குறைவான பெரும்பான்மையையே அக்கூட்டணி பெற்றுள்ளது.

S.P.D., குருணன் கூட்டணி 306 தொகுதிகளிலும் CDU, LSU, FDP கூட்டணி 295 தொகுதிகளிலும், PDS கம்யூனிஸ்ட் கட்சி 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. மிகக் குறைவான- அதாவது பதினொரு தொகுதிகள் அதிகமாகவே ஆளும் கட்சி வெற்றியடைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. நட ஈ கட்சி தனித்து 255 தொகுதிகளிலும் LDU LSU கூட்டணி தனித்து 248 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் 1998-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது SPD தனித்து 298 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. அக்கட்சி இம்முறை பொதுத்தேர்தலில் 43 தொகுதிகளை இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கிழக்கு ஜேர்மனியில் உருவாகிய PDS என்ற கம்யூனிஸ்ட் கட்சி இந்தத் தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளது. 1998ம் ஆண்டு பொதுத் தேர்தலில் இக்கட்சி 37 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. ஆனால் இம்முறை பொதுத்தேர்தலில் நான்கு வீத வாக்குகளையே அக்கட்சி பெற்றுள்ளது. அதனால் விகிதாசார பிரதிநிதித்துவம் அக்கட்சிக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் விருப்பு வாக்குகளின் மூலம் இரண்டு பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

இப் பொதுத் தேர்தலில் அரசுக் கூட்டணிக் கட்சியாகிய குருணன் கட்சி 2 வீதம் கூடுல் வாக்குகளைப் பெற்றுள்ளது. இக்கட்சியின் தலைவர்களில் ஒருவரும் வெளிநாட்டமைச்சருமான திரு. பிஸ்ஸர் `சுப்பர் ஸ்டார்' எனச் செய்தி ஊடகங்களினால் வர்ணிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் கூட்டணியின் வெற்றி குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி ஜேர்மன் பிரதமர் திரு. சுரேடேயுக்கு முதன் முதலில் வாழ்த்துத் தெரிவித்தார்.

(வீ.ஆர்.வ)

# ஜேர்மன் நகரில் இயேசு ஜீவிக்கிறார் சுகமளிக்கும் கூட்டங்கள்

`வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே !
நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்
என்றார் இயோசுகிறிஸ்து'

**செய்தியாளர்:**

Dr.இ. இராஜேந்திரம் அவர்கள் இயேசு ஜீவிக்கிறார் பணியில் இலங்கையிலும், இந்தியாவிலும், உலகின் பல பாகங்களிலும் தெய்வீக அருள் பெற்ற தேவ ஊழியன். இவரின் ஜெபத்தினால் ஆயிரக்கணக்கானோர் விடுதலையையும், சமாதானத்தையும், சுகத்தையும் பெற்று உள்ளனர். உங்கள் கண்ணீர், நோய், துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுதலையையும் சமாதானமும் பெற்றுக்கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறார்கள் ஆலயத்தினர்.

## கூட்ட விபரங்கள்

24 செவ்வாய் - மாலை 6 மணியளவிலும்
29 ஞாயிறு - காலை 9.30 மணியளவிலும்
Zum Vogelgesang-2 Saarbrücken - Ensheim இலும்
27 வெள்ளி மாலை 6 மணியளவில் Glssbrucke 2, Turnhalle, Heldenheim - Weiseenburg. நகரிலும் நடைபெறும்.
28 சனி-மாலை 5 மணியளவிலும் Olgerstr-37 a, Heilbroon னிலும் நடைபெறும்.
29 ஞாயிறு மாலை 3.30 மணியளவில் Gymnaslumstr 82, Heilbroon னிலும் நடைபெறும்.

**தொடர்புகளுக்கு போதகர், தர்மா**
**Tel: 06374-70414 0172 - 6807899**

ஞாயிறுதோறும் Gymnaslumstr 82, Heilbroon ல் மாலை 5 மணிக்கும் Zum Vogelgesang-2 Saarbrucken - Ensheim ல் காலை 11 மணிக்கும் நடைபெறும். Pub.

# கடை விற்பனைக்கு

நல்ல நிலையில் வியாபாரம் நடக்கும் Telephone Card கடை உடனடியாக விற்பனைக்குண்டு.

**உடன் தொடர்பு கொள்ளவும்**
T.P: 01 43 49 33 46
G.S.M - 06 64 81 68 86
224, Rue de Belleville, 75020 Paris.
Mo: Telegraph - Bus - 60

(36ம் பக்கத் தொடர்ச்சி)

**புலிகளின் கைகளில்....**

லாந்தில் முதல் கட்டப் பேச்சு சுமுகமாக நடைபெற்றது. அவ்வாறு இனி வரும் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று கூற முடியாது. பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் போராட்டம் தொடரும் என்பதை அரசாங்கம், அரசியல் சக்திகள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியன உணர்ந்து இருக்க வேண்டும் என்று தனதுரையில் தெரிவித்தார்.

இதேவேளை, சட்டத்தரணியும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை உறுப்பினருமான கா.சிவபாலன் பேசும் போது, இருபது வருட காலத்தின் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமானதற்கு விடுதலைப் புலிகளும் அவர்களின் படைப்பலமும் தான் காரணம். புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசுடன் செய்து கொண்டதன் மூலம் சிவில் மனித உரிமை அமைப்புக்களால் செய்ய முடியாத ஒன்றை விடுதலைப் புலிகள் சாதித்துள்ளனர். அது தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருப்பதாகும்' என்று தெரிவித்தார்.

# ஹாட்லிக் கல்லூரி அதிபர் கடத்தப்பட்டு தாக்குதல்

(23.09.02)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம்.சிறீபதி இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் 15 பேரடங்கிய கும்பல் அவரது வீட்டில் சென்று அவரை பலவந்தமாக இழுத்துச் சென்று தாக்கியுள்ளது.

வீட்டுக்கு வெளியே நின்றவாறு அடாவடித்தனம் புரிந்த கும்பலில் இருவர் வீட்டின் கூரைமீது ஏறி ஓடுகளைக் கழற்றி அவ்வழியாக வீட்டுக்குள் இறங்கினர். மறைந்து கொண்டிருந்த அதிபரை பலாத்காரமாக இழுத்து, அவரது கண்களைக் கட்டிய பின்னர் அவரை புலோலிப் பகுதியில் உள்ள கருகம்பன் மயானத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு வைத்து கொலை செய்யப் போவதாக மிரட்டிய அக் கும்பல் அவரை தடிகள், பொல்லுகளால் தாக்கியுள்ளது.

# Restaurant விற்பனைக்கு

45 இருக்கைகொண்ட Restaurant விற்பனைக்குண்டு.
அலுவலக ஊழியர்கள் நிறைந்த இடம் (Quatier Bureaux)
இந்தியன் அல்லது Pizza Restaurant க்கு உகந்த இடம்.
M°: Marx Dormoy

**தொடர்புகளுக்கு:**
**0142092011/**
**0609403015**

(36ம் பக்கத் தொடர்ச்சி)

**என்னைக் கொல்ல....**

இத்தகைய அதிகாரத்தை பறித்தால் போர் ஏற்படும் போது இராணுவத்தை கட்டுப்படுத்துவது, உத்தர்விடுவது யார்.

இவ் அதிகாரப் பறிப்புக்களின் இறுதியில் என்னை இந்திரா காந்தி கொல்லப்பட்டது போல் கொல்வதற்கு ரணில் விக்கரமசிங்க அரசு திட்டம் தீட்டியுள்ளது. அவர்கள் என்னைக் கொல்ல முயன்றாள் திருப்பித் தாக்குவேன். ஒரு பூனைக்குட்டிபோல் உயிரிழக்க மாட்டேன். அதற்கு முன் 500 பேரை நான் கொல்வேன் என்று தனது உரையில் ஆவேசமாகக் கூறினார். அண்மைக்காலமாக சிறீலங்காவின் ஜனாதிபதி பங்குகொள்ளும் கூட்டங்களில் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# மரண அறிவித்தல்

## அமரர் ச. மா சேதுகாவலர்

(இளைப்பாறிய பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் - வடமாகாணம்)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ச.மா. சேதுகாவலர் அவர்கள் 29.08.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து, சரஸ்வதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமை மகனும், துரைசுவாமியின் பெறாமகனும், விமலாஜீவ தேவியின் அன்புக் கணவரும், ஜீவானந்தி (செலான் வங்கி), இந்திரா பிரியதர்சினி (ஜோன் கீல்ஸ் கொம்பியூட்டர் சேர்விஸஸ்), ஸ்ரீகாயத்திரி (டெஸ்கோ - லண்டன்), கோபன் ச. சேதுகாவலர் (வெஸ்ட் மின்ஸ்டர் பல்கலைக்கழகம்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஹண்டி ராஜகாரியர், வீரலக்குமி ஆகியோரின் மருமகனும், மனோகரன் (லண்டன்), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், அமரகுலேஸ்வரி (கனடா), ஸ்வரூபராணி (லண்டன்), காலஞ்சென்ற சர்வேஸ்வரன், ரஞ்சினி (அவுஸ்திரேலியா), ராஜலக்ஷிமி (அவுஸ்திரேலியா), புனிதவதி (அவுஸ்திரேலியா) அருமைச் சகோரனும் கமலா, அமிர்தன் ராஜகாரியர் (லண்டன்), கந்தசாமி (கனடா), காலஞசென்ற கலாநிதி சிவனேசன், டாக்டர் ராஜபாலேந்திரன் (அவுஸ்திரேலியா), சாந்தகுமார் (அவுஸ்திரேலியா), ஜனார்தனன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். சிவமுத்துலிங்கம் (இளைப்பாறிய பிரதிப்பணிப்பாளர், விவசாயத்திணைக்களம்), முத்துராசா (இளைப்பாறிய பொறியியல் ஆலோசகர் - மலேசியா/அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் 01.09.02 , ஞாயிற்றுக்கிழம கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்: சாந்தகுமார் 61 3 9893 7470

*Wembley* மாநகரில் பிரமாண்டமான காட்சி அறையுடன்

# ஓவியா Entertainment

**தமிழ், ஆங்கில, கிந்தி திரைப்படங்கள் DVD, Video CD and Magazine,**
**ஐங்கரன் வெளியீடுகள் அவர்கள்**
**வெளியிடும் அதே தினத்தன்று**
**எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். Tel: 02087953003**



*ஓவியா Entertainment*
**14 Ealing Road**
**Wembley, Hao 4TL**

**www.oviyavideo.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126
Pub

# வடக்கு - கிழக்கை புனரமைக்க சீனா உதவத் தயார்

## வன்னியில் தமிழ்ச்செல்வனுடன் சீனத் தூதுவர் சந்திப்பு

[22.09.02]

சிறீலங்காவிற்கான சீனாவின் தூதுவர் ஜியாங் கிங் சாங் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுகள் நடத்தியுள்ளார். இதன் போது போரினால் அழிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு பகுதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கு சீனா உதவுவதற்கு தயாராக உள்ளதாக தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் நடுவப் பணியகத்தில் வியாழனன்று நண்பகல் 11.30 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் சீனத் தூதுவருடன் அவரது மனைவி மற்றும் அவரது செயலாளர் சூயான் ஆகியோரும் புலிகள் சார்பில் தமிழ்ச்செல்வனுடன் அரசியல்துறையைச் சேர்ந்த தொல்காப்பியன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின் போது, சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆரம்பமாகியுள்ள சமாதானப் பேச்சுகள் ஆராயப்பட்டதுடன் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு சீன அரசு வழங்கவுள்ள உதவிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. நியூயோர்க்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த சீன வெளிவிவகார அமைச்சர் ராங் ஜியா சான், தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு சீனாவின் ஆதரவைத் தெரிவித்த மறுநாள் வன்னியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.



இதேவேளை இச்சந்திப்பின் போது, வடக்கு - கிழக்கில் போரினால் அழிந்துபோயுள்ள பிரதேசத்தைப் புனரமைக்கும் கட்டுமானத்துக்கு சீனா உதவத் தயாராக இருக்கின்றது என்று சீன நாட்டுத்தூதர் ஜோ'ன் குவாங் தெரிவித்துள்ளார். அரசியல் துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வனிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். தூதரகச் செயலாளர் யூ மற்றும் திட்டக் குழுவினருடன் வருகைதந்த அவர் தமிழ்ச்செல்வனுடன் பல மணி நேரம் கலந்துரையாடினார். தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு சீனாவின் முழு ஆதரவு உள்ளதென்றும் சமாதான முயற்சிகள் நிச்சயம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை சீனாவுக்கு உண்டு என்றும் தூதர், தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார்.

## புலிகளின் கைகளில் ஆயுதம் இருக்கும் வரை தமிழரை ஏமாற்ற முடியாது

### - கூட்டணி செயலர் சம்பந்தன் தெரிவிப்பு -

[22.09.02]

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி ஆள முடியாது என்பதை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக் காட்டியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதை எவரும் மறுக்க முடியாது. விடுதலைப் புலிகளின் கைகளில் ஆயுத பலம் இருக்கும் வரை நாம் ஏமாற்றப்படமாட்டோம். விடுத்லைப் புலிகளின் ஆயுத பலம் தக்கவைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை மாலை மூதூர் சேனையூர் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் போராளிகள் கனரக ஆயுதப்பயிற்சி பெற்று வெளியேறும் நிகழ்வில் சிறப்புரையாற்றிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை மூலம் நீதியான, முறையான அடித்தளத்தில் சில கொள்கைகளின் அடிப்படையில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு வருவதற்கு எமது ஆயுத பலம் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும். சமாதானத் தீர்வு காண்பது என்பது நீண்டதூரப் பயணமாகும். இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது. தாய்

[☞ பக்கம் 35]

## என்னைக் கொல்ல முயன்றால் 500 பேரை நான் கொல்வேன்

### சிறீலங்காவின் ஜனாதிபதி கூறுகிறார்!

[23.09.02]

இந்திரா காந்தி கொல்லப்பட்டது போல் என்னைக் கொல்வதற்கு ரணில் விக்கரமசிங்க அரசு சதி செய்கின்றது. என்னைக் கொலை செய்தால் அதற்கு முன் 500 பேரை நான் கொல்வேன் என்று சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார். கண்டிக்கு அருகேயுள்ள பகுதி ஒன்றில் நடைபெற்ற நினைவு நாள் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சந்திரிகா ஆவேசமாக இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ரணில் விக்கரமசிங்க தலைமையிலான அரசு எனது அதிகாரத்தை பறிக்க திட்டமிட்டுள்ளது. இராணுவத்தை கட்டுப்படுத்தும் ஜனாதிக்கு இருக்கும் அதிகாரத்தை பறித்து நாடாளுமன்றத்திற்கு வழங்க முயல்கின்றார்கள்.

[☞ பக்கம் 35]

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 020 8423 6321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org